கல்கி



KALKI ஜூலை 22 1956 4 அணா

மணம் கமழும் முறையில்
உங்கள் சருமத்தை இன்று நீங்கள்
ஆரோக்கியத்துடன் வைத்திருக்கலாம்.
அத்தகைய சிறப்பு உள்ளது

ப்ரீஸ்



இராஸ்மிக் தயாரிப்பான "ஹைார் ரூபயே" நிகழ்ச்சியைக் கேளுங்கள். ரேடியோ சிலோன் ஹிந்தி ஸர்வீஸ், சனிக்கிழமைதோறும் இரவு 8-30 மணிக்கு.

கல்கி



பொருளடக்கம்


மலர் 15 இதழ் 31

துன்முகி ஆடி 7

திலகர் நூற்றாண்டு இதழ்

ஜூலை 22, 1956

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



பால கங்காதர திலகர் நட்ட சுதந்திரச் செடிக்கு, காந்திஜி தண்ணீர் ஊற்றி வளர்த்து மரமாக்கினர்.
இன்று அது மக்களுக்குச் <u>சுதந்திரக்</u> கனியாகப் பலன் <u>தருகிறது</u>.



மலர் 15 | இதழ் 51

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ஆடி 7

திலகர் பெருமான் திருவிழா!

வான வீதியில் மங்காத ஒளியுடன் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் மாபெரும் ஜோதி! மனித குலத்தில் குன்றாத புகழ்பெற்ற பாரத வீரர்! முப்பது கோடி மக்களின் சுதந்திர வாழ்வுக்கு அஸ்திவாரம் அமைத்த அரும் பெரும் தீரர்! பாரத அன்னையின் தவப் புதல்வர்களின் வரிசையில் திலகமாக விளங்கும் மகா புருஷர்!

இத்தகைய பெருமை வாய்ந்த திலகரின் ஜயந்தி வைபவத்தை நாளைய தினம் பாரத மக்கள் யாவரும் தேசமெங்கிலும் குதூகலமாகக் கொண்டாடி மகிழ்வார்கள்.

நூறு ஆண்டுகளுக்கு முன் பாரத புண்ணிய பூமியில் அவதரித்த லோகமான்ய பால கங்காதர திலகர் கோடிக்கணக்கான பாரத மக்களின் மனத்தில் நிரந்தரமாகக் கோயில் கொண்டுள்ளார்!

கண்ணபிரான் அவதரித்த உடனேயே அதர்ம உருவமான கம்சனின் வாழ்வு கடைசிக் கட்டத்தை அடைந்தது போலவே, திலகர் பெருமான் பிறந்த உடனேயே பாரத நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதி அத்தியாயம் தொடங்கி விட்டது.

ஏனெனில், திலகர் பிறந்த மறுவருஷத்தில், அதாவது 1857-ல் இந்தியாவிலேயே முதலாவது சுதந்திர யுத்தம் ஆரம்பமாயிற்று.

சரித்திரப் புகழ் பெற்ற அந்தப் போரில் பங்கு எடுத்துக் கொண்ட நானாசாகிப், ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய், தாந்தியா தோபே, குமாரசிம்மன் போன்ற வீரர்களும் வீராங்கனைகளும் காட்டிய வீரதீர பராக்கிரமச் செயல்களும், தியாகமும் இளம் திலகரின் இதயத்தில் சுதந்திரக் கனலைத் தூண்டி விட்டன.

அந்தத் தீ கோடிக்கணக்கான பாரத மக்களின் மனத்திலும் கொழுந்து விட்டெரியும்படி செய்த தனிப் பெருமை திலகருக்கே உரியது.

இந்திய அரசியலில் பார்த்தனுகத் திகழ்ந்த திலகர் தமது இணையற்ற சொல் அம்புகளால் பிரிட்டிஷ் ஆட்சிக் கோட்டையைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து அதன் வலிமை குன்றும்படி செய்து விட்டார். திலகரின் தீரத்தையும் திறமையையும் சுதந்திர ஆவேசத்தையும் கண்ட காந்தி மகான் லோகமான்யரைப் பற்றிக் கூறியிருப்பதைக் கேளுங்கள்:

"அன்னிய ஆட்சியிலும் அடிமைத்தனத்திலும் உழன்று அதிலிருந்து மீள வழி தெரியாமல் திகைத்த மக்களுக்கு வழிகாட்டிய தலைவர் திலகர்தான். எனவே, அவரை மக்கள் கண்கண்ட கடவுளாகக் கருதினார்கள். திலகரின் வாக்கு மக்களுக்கு வேத வாக்காக இருந்தது. திலகருக்கு உயிர், உடைமை, மதம் எல்லாம் தேசபக்தி ஒன்று தான். ஏழு கடல்களையும் வென்று ஆயுத வலிமையுடன் விளங்கிய பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் எல்லோரும் அஞ்சிக்கிடந்த காலத்தில், திலகர் வீறு கொண்டெழுந்து அஞ்சா நெஞ்சத்துடன் தேசப்பணி புரிந்தார். அவரது வாழ்க்கை மாசு மறுவற்றது. தீரம், உழைப்பு உயர்வு, ஊக்கம், அறிவு, ஆண்மை, திண்மை முதலிய நற்குணங்கள் திலகராக உருவெடுத்தன எனலாம். நவீன இந்தியாவை உருவாக்கிய அவரது அடிச்சுவடுகளை நாம் யாவரும் பின்பற்ற வேண்டும்."

சத்தியத்துக்கும் தெய்விக குணங்களுக்கும் உறைவிடமான மகாத்மா காந்தியே திலகரைப் பற்றி அவ்வாறு கூறிய பிறகு, லோகமான்ய பாலகங்காதர திலகரின் பெருமையைப் பற்றி நாம் வேறு என்ன சொல்ல முடியும்?

லண்டனில் உள்ள இந்தியா மாளிகையில் சென்ற வாரம் திலகரின் திரு உருவ படத்தை நேருஜி திறந்து வைத்தபோது, திலகரை இந்திய சுதந்திரப் புரட்சியின் தந்தை என்று போற்றிப் பாராட்டினார்.

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையைப் புதிய பாதையில் திருப்பிய முதல் மாபெரும் தலைவர் திலகர்தான் என்று குறிப்பிட்டார்.

அப்போது பல பிரிட்டிஷ் பிரமுகர்களும் முன்னாள் பிரிட்டிஷ் மந்திரிகளும் நவீன பாரதத்தின் சிருஷ்டிகர்த்தாவான திலகருக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

"பிரிட்டனில் எனது கல்வியை முடித்துக் கொண்டு நான் திரும்பி வந்த பிறகு காங்கிரஸ் கூட்டங்களில் லோகமான்யரைச் சந்தித்தபோது அவர் மீது எனக்கிருந்த பக்தியால் உணர்ச்சிவசப்பட்டு மெய் மறந்தேன். மாபெரும் தலைவரும் விடுதலைப் போராட்டத்தின் முன்னணி வீரருமான அவருக்கு அருகில் சென்று அவருடன் பேசுவதற்குக்கூட எனக்குத் தைரியம் ஏற்படவில்லை. சுதந்திரப் போராட்டம் என்னும் சத்திய தீபத்தை ஏந்திச் சென்ற திலகரின் உடல் நலம் குன்றியதும், அவர் அந்தத் தீபத்தைக் காந்திஜியிடம் ஒப்புவித்துச் சென்றார்" என்று நேருஜி கூறி விருப்பதைக் கேட்டு மனம் உருகாதவர்கள் இருக்க முடியாது.

* * *

வாழ்க திலகன் நாமம்! வாழ்க! வாழ்கவே!
வீழ்க கொடுங்கோன்மை! வீழ்க! வீழ்கவே!

துன்ப மெனும் கடலைக் கடக்குந் தோணி
யவன் பெயர்
சோர் வென்னும் பேயை யோட்டுஞ் சூழ்ச்சி
யவன் பெயர்
அன்பெனுந் தேனூறித் ததும்பும் புதுமலர்
அவன் பெயர்
ஆண்மை யெனும் பொருளைக் காட்டும் அறிகுறி
யவன் பெயர்

இவ்விதம் கவிச் சக்கரவர்த்தி பாரதியாரால் பாமாலை சூட்டப்பட்டு, பாரத மக்களின் இருதய சிம்மாசனத்தில் என்றுமே கம்பீரமாக வீற்றிருக்கும் லோகமான்ய பாலகங்காதர திலகருக்கு அஞ்சலி செய்கிறோம்.

காரணம் தவறு, முடிவு சரியே!

சிலர் மிக உயர்ந்த லட்சியம் உடையவர்களாக விருப்பார்கள். ஆனால், அதை அடைய அவர்கள் கடைப்பிடிக்கும் வழி அநீதியும், அராஜகமும் நிறைந்ததாக இருக்கும்.

ஆகவேதான் "லட்சியம் மட்டும் உயர்ந்ததாக இருந்தால் போதாது. அதை அடையும் வழியும் உயர்ந்ததாக இருக்க வேண்டும்; நீதிக்கும் நியாயத்துக்கும் நேர்மைக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும்" என்று காந்தி மகான் வற்புறுத்தி வந்தார். அதன்படியே அவர் தமது வாழ்க்கையிலும் நடத்திக் காட்டினார். அந்த நன்னெறியிலேயே நம்மையும் அழைத்துச் சென்றார்.

ஆனால் இன்றையச் சூழ்நிலையில் காந்தி மகானைப் போன்ற லட்சிய சீலர்களைக் காண்பது எப்படி? அதிலும் மேல் நாட்டில்...?

இன்று மேனாட்டினருக்குத் தர்மநியாயமான லட்சியம் எது என்று காண்பதே கஷ்டமாக இருக்கிறது! தப்பித் தவறி ஒருவர் இருவர் எந்த வழியிலாவது சென்று உண்மை லட்சியத்தை கண்டு விட்டார்களானால் அது நமக்கு மிகுந்த திருப்தியை அளிக்கிறது!

இரண்டாவது உலக யுத்தத்தில் ஜப்பான் மீது அணுகுண்டு வீசப்பட்ட சந்தர்ப்பத்தை இப்போது நினைவு கூர்வோம்:

ஜெர்மனியும் ஜப்பானும் நேச நாடுகளின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் படு தோல்வி யடைந்து சரணம் சரணம் என்று தஞ்சம் புகும் சமயத்தில் அனாவசியமாக அமெரிக்கா ஜப்பான் மீது அணுகுண்டைப் போட்டது.

அப்போது முதன் முதலில் அமெரிக்காதான் இந்த அணு ஆயுதத்தைக் கண்டு பிடித்திருந்தது. இதை வேறு யாராலும் கண்டு பிடிக்க முடியாது என்ற ஆணவத்தில் அமெரிக்கா இந்த நாசகரமான வேலையைச் செய்தது. அப்போதே, தீர்க்க தரிசனம் வாய்ந்த அமெரிக்கத் தலைவர்கள், "இந்த நாசகரமான ஆயுதத்தை இனி பிறரும் செய்யத் தொடங்குவார்கள். உலகத்தின் அழிவு இதனால்தான் ஏற்படப் போகிறது!" என்று எச்சரிக்கை செய்தார்கள்.

எனினும் அமெரிக்கா கேட்கவில்லை. நேச நாடுகளான பிரிட்டனும், ருஷ்யாவும் கூடியிருந்த கூட்டத்தில் இந்த அணுகுண்டின் ரகசியத்தை ருஷ்யாவுக்குச் சொல்லாமல் "ஒரு புது ஆயுதம்" "பெரும் நாசகாரி" என்று மட்டும் சொல்லி மழுப்பி ஜப்பான் மீது அணுகுண்டைப் போட்டார்கள். அதாவது இந்த ஆயுதத்தை உபயோகித்ததில் ஸ்டாலினுக்கும் பங்குண்டு என்று உலகம் நம்பும்படி ஒரு நாடகத்தை நடத்திவிட்டார்கள். உண்மையில் அப்போது ருஷ்யாவுக்கு அணு ஆயுத ரகசியம் தெரியாது.

யுத்தம் முடிந்த பிறகு ருஷ்யாவும் இந்த அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டது. அதில் மகத்தான வெற்றியும் கண்டது.

சமீப காலம் வரை அமெரிக்கர்கள், "ருஷ்யாவின் அணு ஆராய்ச்சியும், அதில் அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றமும் எங்கள் ஆராய்ச்சி முன்னேற்றத்துக்கு ஈடாகா!" என்று சொல்லி அசட்டுத் தைரியத்தோடு இருந்து விட்டார்கள்.

ஆனால் ருஷ்யா, அணு ஆயுத சிருஷ்டியில் அமெரிக்காவையும் வென்று விட்டது என்பதை இப்போது சந்தேகமற நிரூபித்துக் காண்பித்து விட்டது!



பூனா "கேஸரி" பத்திரிகை அனுப்பி வைத்த லோகமான்ய திலகரின் திரு உருவப் படத்தை லண்டன் "இந்தியா ஹவுஸ்" மாளிகையில் பாரதப் பிரதமர் நேருஜி சென்ற 12ம் தேதி யன்று திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இதன் பயனாக அமெரிக்காவின் ஆணவம் மறைந்தது. ஆனால் அதற்கு அறிவு வரவில்லை. ''அணு குண்டுகளை எப்படி விட முடியும்? முடியாது! முடியவே முடியாது'' என்று வீண் பிடிவாதம் செய்து வருகிறது.

இப்போது இன்னொரு புதிய பயம் ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இங்கிலாந்திலுள்ள ஒரு தீவிர 'டோரிக் கட்சி'ப் பத்திரிகை எழுதுவதைப் பாருங்கள்:

''இந்தப் பயங்கர ஆயுதங்கள் இப்போது, அமெரிக்கா, பிரிட்டன், ருஷ்யா ஆகிய மூன்று நாடுகளிடம் மட்டுமே இருக்கின்றன. இந்த ஆயுதங்கள் மேற்கூறிய மூன்று அரசுகளிடம் மட்டும்தான் இனியும் இருக்கும் என்பது என்ன நிச்சயம்? அப்படியிருந்தாலும் அது எத்தனை நாளைக்கு இருக்கும்? எகிப்து, சைனா, ஜப்பான், அர்ஜென்டினா முதலிய நாடுகளிலும் அணு ஆயுதங்களைச் செய்ய ஆரம்பித்து விடலாம். காலக்கிரமத்தில் இப்படி நடக்கத்தான் போகிறது. அப்போது உலகத்துக்கு இதுவரை கண்டும் கேட்டுமிராத பேராபாயம் அல்லவா ஏற்படும்? எனவே இந்த அணு ஆயுத விஷயத்தில் சீக்கிரமாகவே ஒரு சமாதானத்துக்கு வந்து விடுவதுதான் நலம்!''

அடாடா! இந்தப் பத்திரிகையின் புத்திசாலித்தனத்தை என்னவென்று சொல்வது! ஆயினும் இதன் எச்சரிக்கையாவது உலக வல்லரசுகளின் இரும்புக் காதுகளில் ஏறும் என்று நம்புகிறோம்.

அணு ஆயுதங்களை விட்டொழிக்க வேண்டும் என்பதற்கு மேற்படி பத்திரிகை கூறும் காரணம் தர்மத்தின் அடிப்படையில் கண்ட உண்மையால் அல்ல; பயம்தான் காரணம். இந்தக் காரணம் தவறுதான்; ஆயினும் முடிவு சரியே!

என்ன சேதி?

காந்திஜியின் நினைவு

ஆப்பிரிக்காவைச் சேர்ந்த நைரோபியில் சென்ற வாரம் ஓர் அதிசய வைபவம் நிகழ்ந்தது. அந்த நாட்டுக்கு விஜயம் செய்த நமது உதவி ஜனாதிபதி ஸ்ரீ எஸ். ராதாகிருஷ்ணன் நைரோபி நகரில் காந்திஜியின் ஞாபகார்த்தமாக ஒரு கல்லூரியை ஆரம்பித்துவைத்தார். அந்த வைபவத்துக்கு இந்தியர்களும், ஐரோப்பியர்களும் ஆப்பிரிக்கச் சுதேசிகளுமாகப் பதினையாயிரம்பேருக்கு மேல் விஜயம் செய்திருந்தனர். கென்யாவின் கவர்னர் உள்படப் பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டு அவ் வைபவத்தைச் சிறப்பித்தனர்.

எந்த நிறத்தினராயினும், எத்தேசத்தினராயினும் வேற்றுமையின்றிச் சேர்ந்து கல்வி கற்க வேண்டும் என்பதே காந்தி ஞாபகார்த்தக் கல்லூரியின் நோக்கம். இன்றைய உலகில் நிறவெறிக் கோட்டையாக விளங்கி வரும் ஆப்பிரிக்காவில் இத்தகைய கல்லூரி ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். நிறவெறியை ஒழித்து எல்லோரும் சமம் என்ற உலக தர்மத்தை நிலைநிறுத்த காந்திஜி முதன் முதலாக ஆப்பிரிக்காவில்தான் பாடுபட்டார். எனவே, இப்போது அங்கு காந்திஜியின் பெயரில் நிறுவப்பட்டுள்ள கல்லூரி, அவரது சமதர்மக் கொள்கையின் வெற்றிக்குச் சான்றாகும்.

அதே வைபவத்தில், வெண்கலத்தினால் செய்யப்பட்ட காந்திஜியின் உருவச் சிலையையும் நமது உதவி ஜனாதிபதி திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில், அந்தச் சிலை மாணவர்களுக்கு வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியங்களை உபதேசிக்கும் மௌன குருவாகத் திகழ்ந்து வரும் என்று குறிப்பிட்டார். காந்திஜி உபதேசித்து வந்த அறநெறிகள் உலகம் முழுமைக்கும் உகந்தவை என்பதை வெளி நாட்டினரும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதையே ஆப்பிரிக்காவில் நிகழ்ந்துள்ள வைபவம் எடுத்துக் காட்டுகிறது.

நாகர்கோவில் ஆதரவு

மொழியின் அடிப்படையிலே ராஜ்யங்களின் எல்லையை நிர்ணயிப்பது தேசத்தின் சுபிட்சத்துக்கும் முன்னேற்றத்துக்கும் குந்தகமானது என்பதே பெருந் தலைவர்களின் கருத்து. இக் கருத்து மக்களிடையே மெள்ள மெள்ளப் பரவி வருகிறது என்பதற்கான அறிகுறிகள் காணத் தொடங்கியிருக்கின்றன. தட்சிணப் பிரதேசக் கொள்கைக்குத் தமிழ் நாட்டில் பேராதரவு பெருகி வருகிறது. இதைத் தமிழ் மக்கள் யாவரும் நன்கு அறிவார்கள்.

இப்போது நாகர்கோவிலிலும் தட்சிணப் பிரதேசத்துக்கு அமோக ஆதரவு ஏற்பட்டிருக்கிறது என்பது மிகவும் முக்கியமான செய்தியாகும்.

நாகர்கோவில், தமிழகத்துக்கும் மலையாள ராஜ்யத்துக்கும் இடையில் எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஊராகும். எனவே நாகர்கோவில் பிரமுகர்கள் சேர்ந்து வெளியிட்டுள்ள கருத்து மிக முக்கியமானதாகுமல்லவா? நாகர்கோவிலின் பிரமுகர்கள் பலர் ஒன்று சேர்ந்து தென் திருவாங்கூர் மக்களின் க்ஷேம நலத்துக்காக ஒரு சங்கம் நடத்தி வருகிறார்கள். மேற்படி சங்கத்தார் ராஜ்யப் புது ஏற்பாட்டுக் கமிட்டியின் சிபாரிசுகளைப் பரிசீலனை செய்யத் தில்லியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பார்லிமெண்டரி கமிட்டிக்கு ஒரு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். அதில் இன்று நம்மை எதிர் நோக்கியுள்ள பல முக்கியமான தேசப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தட்சிணப் பிரதேசம் ஏற்படுத்துவது **ஒன்றுதான் வழி** என்று தெளிவாக வற்புறுத்தியிருக்கிறார்கள். சென்னையும் கேரளமும் இணைந்து தெற்கே ஒரு பெரிய ராஜ்யம் ஏற்பட வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள்!

இடிக்கும் திருப்பணி!


ஈரோடில் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் பத்தாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மணிக்கூண்டை இடித்து விட அந்த ஊர் நகரசபை தீர்மானித்

அட்டைப்படம்

அபலை அஞ்சுகம்

"அபலை அஞ்சுகம்" என்ற சமூகத் தொடர்கதையில் வரும் ஒரு காட்சி இவ்வார அட்டையை அலங்கரிக்கிறது.

பசித்தவனுக்குப் பதில்!



"இப்போது நான் சொல்வதைச் செவிக்கு உணவாக வைத்துக் கொள்ளுங்கள். பின்னும் உங்கள் வயிற்றுக்கும் சிறிது அளிக்கப்படும்."

இருக்கிறது. இந்தக் கைங்கரியத்துக்கான செலவையும் சபை அனுமதித்திருக்கிறது. இந்த மணிக் கூண்டு பல ரஸ்தாக்கள் கூடுமிடத்தில் இருப்பதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு விபத்துகள் நிகழலாம் என்னும் யூகம்தான் மணிக்கூண்டை இடிப்பதற்குச் சபை கூறும் காரணம். ஆனால் சென்ற பத்து ஆண்டுகளாக அங்கே ஒரு விபத்துக்கூட நேரவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அப்படியானால் நகருக்கு அணியாக விளங்கும் மணியான மணிக்கூண்டை ஏன் இடிக்க வேண்டும்? அழிப்பு இயக்கங்களின் தந்தை வசிக்கும் நகரம் ஈரோடு என்ற காரணமா?

"சுயராஜ்யா"

பழம் பெரும் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ காஸா சுப்பராவ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்திருக்கும் 'சுயராஜ்யா' என்னும் புது ஆங்கில வாரப் பத்திரிகையை வரவேற்கிறோம். அந்தப் பத்திரிகைக்கு ராஜாஜி அவர்கள் ஆசிச் செய்தி அனுப்பியிருக்கிறார். அதில், "ஸ்ரீ காஸா சுப்பராவ் தமது முப்பது ஆண்டு பத்திரிகை அனுபவத்தில் முதிர்ந்த ஞானம் பெற்றுள்ளார். விஷயங்களைச் சீராக மதிப்பிட்டு விமரிசனம் செய்யும் திறமையும் அனுபவமும் அவருக்கு உண்டு" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"சுயராஜ்யா" யாதொரு கட்சிப் பற்றுமின்றிப் பொதுநலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சேவை செய்து வரும் என்று அறிகிறோம். அப் பத்திரிகை நீண்ட காலம் நீடித்து நின்று பத்திரிகை தர்மத்திலிருந்து வழுவாமல் சிறந்த தொண்டு செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

தனிப் பிரதி விலை அணா 2. வருஷ சந்தா ரூ. 6. கிடைக்குமிடம்: 77, லாயட்ஸ் ரோடு, சென்னை.

இலங்கையில் ஆலயப் பிரவேசம்

யாழ்ப்பாண நிபகற்பத்தின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அதி முக்கியமான சம்பவம் சென்ற வாரம் நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட மக்களின் நீண்ட காலக் கோரிக்கைக்கு இணங்க ஜாதி இந்துக்களின் மனம் மாறி, சரித்திரப் பிரசித்தி பெற்றவைகளும் மிக மிகப் புராதனமானவைகளுமான நல்லூர் கந்தஸ்வாமி கோவில், வண்ணை வரதராஜப் பெருமாள் கோவில், சிவன் கோவில் ஆகிய மூன்று இந்து ஆலயங்களும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டன. இந்தியாவில் முன்னாள் இலங்கை ஹை கமிஷனராயிருந்த திரு வி. குமாரஸ்வாமி தலைமையில் ஹரிஜனங்கள் இந்த ஆலயங்களுக்குச் சென்று பக்திப் பாட்டுகள் பாடி பஜனை செய்து இறை வழிபாடு நடத்தினார்கள். இலங்கை இந்துக்களின் விசேஷ சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சம்பவம் தமிழ் பேசும் மக்களுக் கிடையில் ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஏற்படுவதற்குத் தடையாயிருந்த ஒரு பெரிய முட்டுக்கட்டையை நீக்கி விட்டதெனலாம்.

** ** **

தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைச் சமாளிக்கத் தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட வேண்டுமென்று தலைவர்கள் உபதேசம் செய்து வந்தார்கள். அதே சமயத்தில் "சிங்களவர்களின் அடக்குமுறையை எதிர்ப்பதற்கு முன்னால் ஒரு வகுப்புத் தமிழர்கள் மீது இன்னொரு வகுப்புத் தமிழர்கள் அடக்குமுறை நடத்துவது நீங்கவேண்டும்" என்று ஹரிஜனங்கள் கிளர்ச்சி செய்து வந்தார்கள். ஆலயப் பிரவேச உரிமைக்காக சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தவும் அவர்கள் திட்டமிட்டுக் கொண்டு வந்தார்கள். இந்த நிலைமையைச் சூறையாடித் தமிழர்களுக் கிடையில் மித்திரபேதம் செய்யச் சில சக்திகள் தீவிரமாக முயற்சி செய்து வந்தன. இந்த மாதிரியான நெருக்கடியான நிலைமையில் ஜாதி இந்துக்கள் மனம் மாறி, ஆலயங்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட்டு இந்து சமூகத்தின் ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் வழி ஏற்படுத்தியது, பொதுவாக எல்லோராலும் உற்சாகத்தோடு வரவேற்கப்படுகிறது. 1926ம் வருடம் மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் விஜயம் செய்து யாழ்ப்பாணத்தில் ஒரு பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில் பேசியபொழுது, ஒரு மனிதன் இன்னொரு மனிதனைத் தாழ்த்தப் பட்டவனாக மதித்து நடத்துவது மகா பாபமென்றும், சகலரிடத்திலும் அன்பு பாராட்டும் ஒரு தெய்வத்தினிடம் இந்துக்களுக்கு நம்பிக்கை யிருக்குமானால் எல்லாக் கோவில்களையும் ஹரிஜனங்களுக்கு உடனே திறந்துவிட வேண்டுமென்றும் கூறினார். காந்திஜியின் கோரிக்கை காலம் கடந்தாவது இன்று நிறைவேறியுள்ளதால் இலங்கை இந்துக்கள் காந்தி மகானுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்களென்று ஸ்ரீ எஸ். சிவசுப்பிரமணியம் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

** ** **

இலங்கையில் தமிழ் ராஜ்யம் ஏற்படும் பொழுது அதன் தலைநகரம் திருகோணமலையாக இருக்க வேண்டுமென்றும், அந்த நகரத்தில் தமிழ் பேசும் மக்களுக்குப் பிரத்தியேகமான தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் கோரப்பட்டு வருகிறது. இத் தருணத்தில் திருகோணமலை நகரத்தின் முக்கியத்துவத்தை அதிகரிக்கும் ஒரு அருமையான ஆராய்ச்சியை டாக்டர் பாலேந்திரா வெளியிட்டிருக்கிறார். ஞானசம்பந்தர் போன்ற சைவ சமய குரவர்களினால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட இரு இலங்கைத் தலங்களில் திருக்கோணேஸ்வரம் என்னும் திருகோண மலையும் ஒன்று. பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ் வாலயத்தைக் கடல் கொண்டு போய்விட்டது. ஆயினும் சுமார் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னால் போர்த்துகீசியர்கள் காலத்தில் இருந்த ஆலயத்தின் அமைப்பைக் குறிக்கும் ஓவியத்தைத் தழுவி, புதிய ஆலயத்தைக் கைதேர்ந்த இந்தியச் சிற்பிகளின் உதவியைக் கொண்டு நிர்மாணிக்கத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் கடலுக்கு அடியில் போட்டோப் படம் பிடிக்கும் ஒரு பிரிட்டிஷ் கப்பல் சென்ற வருட டிஸம்பர் மாதம் இலங்கைக்கு வந்தபொழுது அந்தக் கப்பலின் நிபுணர்களைக் கொண்டு திருகோணமலை அருகிலுள்ள கடலில் ஆராய்ச்சிகள் நடத்த டாக்டர் பாலேந்திரா ஏற்பாடு செய்தார். பிரிட்டிஷ் நிபுணர்கள் கடலுக்கு அடியில் சென்று படம் பிடித்ததில் புராதன கோணேஸ்வரர் ஆலயம், அதன் சுற்றுப் பிராகாரங்கள், சிவலிங்கம், மணிகள் முதலியவைகளெல்லாம் கடலுக்கு அடியில் அப்படியே பத்திரமாயிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை சம்பந்தமாகத் தொடர்ந்து நடத்தப்படவிருக்கும் ஆராய்ச்சிகள் சரித்திரமுக்கியத்துவம்வாய்ந்த பல விஷயங்களை வெளிப்படுத்தலாம். —ரஜனி



யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்தஸ்வாமி கோவில். இந்த ஆலயம் சென்ற வாரம் ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்டது.


PUBLIC LIFE...
— the TIME FACTOR
சென்டர் செகண்ட் அமைக்கப்பட்ட இந்த பாக்கெட் கடிகாரம் பொது வாழ்க்கையில் ஈடுபடுவோரின் பற்பல வேலைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதுடன் உங்களுடைய காரியங்களைக் குறித்த காலத்தில் செய்து முடிக்கப் பெரிதும் உதவுகிறது. உங்களுடைய அன்றாட அலுவல்களைக் குறித்த நேரத்தில் பூர்த்தி செய்வதற்கு இதைப் பூரணமாக நம்பலாம்.
SECUNDUS POCKET
Centre-Second
Nickel Silver ... Rs. 77
WEST END WATCH Co.
BOMBAY
CALCUTTA



திலக ஜெயந்தி

திலகர் யார்? அவர் என்ன செய்தார்? எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளானார்? எந்த அளவுக்கு நாம் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் — ஆகிய விஷயங்கள் ஐம்பது வயதுக்குட்பட்ட இன்றைய மக்களுக்கு எப்படித் தெரிய முடியும்? என் தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கும் என் வயதினர்களுக்கும் அவருடைய பெருமை தெரியும். பெற்ற தாயை மறப்பது எப்படி முடியாதோ அப்படி முடியாது எங்களுக்குத் திலகரையும் அவரது சேவையையும்மறப்பது.

மகாத்மா காந்தி அரசியல் அரங்கில் தோன்றி உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தார். ஒத்துழையாமை தொடங்கிய சிறிது நாட்களில் திலகர் மறைந்தார். பிரிட்டிஷ் சிங்கத்தின் கொட்டத்தை யாராலும் அடக்க முடியாது என்றிருந்த நிலையில் மகாத்மா காந்தி அந்தச் சிங்கம் அலறும்படி ஒரு புது முறையைக் கையாண்டு வாலை முறுக்கி விட்டார். அவ்வளவுதான். இந்தப் புது முறையில் பாரத மக்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர். அதிலும், கோகலேயின் அடக்கமான சீடன் என்றும், மிதவாதிகளின் நண்பன் என்றும், சொல்லிக் கொண்டு வந்த காந்திஜி இப்படிப்பட்ட சாகசச்செயலைப் புரியவே பாரத மக்கள் அவரையே உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினர். திலகரை மறந்து விட்டனர். திலகரின் பூத உடலும் அத்துடன் மக்களின் ஞாபகமும் சௌபாட்டி கடற்கரை மணலில் எரிக்கப்பட்டு விட்டன. அவர் நினைவுச் சின்னமாக ஒரு வெண்கலச் சிலை மாத்திரம் இன்னும் இருக்கிறது! காந்திஜி செய்து வந்த மாயாஜால வித்தைகளைக் கவனிப்பதிலேயே மக்களுக்கு நேரம் சரியாக இருந்தது.

காந்திஜியின் காரியங்கள் ஒன்றைவிட ஒன்று பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினருக்கு ஆத்திரம் மூட்டி வந்தன. அந்த ஆத்திரத்தில் பிரிட்டிஷார் அடக்கு முறைகளைக் கைக்கொண்டனர். அடக்கு முறைகளில் சிக்கிய மக்களுக்குத் திரும்பிப் பார்க்க நேரம் கிடைக்கவில்லை. திலகரின் சாதனைகளை நினைவுபடுத்திக் கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. இதுதான் உலக இயல்பு.

ஆழத் தோண்டி அஸ்திவாரம் போட்டு, அதற்கு மேல்தான் கட்டடம் எழுப்புகிறோம். கட்டடம் உருவானதைப் பார்த்ததும் குழந்தைகள் பூமி மட்டத்துக்குக் கீழ் அஸ்திவாரம் இருக்கிறது என்பதை மறந்து விடுகின்றனர்.

ஆயினும் நமக்கு ஒரு கடமை உண்டு. அதைப் புறக்கணிக்கக் கூடாது. லோக மான்ய திலகர் பாரத சுதந்திரத்துக்குப் புரிந்த சேவையை மறந்து விடுவது மிகப் பெரிய பாவமாகும். அவருடைய தொண்டு மண்ணில் மறைந்து கிடக்கும் அஸ்திவாரமாகும். அதன் மேல்தான் இன்றைய பாரத சுதந்திரம் என்னும் மாளிகை எழும்பியிருக்கிறது!

மகான்களுக்குள்ளே பெரிய மகானான பாலகங்காதர திலகர் அன்பின் உருவமானவர். பாரதத்தின் புராதன பண்பாட்டிலும் சாஸ்திர ஞானத்திலும் ஊறித் திளைத்த பெரியார். அவர் பாரதத்துக்காகப் பட்ட கஷ்ட நஷ்டம் யாரால் சொல்லி முடியும்! நாடு கடத்தல், சிறைவாசம், அதிகாரிகளின் ஹிம்சைகள் ஆகியவை அவர் அனுபவித்ததைப் போல் அவருக்கு முன்னும் சரி, பின்னும் சரி யாரும் அனுபவிக்கவில்லை. சுயராஜ்யம் பாரத மக்களின் பிறப்புரிமை என்பது அவருடைய அசையாக் கொள்கை. இந்த உரிமைக்கு எதிராக யார் நின்றாலும் அவரை எதிர்த்து அடைந்தே தீருவது என்ற விரதம் கொண்டிருந்தார். இதன் நிமித்தம் அவர் பட்ட கஷ்டங்களைப் பற்றி அவர் ஒரு வார்த்தை வெளியே பேசியது கிடையாது. ஒரு வரி எழுதி வைத்ததும் கிடையாது. சிறைவாசத்திலிருந்து வெளிவரும் ஒவ்வொரு முறையும் ஒரு புதுக் குழந்தைபோல் தோன்றுவார். அவ்வளவு உற்சாகமாகக் காணப்படுவார்.

மக்களுக்கு அதுவரை யாரும் பேசாத முறையில், ஊக்கமூட்டும் வகையில்பேசுவார். அந்த நாட்களில்மக்கள் அன்னிய ஆதிக்கத்தின் பயத்திலும் பிரமையிலும் சிக்கித் தவித்தனர். அன்று அரசியல் தலைவர்களாக இருந்தவர்களும் மக்களை இந்த பய பிராந்தியிலிருந்து விடுவிக்க முயலவில்லை. பயத்தில் அகப்பட்டுக் கொண்டே முன்னேறச் செய்ய வழி

வகைகள் காண முயன்று வந்தனர். ஏனெனில் அன்னிய ஆதிக்கம் என்பது அகற்ற முடியாததொன்று என்ற திட உறுதி கொண்டிருந்தனர். ஆகவே அவர்களது அரசியல் லட்சியமெல்லாம் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குட்பட்ட காலனி ஆட்சியாகத்தான் இருந்தது.

இந்த நிலையில் திலகர் ஒருபுறம் மிதவாதிகளுடன் சண்டை போட வேண்டியிருந்தது; மற்றொரு புறம் பயத்திலிருந்த மக்களைத் தட்டியெழுப்ப வேண்டியிருந்தது! இக் காரியங்களினால் மிதவாதிகளுக்குத் திலகரைக் கண்டாலே பிடிக்காமற் போய்விட்டது. அவர்கள் பிரிட்டிஷாரை விட அதிகமாகவே திலகரை வெறுக்கவும் பகிஷ்கரிக்கவும் தொடங்கினர்.

வெறுப்புக் கலையில் மிதவாதிகள் பிரிட்டிஷாரை மிஞ்சி விட்டிருந்தனர். ஆகவே அரசியல் துறையில் திலகருக்கு இருந்த கஷ்டங்கள் எண்ணுக்கு அடங்கா.


1918-ல்தான் திலகர் இந்திய தேசிய காங்கிரஸில் செல்வாக்கு பெற்றுவிளங்குவார் போல் தோன்றியது. ஆனால் அதற்குள் ஒரு பெரும் மாறுதல் நிகழ்ந்தது! அரசியல் அரங்கிலே திரை எழுந்து "ஒத்துழையாமை" இயக்கம் தோன்றியது. இதற்குப் பிறகு திலகர் அதிக நாள் இருக்க வில்லை. திலகர் மறைந்தார்; அவருடன் அவரது "தீவிரவாத"மும் மறைந்தது!

திலகர் தமது இயக்கம் வெற்றி பெறுவதற்கு மக்களின் எழுச்சியை நம்பினார். ஆனால் அந்நாட்களிலே கூட்டங்கள், தீர்மானங்கள் எல்லாம் மேனாட்டுக் கல்வி பெற்றவர்கள் மட்டும் கூடிப் பேசுபவையாக இருக்கும். பொதுமக்களை அரசியலில் நாட்டம் கொள்ளச் செய்தவர் திலகர். இதைக் கண்டதும் பிரிட்டிஷார் "ஆபத்து வந்து விட்டது" என்று கண்டு கொண்டார்கள். ஜன சக்தியின் தன்மை என்னவென்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் அடைந்த கோபம் இவ்வளவு அவ்வளவல்ல. அந்நாட்களிலிருந்த அரசியல்வாதிகளிடமிருந்து திலகரைப் பிரித்து வைக்கவே முயன்றனர். இதில் அவர்கள் வெற்றி பெற்றனர். உத்தியோகஸ்தர்களும், நாகரிக அரசியல் வாதிகளும் லோகமான்ய திலக பாலகங்காதரரை ஒதுக்கி வைத்தனர்.

இந்தக் கொடுமை நீடித்திருக்கும். அப்படி நீடிக்க விடாமல் காந்தி அடிகள் தோன்றினார். காந்தி மகானின் ஒத்துழையாமை இயக்கம் பிரிட்டிஷாரின் மூளையைக் குழப்பியது. கடைசியில் அவர்களையே இந்தியாவினின்று அகற்றி விட்டது.

இந்திய அரசியலில் பாரத மக்களின் சக்தி உணரும்படி செய்தவர் திலகர். அவர் முப்பதாண்டுகள் இடை விடாது செய்த தொண்டின் பயனாகவே மகாத்மா காந்தியின் புது முறையை மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது. இதை மறந்துவிடக் கூடாது. லோகமான்யரின் சேவை இல்லையேல் மகாத்மா காந்தியின் கருத்தும் மற்ற மகா புருஷர் கருத்துக்களைப் போலவே வெறும் வேதாந்தமாகப் போயிருக்கும்.


பாரதத்தைத் தட்டி எழுப்பியவர் திலகர். அதன் பயனாகக் காந்திமகான் கொண்டு வந்த தார்மீக முறையை மக்கள் உணர்ந்து அதன்படி நடக்க முடிந்தது! சுதந்திர லட்சியத்தை அடையவும் முடிந்தது!



பிரபல திருமணம்

*

சென்னை ரெவின்யூ போர்டு அங்கத்தினரான ஸ்ரீ எஸ். வெங்கடேசுவரனின் புதல்வர் ஸ்ரீ வி. வி. நாதன் ஐ. ஏ. எஸ். அவர்களுக்கும் தக்ஷிண ரயில்வே டிப்டி ஜெனரல் மானேஜர் ஸ்ரீ எம். சுந்தரராஜன் புதல்வி செள. ஜானகிக்கும் சமீபத்தில், வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!



வசீகரிக்கும் லாவண்யத்தை நீங்கள் பெறலாம்

இந்த க்ரீம் உங்கள் சருமத்தை மிருதுவாக்கி,
அதன் தோற்றத்தை அழகுறச் செய்கிறது

செழுமையான பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை இடைவிடாமல் உபயோகித்து உங்கள் சருமத்தை இளமையுடனும், மிருதுவாகவும் வையுங்கள்.

பாதி இரவும் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உங்கள் முகத்தில் தடவுங்கள். அதன் ஊடுருவிச் செல்லும் சுத்திகரிப்புத் தன்மை, மறைந்து கிடக்கும் அழுக்கையகற்றி, உங்கள் சருமத்திற்கு புதுத் தோற்றத்தையும் மிருதுத் தன்மையையும் அளிக்கிறது. மேலும், இந்த க்ரீம் உங்கள் சருமத்தைச் சுத்தம் செய்து அதன் தோற்றத்தை அதிக அழகுடன் விளங்கச் செய்கிறது!

பாண்ட்ஸ்
கோல்டு க்ரீம்




இழந்த 'சருமப் பாதுகாப்பு என்கிற கவசம்' மீண்டும் பெறுங்கள்

உங்கள் முகத்தை கழுவும் ஒவ்வொரு சமயமும் சருமத்தைப் பாதுகாக்கும் எண்ணெய்ப் பசையைப் போக்கி விடுகிறீர்கள். நிர்மாணிக்கும் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமிலுள்ள இந்த இயற்கை சருமப் பாதுகாப்புகளை உடனே மீண்டும் பெறுங்கள். இது உங்கள் சருமத்திற்கு மீண்டும் பாதுகாப்பு அளித்து, அதை இளமையுடனும், லாவண்யத்துடனும் விளங்கச் செய்கிறது!

அழகை வர்ணிக்கும் புத்தகம் இலவசம்:
Lovelier with Pond's என்ற எமது இலவச புத்தகத்திற்கு எழுதவும். உங்களுடைய இயற்கை அழகை அதிகரிப்பது எப்படி என்பதைப் பற்றிய உபயோகமான குறிப்புகள் இதில் அடங்கியுள்ளன.
ஜி. பி. ஓ. பாக்ஸ் நம்பர் 1612, பம்பாய்-1 என்ற விலாசத்திற்கு எழுதவும்

P. 2903


டுமெக்ஸ்
பால் உணவு
குழந்தைகளுக்கு டுமெக்ஸ் புகட்டி அவர்களின் வளர்ச்சியைக் கவனியுங்கள்!

அபலை அஞ்சுகம்

கி. ரா. கோபாலன்

3. பெட்டிக்கடை குப்பம்மா

சொக்கனோடு அங்காடிப்பேட்டைக்குப் போவதற்கு அஞ்சுகத்துக்குச் சிறிதும் விருப்பமில்லை. சொக்கனும் அவள் பக்கம் பரிந்து பேசுவதுபோல் பேசித் தன் வலையில் அவளைச் சிக்க வைக்க முயன்றான்.

"நீ சொல்லுகிறதும் சரிதான். உன்னைப் போல் அழகும், குணமும் நிறைந்த பெண்ணுக்கு இந்தச் சகவாசமெல்லாம் கெடுதல்தான். உனக்கு நல்ல முகவெட்டு இருக்கிறது. உனக்குச் சினிமா உலகம்தான் சரி! ஆனால் இப்போ நம்ம பேட்டையிலே முன்னே இருந்தது போல் அவ்வளவு போக்கிரிகள் இல்லே. முக்கால் வாசிப் பேர்கள் ஜெயிலிலே இருக்கிறாங்க. பாக்கி இருக்கிற கால்வாசிப் பேரும் தினம் என்னுடைய சொற்பொழிவுகளைக் கேட்டு யோக்கியர்கள் ஆகி விட்டாங்க. நான்கூட இப்போ ஏதாவது ஒரு சினிமாக் கம்பெனியிலே சேர்ந்து விடலாம் என்று யோசனை செய்துட்டேன். நல்லாப் பேசறேன், நல்ல நடிப்புத் திறமையும் முகவெட்டும் இருக்குது. வில்லன் வேஷத்துக்கு நல்ல பொருத்தம் என்று எல்லாரும் சொல்றாங்க! தவிர இந்தத் திருட்டுத் தொழிலுக்கு ரொம்பத் துணிச்சலும் வேண்டியிருக்குது. அந்தத் துணிச்சல்தான் நம்மகிட்டே பஞ்சம். எங்கேனும் செமித்தியா அடி விழுந்தால் தாங்க உடம்பிலே சக்தியும் வேண்டியிருக்குது இல்லையா? ஆகையினாலே இது நமக்குத் தோதுப்படாது தான்......" என்று சொல்லி விட்டு அஞ்சுகத்தின் முகத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் எவ்வித மாறுதலோ, சலனமோ ஏற்படவில்லை.

சொக்கன் மறுபடியும் பேசலானான். "நீ ஜெயிலுக்குப் போக நேர்ந்ததாலே





வெற்றிலைக் கடை அத்தைக்கு ஏற்பட்ட ஏக்கமும், துக்கமும் சொல்லி முடியாது. உன்னை, 'எப்போது பார்க்கப் போகிறோம், எப்போது பார்க்கப் போகிறோம்' என்று துடிச்சுக்கிட்டு உயிரை வைச்சிக்கிட்டு இருக்கா ......பாவம்! செக்குப் போலிருந்த அவள் உடம்பு சக்குப்போலாகிவிட்டது. நீ எங்கே போகிறதாக இருந்தாலும் முதலில் அத்தைக்கு உன் முகத்தைக் காட்டி விட்டுப் போ. அது அவளுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தது மாதிரி......" என்றான் அவன்.

அவன் யோசித்தான். அப்பொழுதுதான் சைக்கிளில் சென்ற ஒரு போலீஸ்காரர் அங்கு பேசிக்கொண்டு நிற்கும் அவர்கள் இருவரையும் சந்தேகாஸ்பதமான கண்களுடன் பார்த்து விட்டுப் போவதையும் கவனித்தான். அவனுடைய திகில் அதிகரித்தது. அந்தச் சமயம் அதுவும் சொக்கனோடு அங்கு நிற்பது அவனுக்கு மிகவும் பிசகாகப் பட்டது. அப்பொழுது சொக்கனிடமிருந்து மீண்டு போவதும் கஷ்டமென்று அவனுக்குப்பட்டது. அவன் சொல்லியபடியே பேட்டைக்குப் போய்விட்டால் அப்புறம் அங்கிருந்து ஒருவருக்கும் தெரியாமல் கிளம்பி மேகராஜபுரத்துக்குப் போய் விடலாம் என்று அவன் தீர்மானித்தான்.

"சரி! வாங்க போவோம்" என்று அரை குறையான மனத்தோடு சொல்லிச் சொக்கனோடு அங்காடிப் பேட்டையை நோக்கி மனமில்லாதவனாக நடந்தான்.


அஞ்சுகத்தைக் கண்டதும் குப்பம்மாள் தன் வயிற்றில் பிறந்த பெண்ணைக் கண்டதுபோல் பாசத்தோடு ஓடி வந்து கட்டி அணைத்துக் கொண்டாள். "ஐயோ! என் குழந்தை - ராசாத்தி - எப்படி இளைச்சுப் போயிட்டா...? பாவி மகன் திருடி விட்டு என் குழந்தை மேல் பழியை வைச்சுட்டு ஓடிட்டானே? தங்கச் சிலை போல் இருந்த என் பெண்ணு ஆறு மாசம் ஜெயில்லேயிருந்து எப்படி வாடிப்போச்சு...? வா! என் கண்ணுட்டி வா! முதல்லே கொஞ்சம் நல்ல சாப்பாடு சாப்பிடு. அப்புறம்சாவகாசமாக உட்கார்ந்து



எல்லாம் பேசிக்கலாம்........." என்றான் மிகுந்த உணர்ச்சியோடும் பதைபதைப்போடும்.

அஞ்சுகம் குப்பம்மாளின் அனுதாபமும், ஆசையும் பொங்கித் ததும்பும் வார்த்தைகளில் மயங்கி விடவில்லை. அவள் அப்படி நய வஞ்சகமாக எத்தனையோ பேரிடம் பேசியிருப்பதை அவன் பார்த்திருக்கிறான். தன்னிடம் அவள் அப்படிப் பேசுவதை அவன் அதிசயமாக நினைக்கவில்லை. எப்படியாவது அவளிடமிருந்து மீண்டு மேகராஜபுரத்துக்குப் போய் விட வேண்டும் என்பதிலேயே அவன் மனசிலை இருந்தது. குப்பம்மா மிகவும் வற்புறுத்தியதனால் வேண்டா வெறுப்பாகக் கொஞ்சம் சாப்பிட்டான். அஞ்சுகத்தைக் கண்ட





ஆக்ஸ்போர்ட் விளம்பர இலாகாவின் மானேஜர் ஸ்ரீ முத்துஸ்வாமி ஐயருடைய குமாரன் சிரஞ்சீவி ஜனார்த்தனனுக்கும், மன்னார்குடி ஸ்ரீ ரகுநாதஅய்யர் அவர்கள் குமாரத்தி சௌ. சகுந்தலாவுக்கும் சென்ற மாதம் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

தும் சொக்கன் அன்று எங்கு போவது, என்ன செய்வதுஎன்றெல்லாம்திட்டமிட்டு வைத்திருந்தானோ அவ்வளவையும் மறந்து விட்டான். நெடு நாட்களாக அவளைப் பார்க்க வேண்டும் என்று அவன் எவ்வளவு துடிப்போடு இருந்தான்? அந்தச் சமயம் அவளை விட்டு விட்டு எங்காவது சென்றால் அவள் வேறு எங்கேயாவது போய் விடுவாளோ என்ற பயத்தில் அவளுக்குப் பக்கத்திலேயே நின்றுகொண் டிருந்தான். ஆனால் அஞ்சுகத்திடம் பேசும்போது சொக்கன் இருக்கக் கூடாது என்ற எண்ணத்தினாலோ என்னவோ அவனைப் 'பிறகு வரும்படி'யாகச் சொல்லி மெதுவாக வெளியேற்றி விட்டாள் குப்பம்மாள்.

குப்பம்மாள் அவளை எப்படிப் பாதுகாப்பாள் என்ற விஷயம் அஞ்சுகத்துக்குத் தெரியாததல்ல. அங்கு அவள் இருந்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்றும் அவளுக்குத் தெரியும். "இனிமேல் உங்களுக்கெல்லாம் நான் சிரமம் கொடுக்கப் போவதில்லை. என்னைப் பாதுகாக்கும் சிரமமெல்லாம் உங்களுக்கு வேண்டாம்..." என்று மெதுவாகச் சொன்னாள் அஞ்சுகம்.

அஞ்சுகத்தின் வார்த்தை குப்பம்மாவுக்கு வியப்பை அளித்தது. "என்ன? நீ சொல்லுகிறது எனக்கொன்றும் புரியவில்லையே? ஏதாவது பயித்தியக்கார யோசனை செய்துகிட்டு இருக்காதே. எங்களை விட்டு நீ எங்கே போறது? உனக்கு நாதி யாரு? என் ராசாத்தி-உன்னை விட்டு நான் எப்படித் தனியாய் இருப்பேன்......?" என்றாள்.

"எங்காவது ஒரு இடத்தில் கௌரவமாக ஏதாவது வேலை செய்து காலத்தை ஓட்டிவிட முடியாதா......?" என்றாள் அஞ்சுகம், குப்பம்மாளிடம்.

"வேலைசெய்து பிழைக்கவா? உன்னை யார் வேலைக்கு வைத்துக் கொள்வாங்க...? அதுவும் இந்த வயசிலே......ரதியோ ரதிக்கிளியோன்னு உன் உருவையும் அழகையும் பார்த்த எந்த ஆண் பிள்ளை விடுவான்? இது மோசக்கார உலகம் - என் கண்ணு! வீணுக் கெட்டுப் போக வழி தேடாதே!" என்றாள் குப்பம்மாள், அனுதாபத்தோடும் அளவற்ற வாஞ்சையோடும்.

"எனக்கு ஒரு ஆபத்தும் வராது. ஜெயில் அதிகாரியாய் இருக்கும் அம்மா ஒரு பெரிய இடத்துக்குச் சிபார்சுக் கடிதம் எழுதிக் கொடுத்திருக்காங்க. அங்கே போய் வேலைக்கு இருக்கப் போறேன் நான்" என்றாள் அஞ்சுகம்.

"பெரிய இடத்துக்குச் சிபார்சுக்கடிதமா? லட்சணந்தான். உன்னை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம். ஆனால் உன்னைக் கேவலமாகத்தான் நினைப்பாங்க, நடத்துவாங்க—இதைமாத்திரம் ஞாபகத்தில் வைச்சுக்கோ. உன்னை எதற்கும் நம்ப மாட்டாங்க. ஒரு தடவை ஜெயில்லே இருந்து விட்டு வெளியே வந்த பெண் எந்த வீட்டிலே வேலை செய்தும் நல்ல பெயரெடுத்ததில்லே. எதை மறந்தாலும் திருடி, ஜெயிலிலிருந்து விட்டு வந்தவ என்கிறதை மாத்திரம் உலகம் மறக்காது. நான் அனுபவப்பட்டவள் சொல்கிறேன். எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுவாங்க, பழி சொல்லுவாங்க. அதைமாத்திரம் மறந்துடு. அது உனக்குச் சரியில்லை..." என்றாள் குப்பம்மாள், கண்டிப்பான குரலில் உத்தரவு போடுகிறவள் போல்.

குப்பம்மாள் சற்றுப் பொல்லாதவள் தான். ஆனால் அவள் மிகுந்த உலக அனுபவம் பெற்றவள் என்பதை அஞ்சுகம் மறக்க முடியாதல்லவா...? குப்பம்மாளின் வார்த்தைகளிலும் சில உண்மைகள் இருந்தன. ஆனால் ஜெயிலில் சரளாதேவி உபதேசம் செய்து அனுப்பிய ஒவ்வொரு வார்த்தையையும் அவள் மறந்து விடவில்லை. அவள் அஞ்சுகத்துக்குச் சிபார்சு செய்திருக்கும் இடத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறாள். அங்குள்ளவர்களின் நல்ல குணத்தைப் பற்றியும் கூறி இருக்கிறாள். ஜெயில் அதிகாரியாகிய ஒருத்தியே சிபார்சு செய்து கடிதம் எழுதிக் கொடுத்திருக்கும்போது வேலைக்குப் போகும் இடத்தில் தன்மீது சந்தேகப்படுவதற்கு என்ன காரணம் இருக்கிறது? அப்படி ஏதேனும் சிறிது சம்சயம் இருந்தாலும் சில நாட்கள் பழகித் தன் குணத்தை அறிந்து கொண்டால் தானே அந்தச் சந்தேகமும் மறைந்துவிடும் என்று நினைத்தாள் அஞ்சுகம். எப்படி இருந்தாலும் குப்பம்மாவைப் போன்றவர்களிடையே வசிப்பதைவிட வேறு எங்கே



குற்றாலம்...
தென்றல் வீசும் குற்றால சீர்விழச்சியில் குளித்தது போன்ற குளுமையை இந்த லேடி டால் ஹேர் ஆயில் உண்டாக்குகிறது
குளிர்ந்த மூலிகைகளால்
செய்யப்பட்ட சிறந்த
சந்தனாதி தைலம்
லேடி டால்
ஹேர் ஆயில்
கூந்தல் வளர்ச்சிக்கு
சிறந்தது
PSR
ஆர். எஸ். புதி அண்டு கோ., மதுரை

புதிய கேவர்ட்

GEVAERT

போட்டோக் கலைப் போட்டி

விஷயம்

இந்தியர்களின் வாழ்க்கையும், விதங்களும்



ரூ. 4000க்கு மேல் பரிசுகள்

முதல் பரிசு	ரொக்கம்	ரூ. 1,000
2வது பரிசு	,,	ரூ. 750
3வது பரிசு	,,	ரூ. 500
4வது பரிசு	,,	ரூ. 250

5லிருந்து 9 வரை ரூ. 100 பெறுமான முள்ள APL போட்டோ சாமான்கள் பெறக்கூடிய பரிசு கூபன்கள்.

10லிருந்து 19 வரை ரூ. 50 பெறுமான முள்ள APL போட்டோ சாமான்கள் பெறக்கூடிய பரிசு கூபன்கள்.

இத்துடன் டீலர்களுக்கு ரூபாய் 650/–க்கு பரிசுகள்

முடிவு தேதி 31 ஜனவரி 1957

இம் மாபெரும் இந்தியப் பிரதேசத்தில் கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் வடக்கிலும் பற்பல விதமான மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய நடை, உடை, அலங்கார அணிகள், பழக்க வழக்கங்கள் மற்றும் முக பாவங்களும் வெவ்வேறானவை. இந்தியாவின் மனிதர்களையும், அவர்களுடைய வாழ்க்கையையும், இந்தியாவின் மாய அழகையும் போட்டோவில் கவர்ந்து இந்த கேவர்ட் போட்டோக் கலைப் போட்டியில் ஒரு கணிசமான பரிசைப் பெறுங்கள். இந்தப் போட்டிக்கு நீங்கள் எத்தனை போட்டோ வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு போட்டோவும் கேவர்ட் பிலிமில் எடுத்து கேவர்ட் பேப்பரில் 'பிரிண்ட்' போட்டிருக்க வேண்டும். குறைந்த அளவு சைஸ் அரை பிளேட்—அதாவது 4½"×6½". ஒவ்வொரு போட்டோவுடனும் கேவர்ட் பிலிம் காலி அட்டைப் பெட்டியைச் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தியர்களின் வாழ்க்கையையும், விதங்களையும் மட்டுமே படமெடுத்து அனுப்ப வேண்டும்.

இப்போட்டியின் முழு விவரங்கள் வேண்டுவோர் உங்கள் அருகாமையிலிருக்கும் கேவர்ட் வியாபாரிகளிடமோ அல்லது நேரிடையாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

ALLIED PHOTOGRAPHICS PRIVATE LIMITED

அலைட் போட்டோகிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட்

(விளம்பர இலாகா) கஸ்தூரி பில்டிங், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1

இப்பெரும் போட்டியைப்பற்றி மேற்கொண்டு விவரங்களை தீய பிரதி வியாழன் இரவு 8 மணிக்கு இலங்கை வானொலியில் (41 மீட்டர் பாண்டில்) போட்டோ-மேளா (PHOTO-MELA) என்ற நிகழ்ச்சியைக் கேளுங்கள்

யாவது சென்று பிழைப்பதுதான் அவ னுக்கு உசிதமாகப் பட்டது.

"நான் போகக் கூடிய இடத்திலிருப்ப வர்கள் அப்படியெல்லாம் என்னிடம் நடந்து கொள்ள மாட்டாங்கன்னு நினைக் கிறேன். எனக்கு இங்கெல்லாம் இருப் பதை விட அங்கு போய் இருப்பதுதான் நல்லதாகப்படுகிறது" என்றான் அஞ்சுகம்.

"அப்படியா?"-குப்பம்மா சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு, "நீ யாருக்குச் சிபார்சுக் கடிதம் வாங்கிக்கிட்டு வந் திருக்கே? அவர்கள் எங்கிருக்காங்க? அதைத்தான் முதலில் சொல்லேன் - கேட் கிறேன்" என்றாள்.

"இந்த ஊரிலிருந்து வடக்கே நாலுமைல் தூரத்திலே மேகராஜபுரம் என்று ஒரு ஊர் இருக்குதாம். அங்கு பார்வதியம்மான்னு ஒரு பணக்காரி இருக்காளாம். அவங்களுக் குத்தான் சிபார்சுக் கடிதம் வாங்கிக் கொண்டு வந்திருக்கேன்."

இதைக் கேட்டதும் குப்பம்மாள் முகத் தில் ஒரு மலர்ச்சி தோன்றியது. "ஆமாம்! நான்கூடக் கேள்விப் பட்டிருக்கேன், பெருத்த பணக்கார ஜமீன்தாரிணி அங்கே ஒருத்தி இருக்கான்னு. பிடிச்சாலும் நல்ல இடமாகத்தான் பிடிச்சிருக்கே. அடிச்சா லும் நல்ல கொள்ளை யடிக்கலாம். ஆனால் அவ்வளவு குடுகை உனக்கு ஏது? தாராள மாய் நீ அங்கு வேலைக்குப் போ. ஆனால் என்னை மாத்திரம் மறந்து போய் விடாதே. அடிக்கடி அங்கே இருக்கிற விவரங்களை யெல்லாம் என்னிடம் வந்து சொல்லு. நான் உனக்குச் சரியான யோசனை யெல்லாம் சொல்லித் தருகிறேன். பார்த்துக்கலாம்...!" என்றாள் அவள் ஒருவிதமாக அஞ்சுகத் தைப் பார்த்துக் கொண்டே.

குப்பம்மாள் எத்தகைய மனநோக்கத் தோடு பேசுகிறாள் என்பதை அஞ்சுகம் வெகு சுலபமாகப் புரிந்து கொண்டான். ஆனால் அந்தச் சமயம் அவளிடம் சந்தோஷ மாகவே விடைபெற்றுக் கொண்டு போய் விட வேண்டும் என்ற காரணத்துக்காக அவன், "சரி, அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி வைத்தான். அஞ்சுகம் குப்பம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தபோது ஒரு மூலையில் சொக்கன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். குப்பம்மாள் அவனை வெளியே போகச் சொல்லியதும் அவன் வேறெங்கா வது தன் வேலையைக் கவனிக்கப் போயிருப் பான் என்றுதான் அஞ்சுகம் நினைத்தான். ஆனால் அவன் போய் விடுவானா? அப் பொழுது அவன் நினைவெல்லாம் அஞ்சுகத் தின்மேல்தானே இருந்தது. அவனை அங் கிருந்து போக விடாமல் பாதுகாக்க வேண்டுமென்பதுதானே அவன் எண்ணம்?



அஞ்சுகம் இனி அவனிடமிருந்து தப்பிச் செல்ல வேண்டுமே? எப்பொழுது குப்பம் மாவிடமிருந்து தப்பி விட்டானோ, சொக்க னிடமிருந்து தப்புவது அவனுக்குக் கடின மாகப்படவில்லை. அவன் தன் மீது ஒரு கண் வைத்திருக்கிறான், தன் மீது ஆதியி லிருந்தே அவனுக்கு அளவு கடந்த ஆசை இருக்கிறது என்பதை யெல்லாம் அஞ்சுகம் நன்கு உணர்ந்திருந்தான். அதை நினைக்கும் போது அவன் மீது அவனுக்கு ஒருவித மான அனுதாபமும் பச்சாத்தாபமும்தான் ஏற்பட்டன. அவன்மீது வைத்துள்ள சிறிது மதிப்பிற்காகவும் அனுதாபத்துக்காக வும் அவனுடைய காதலை ஏற்றுக் கொள்ள அவன் சித்தமாய் இல்லை. அவனைக் கலியா ணம் செய்து கொள்ளவும் தயாராயில்லை.

சொக்கன் அஞ்சுகத்தைக் கண்டதும் வியப்புடன், "எங்கே கிளம்பி விட்டாய்?" என்று கேட்டான்.

"நான் எங்கே போனால் உங்களுக் கென்ன...!" என்றான் பளிச்சென்று.

"இல்லை—கேட்டேன். நான் கேட்கக் கூடாதா? உன் மீது எனக்கு எவ்வளவு அன்பு, எவ்வளவு பாசம், எவ்வளவு காதல்...?" என்றான்.

"எல்லாம் அசாத்தியமாய்த்தான் இருக் கின்றன. ஆனால் என்னுடைய காட்டமேல்



ஒருவர்:—என்ன சார்! குஞ்சாலாடு ரொம்ப மோசமாக இருக்கிறது. நீங்கள் மட்டும் ருசித்துத் தின்கிறீர்களே!

மற்றவர்: எதா யிருந்தாலும் நம் நாட்டில் செய்தது என்ற ஒரே காரணத்தினுல் நன்கு ரசித்துச் சாப்பிட்டு விடுவது என் வழக்கம்!

லாம் வேறு. நான் எங்காவது ஒழுங்காக வாழ நினைக்கிறேன்...'' என்றான்.

''தாராளமாக ஒழுங்காக வாழலாம். ஆனல் இடம்......? ஒருவேளை நீ என்னைக் கல்யாணம் செய்துகொண்டால்...''

''உங்களைக் கலியாணம் செய்து கொண்டால்தானு? இவ்வளவு பெரிய உலகத்தில் ஒழுங்காக ஒருவர் வாழ இடமே இல்லையா? மனசு ஒழுங்காகி விட்டால் இடம் எத்தனையோ உண்டு!'' என்றான்.

''இதெல்லாம் கதை—வெறும் கதை—சினிமாவுக்குக்கூடப் பொருந்தாது. நானும் ஒழுங்காகத்தான் இருக்கேன். ஆனல் எங்காவது ஏமாந்தவன் சட்டைப் பையைக் குறி வைக்காவிட்டால் தினமும் ஒரு மதத்தண்ணிக்குக்கூட வழி ஏற்படாது!'' என்றான் சொக்கன்.

''உங்களுக்கு அப்படி இருக்கலாம். ஆனல் நான் ஒழுங்காக வாழ ஒரு நல்ல இடம் கிடைத்து விட்டது'' என்றாள்.

''நல்ல இடம் கிடைத்துவிட்டதா? அது எந்த இடம்?'' என்றான் ஆர்வத்தோடு.

அவள் சிறை அதிகாரி கடிதம் கொடுத்ததைப் பற்றியும், மேகராஜபுரத்துக்குப் பார்வதியம்மாள் வீட்டில் வேலை ஒப்புக்கொள்ளப் போவதைப்பற்றியும், அதற்குக் குப்பம்மாவும் சம்மதம் கொடுத்து விட்டதையும் அவனிடம் சொன்னாள்.

அவன் சிறிது நேரம் யோசித்தான். குப்பம்மாள் இவ்வளவு எளிதாக அவளை வெளியிடத்துக்கு வேலைக்கு அனுப்ப அனுமதித்தது தான் அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது. வஞ்சனையும், கபடமும் கொண்ட குப்பம்மாள் ஏதோ காரணத்தோடுதான் அஞ்சுகத்தை இவ்வளவு எளிதாக விட்டு விட்டாள் என்று அவன் முடிவு செய்தான். அஞ்சுகத்தைப் போன்ற பெண் ஒரு வீட்டில் வேலை செய்து கடுமையாக உழைத்துத் தன் உடம்பை வாட்டிக் கொள்வதை அவன் விரும்பவில்லை. அவள் அழகாகச் சுகமாக வாழ்க்கை நடத்த வேண்டிய உன்னதப் பிறவி என்பதுதான் அவனுடைய தீர்மானம். ஆனல் குப்பம்மாளே அஞ்சுகத்துக்கு அனுமதி கொடுத்து விட்டாள் என்ருல் அவளைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதை அவன் உணர்ந்தான். குப்பம்மாள் ஏதோ வஞ்சகமான எண்ணமில்லாமல் அவளுக்கு அனுமதி கொடுத்திருக்க மாட்டாள் என்றும் அவன் உணர்ந்தான்.

அஞ்சுகத்திடம் ஒரு அழகு இருந்தது. அவள் நடை, போக்கு, பார்வை, பேசுவது எல்லாவற்றிலும் அந்த அழகு மிளிர்வதை அவன் அறிந்தான். பொதுவாக, அது அவனை வசீகரித்தது. அஞ்சுகம் பத்திரமாகக் காப்பாற்றி வைக்கக் கூடிய சித்திரப் பதுமை என்பது அவன் எண்ணம். அவளுக்காக அவன் எதையும் செய்யச் சித்தமாய் இருந்தான். உண்மையாகவே அவள் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தால் தன் திருட்டுத் தொழிலையெல்லாம் விட்டு விட்டு ஏதாவதொரு நல்ல வழியில் ஜீவிக்க நினைத்தான். சொக்கன் வாய்ச் சவடாலாக ஏதாவது பேசிக் கொண்டிருப்பானே தவிரத் துணிகரமான திருட்டு எதிலும் அவன் ஈடுபட மாட்டான். நீதி, நியாயம், சத்தியம், தர்மம் இதற்கெல்லாம் சிறிது பயந்தவன். ஆபத்தில்லாத சுலபமான சில்லறைத் திருட்டுக்களில் தான் அவன் அதிகம் சம்பந்தப்படுவான். பாவம்! அப்பொழுது அவன் அஞ்சுகத்திடம் தன் மனத்திலுள்ளதை அப்படியே சொல்லிவிட நினைத்தான். சினிமாவில் கதாநாயகன் உணர்ச்சி நிறைந்த காதல் கட்டத்தில் எப்படிப் பேசுவானே அப்படித்தான் அவன் அப்பொழுது அஞ்சுகத்திடம் பேசினன். ''அஞ்சுகம்—நானிருக்க நீ ஏன் அஞ்ச வேண்டும்? நீ தவருன வழியில் சென்று தவிக்கப் போகிறாய். என்னுடைய வாழ்க்கையை உன்னுடைய வாழ்க்கையோடு பிணைத்து வைத்துக் கனவு கண்டு காலத்தைக் கடத்துகிறேன் நான். காரணம் காதல்—நான் கள்ளன்—ஆனல் என் காதல் கள்ளக் காதலல்ல. உண்மையாக உள்ளக் காதல். உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு கண்ணுக்குக் கண்ணாக வைத்துக்

காப்பாற்ற நினைக்கிறேன். கண்ணே! என் எண்ணத்தை மண்ணாக்காதே. என் மனம் புண்ணாகிப் புழுங்கி விடும். பண்ணாத தவமெல்லாம் நான் பண்ணி யிருப்பதால்தான் நீ பெண்ணாகப் பிறந்திருக்கிறாய். என் சொல்லைக் கேட்டால்தான் உலகத்தில் உனக்கு வாழ்க்கை, சுகம், சந்தோஷம், சௌக்கியம், சௌபாக்கியம் எல்லாம்!'' என்றான் உணர்ச்சிப் பரவசத்தோடு குதித்துக்கொண்டே. அவன் கதாநாயகன் போல் பேசினாலும் அவன் அணிந்திருந்த கட்டம் போட்ட சட்டை, அந்தச் சட்டையின் காலருக்கு மேல் கழுத்தைச் சுற்றிக் கட்டிச் சுருக்கிட்டிருந்த கறுப்புக் கைக் குட்டை, கறுக்கு மீசை, ஒரு புறமாக வாரிவிடப் பட்டுப் 'பம்' மென்று தூக்கிக் கொண்டிருக்கும் கிராப்புத் தலை—இவைகளெல்லாம் கதாநாயகியை வஞ்சிக்க வரும் முரடனைத் தான் படம் பிடித்துக் காட்டுவது போல் இருந்தன.

அஞ்சுகம் அப்பொழுது ஒரு தர்மசங்கடமான நிலையில் இருந்தாள். சொக்கனின் விருப்பத்தை அவள் அறிவாள். அவன்மீது அனுதாபமும் பச்சாத்தாபமும் அவளுக்கு இருந்தாலும் அவனுடைய அபிப்பிராயங்களுக்கு இணங்க அவள் இஷ்டப்படவில்லை. மெதுவாக அவனிடமிருந்து எப்படித் தப்பித்துப் போவது என்பதிலே அவள் கவனம் இருந்தது.

"தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள். என்னை என்னுடைய மனப்போக்கின்படி விட்டுவிடுங்கள். நீங்கள் என்மீது வைத்துள்ள அன்பாலும் அபிமானத்தாலும் எனக்கு எவ்வளவு நல்லது செய்ய வேண்டு மென்று நினைக்கிறீங்க என்று எனக்குத் தெரியும். நீங்கள் நினைக்கிறபடி நான் இல்லை—என்னுடைய எலும்பு தேயும் வரையில் உழைத்தாலும் மானத்தோடும், சுயமாகவும், உண்மையாகவும் சம்பாதித்து என் ஜீவனத்தை நடத்தத்தான் ஆசைப்படுகிறேன்'' என்றாள் அஞ்சுகம் தீர்மானமான குரலில்.

"நீ அதை மாத்திரம் மறந்து விடு, அஞ்சுகம்! பேசும் அளவுக்கு எல்லாம் நடந்து விடுவதில்லை. நாம் ஒழுங்காக வாழ நினைத்தாலும் உலகம் நம்மை ஒழுங்காக வைத்திருப்பதில்லை. நீ ஒழுங்காகத்தான் நடந்து கொள்வாய். ஆனால் நீ வேலைக்குப் போகும் இடத்தில் நீ ஒரு தடவை சிறை சென்று வந்தவள் என்பதை மறந்துவிட மாட்டாங்க. அதனால் உனக்கு ஏற்படக் கூடிய துன்பங்கள் எப்படிப்பட்டதாய் இருக்கும் என்று எனக்குத் தெரியும். நிச்சயம் ஒரு நாள் நீ அந்த இடத்தை விட்டு வேறு புகலிடம் இல்லாமல் இந்த இடத்துக்கு ஓடி வந்து விடப் போகிறாய். இதை வேண்டுமானால் பார்த்துக் கொள். இந்தச் சொக்கன் வார்த்தை வீண் போகாது. நிச்சயம்!'' என்றான் அவன்.

"சரி! கடவுள் இருக்கிறார். நீங்கள் சொல்கிறபடி அப்படி மோசமாக எதுவும் நடந்து விடுமென்று நான் நினைக்க வில்லை. நடந்தால் அதுவும் ஏதோ விதிதான். ஆனால் தயவு செய்து என்னை இப்பொழுது விட்டு விடுங்கள். நான் போய் வருகிறேன்'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாக நடந்தாள் அஞ்சுகம்.

சொக்கன் அதற்கு மேலும் அவளைத் தடுத்து நிறுத்த விரும்ப வில்லை. அவளை அந்தச் சமயம் பலவந்தமாகத் தடுத்து நிறுத்திச் சச்சரவு செய்து தன்மீது அவள் கொண்டுள்ள சிறிது அன்புக்கும் நாசத்தைத் தேடிக் கொள்ள அவன் விரும்ப வில்லை. கொஞ்சம் விட்டுப் பிடிப்பதுதான் அவனுக்கு நல்லதாகப் பட்டது. அவள் எங்கே ஓடி விட்டாள்? பக்கத்திலுள்ள கிராமத்துக்குத்தானே வேலைக்குப் போகிறாள். எப்படியும் ஒரு நாள் அவள் நிச்சயம் திரும்பி வந்து விடுவாள் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு. "அஞ்சுகம்! ஒரு சமயம் நீ ஆபத்தில் ஓடி வரப் போகிறாய். அந்தச் சமயத்தில் இந்தச் சொக்கன்தான் உன்னைக் காப்பாற்றப் போகிறான் என்பதையும் நீ மறந்து விடாதே'' என்று எச்சரிக்கையாகச் சொல்லி அவளை விட்டு விட்டான்.

சொர்க்கப் படம் விளையாடுகிறவர்கள் இரண்டு பெரிய பாம்புகள் வாயிலிருந்து தப்பி மேலே சென்றதுபோல் 'இரண்டு பெரிய கண்டத்திலிருந்தும் தப்பி விட்டோம்' என்ற மன நிம்மதியோடு மேகராஜபுரத்தை நோக்கி வெகு வேகமாக நடந்தாள் அஞ்சுகம். (தொடரும்)

நவபாரத தரிசனம்

என்ற தலைப்பில் வெளியாகி வரும் பிரயாணக் கட்டுரை
அடுத்த இதழில் முடியும்.

இல்வாழ்க்கையின் வெற்றி

வசுமதி ராமசாமி

அன்புள்ள சுஜாதா,

நான் இதற்கு முன் கடிதத்தில் தாம்பத்தியத்தைப் பற்றி எழுதினேன். இப்பொழுது அதை எப்படி வெற்றிகரமாக நடத்திக்கொள்வது என்பதைப் பற்றிச் சொல்லப் போகிறேன். ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்து வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயற்சி செய்.

தற்காலத்தில் மனைவியின் பொறுப்பு அதிகமாகிவிட்டது. சிநேகிதர் போன்று எல்லாக் காரியங்களிலும் ஒத்துழைக்கும் உயர்ந்த குணம் படைத்த மனைவியைத்தான் தற்கால நாகரிகக் கணவன் தேடுகிறான்.

வாழ்க்கை வழவழப்பான தார் ரோடில் 'ப்யூக்' வண்டியில் போவது போன்றதல்ல. மேடும் பள்ளமுமான கிராமத்துப் பாதையில் போகும் கட்டை வண்டி போல் இருக்கும். அநேக ஏற்றத் தாழ்வுகள் நம்மோடு உறவாடுகின்றன. புறம்பாக நடைபெறும் சிறுமை, பெருமைகளினால் தாம்பத்திய அன்பு மாறுபடுவது மிகமிகத் தவறென்று நான் கருதுகிறேன். எல்லோருக்கும் இளம் தென்றல் எப்பொழுதும் வீசுவதில்லை. பெருங்காற்று, சொல்லப் போனால் புயல் காற்றுகூட, சிலர் வாழ்வில் வீசுகிறதல்லவா? எனவே, உள்ளன்பு, ஒற்றுமை இவைகளை வளர்த்துக் கொண்டால் துன்பத்திலும் இன்பம் அடையலாம்.

கணவனுடைய சிறு சிறு குற்றங்களை நாம் குறை கூற வேண்டிய அவசியமில்லை. முடிந்தால் அதை ஒரு பெருமையாகக் கூடச் சொல்லிக் கொள்ளலாமென்றுதான் நினைக்கிறேன். நம் குழந்தைகளைப்போல் அவர்களுக்கும் சில விஷயங்கள் தெரியாதென்றுதான் நினைத்துக் கொள்வோமே? நமக்குப் பிடித்ததுதான் அவர்களுக்கும் பிடிக்கவேண்டுமென்று அவசியமில்லை. வேறுபட்ட அபிப்பிராயம், குணம் இருந்தால் ஒருவருக்கொருவர் மனக் கவர்ச்சி உண்டாகுமென்று ஒரு மனோதத்துவ நிபுணர் சொல்லி யிருக்கிறார்.

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் ஒரு அம்மாள் தாம்பத்தியத்தில் வெற்றி யடைந்தவர் என்று எல்லோராலும் பாராட்டப்பட்டவர். அதன் ரகசியம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தேன். அந்த அம்மாளுடைய கணவரிடம் உலகமும் வியந்து பெருமைப்படுத்த வேண்டிய விசேஷகுணங்கள் இருந்து வந்தன. அதனால் மட்டும் வெற்றி உண்டாகுமா? இல்லை. வீட்டில் நடைபெறும் சிறு சிறு விஷயங்களுக்கு அவர் பொறுப்பு எடுத்துக் கொள்வதில்லையென நினைந்து அந்த அம்மாள் பூதக் கண்ணாடியில் வைத்துப் பார்த்து ஒரு நாளும் குறைப்பட்டதே இல்லை. அந்தம்மாள் அப்படிச் செய்யாததுதான் வெற்றியின் ரகசியம். கணவருக்குக் கௌரவம் கொடுத்துக் குடும்பம் நடத்துகிறார். இந்த முறையை ஒவ்வொரு பெண்மணியும் தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். கணவரின் மனம்மகிழ்ச்சியில் இருப்பதற்காகப் பெண்களாகிய நாம் சில தியாகங்களைச் செய்யத்தான் வேண்டும். அது வெற்றி அளிக்கும்.

•• •• ••


கல்கத்தாவில் ஒரு அதிசய வழக்கு நடந்ததாம். தன்னுடைய சமையலையோ அலங்காரத்தையோ பற்றிக் கணவன் பாராட்டுவதில்லை யென்பது மனைவியின் குற்றச்சாட்டு. கணவன் வேலைத் தொந்தரவினால் அப்படியெல்லாம் சொல்ல முடியவில்லை யென்று வழக்காடினார். வழக்கும் விசித்திரமாக நடந்தது. மனைவி தரப்பு வக்கீல் தம் சாமர்த்தியத்தை முழுதும் உபயோகித்துத்தான் பேசினார். வழக்கு ஒத்திப் போடப்பட்டது.

நீதி ஸ்தலத்துக்கு வெளியில் வந்ததும், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கணவர் 'எங்கே போகப் போகிறாய்?' என்று மனைவியைக் கேட்டாராம். 'ஏன்? நம்முடைய வீட்டுக்குப் போகவேண்டியதுதான்' என்று அவர் மனைவி சொன்னாளாம்! வக்கீலுக்கு ஒரு நாளைய வரும்படிதான்!

•• •• ••

வயதில் மிகச் சிறியவளான ஒரு சகோதரி அடிக்கடி "கணவர் – மனைவி விஷயமான சண்டையில் நாம் தலையிடக் கூடாது. உண்மை உருப்படியாக நமக்குத் தெரிய முடியாது" என்று சொல்லுவாள். எவ்வளவு அநுபவமுள்ள வார்த்தைகள்.

ஒரு டாக்டரின் மனைவி எப்பொழுதும் நோயாளி! அந்தம்மாளுக்குத் தன் கணவரின் வைத்தியத்தில் நம்பிக்கை இல்லாததினால் நாட்டு மருந்து சாப்பிடுவதாகச் சொல்லுவாள்! பரிதாபகரமானதல்லவா? கவியரசர் பாரதியார் கணவரின் புகழ் மனைவியிடம் இருப்பதாகவே கூறுகிறார். "மானம் சேர்ப்பது மனைவியின் வார்த்தைகள்" என்று அழுத்தம் திருத்தமாகப் பாடி யிருக்கிறார்.



கணவனும், மனைவியும் வீணையும் - நாதமும் போல் இருந்தால்தான் இல்லற வாழ்க்கையில் வெற்றி பெறலாம். அடுத்தபடியாகத் தன்னுடைய சகிப்புத் தன்மையால் உலகத்தின் போற்றுதலைப் பெறலாம். ஒரு நாள் கணவனின் பூரண அன்பையும் அடைந்து விடலாம்.

இப்படிக்கு,

பூமாதேவி


JASMINE
கவர்ச்சியுடன்
களிப்பை
அளிக்கும்
ஜாஸ்மின்
ரேயான் ஸில்க்
துணிகள்
ஜாஸ்மின் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், பம்பாய்-2.

தோற்றம்
23-7-1856

மறைவு
1-8-1920



லோகமான்ய பாலகங்காதர திலகர்





திலகர் வாழ்க்கையில் சில காட்சிகள்

*

1. பாலகங்காதர திலகரும் அவருடைய குடும்பத்தினரும்.


2. திலகர் தமது சுற்றுப் பிரயாணத்தின்போது நடுவழியில் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் தங்க நேரிட்டது. அப்போது அவர் ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே தம்முடைய ஸ்நானத்தை முடித்துக் கொண்டிருர்.

3. சுதந்திரத்தைக் கோரிப் பிரிட்டனுக்குச் சென்ற இந்திய காங்கிரஸின் தூதுகோஷ்டியினருக்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அங்கத்தினர்கள் வரவேற்பு உபசாரம் நடத்தினுர்கள். திலகர், பிபின் சந்திரபால், சரோஜினி தேவி முதலிய தேசத் தலைவர்களைப் படத்தில் காணலாம்.





1. திலகர் தமது கேஸரி பத்திரிகையின் தலையங்கத்தைத் தமது இல்லத்தில் அமர்ந்து திருத்துகிறார். 2. அந் நாட்களில் பாரதத்தைத் தட்டி எழுப்பிய அரசியல் திரிமூர்த்திகளான லாலா லஜபதிராய், பாலகங்காதர திலகர், விபின் சந்திரபாலர் மூவரும் இனிய நண்பர்கள். மக்கள் இவர்களை லால், பால், பால் என்று உரிமையோடு அழைத்து மகிழ்வார்கள்.





ஜூலை 21ம் முதல்
சென்னை
மற்றும்
தென்னாடெங்கும்
ஸ்வராஜ் பிக்சர்ஸ்
அளிக்கும்...
பத்மினி பிக்சர்ஸ்
சிவசக்தி
டைரக்ஷன் ப. நீலகண்டன்
சௌகார் ஜானகி • C.T. ராஜகாந்தம் • சாயிராம்
C.V.V. பந்துலு
உரிமையாளர்கள்:
சுப்பு & கோ (பிரைவேட்) லிமிடெட்
மதராஸ், 17.

வட்ட மேஜை

ஆதரவு உண்டு

தட்சிணப் பிரதேச அமைப்புக்குத் தமிழ் மக்களிடம் ஆதரவு கிடையாது என்று முதன் மந்திரி திரு காமராஜரும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு கக்கனும் பேசி வருவது வருந்தத் தக்கது. ஏனெனில் தமிழ் மக்கள் தட்சிணப் பிரதேச அமைப்புக்குத் தங்கள் ஆதரவைப் பல விதங்களில் தெரிவித்துள்ளனர். உதாரணமாகச் சமீபத்தில் பார்லிமெண்டுக்குத் திருவள்ளூர் தொகுதியில் இருந்து ஓர் உப தேர்தல் நடைபெற்றது. அதில் தட்சிணப் பிரதேச அமைப்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரு சுயேட்சை அபேட்சகரை மக்கள் தோற்கடித்து ஜாமீன் தொகை இழக்கும்படி செய்தனர். இதிலிருந்து மக்களிடம் தட்சிணப் பிரதேச அமைப்புக்கு ஆதரவு உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம். தட்சிணப் பிரதேசப் பிரசாரக் கமிட்டி இன்னும் தீவிரப் பிரசாரம் செய்தால் இந்த ஆதரவு மேலும் மேலும் பெருகுமென்பதில் சந்தேகமில்லை.

தாம்பரம்
4—7—56

எஸ். ஆர். சௌரிராஜன்

★

கோள்ளிடம் பாலம்

ஆணிக்காரன் சத்திரத்தில் அகண்ட கொள்ளிடத்தின் மீது இருந்த வண்டிப்பாலம் 1903-ல் உடைந்தது. அதிலிருந்து தென்னார்காடு - தஞ்சாவூர் ஜில்லாக்களிடையே போக்குவரத்துத் தொடர்பு குறைந்தது. அதே இடத்தில் உலகில் புது மாதிரியான அமைப்புடன் வண்டிப்பாலம் ஒன்றைச் சுமார் முப்பத்தைந்து லட்சம் ரூபாய் செலவில் சர்க்கார் நிர்மாணித்து வருகின்றார்கள்.

அப் பாலத்தின் மீது வருகிற ஜனவரியில் போக்குவரத்து ஆரம்பமாகி, தென்னார்காடு—தஞ்சாவூர் ஜில்லாக்களுக் கிடையே விவசாயம், வியாபாரம் சம்பந்தமாகத் தொடர்பு அதிகரிக்கும். அதனால் சிதம்பரம், சீர்காழி, மாயூரம் போக்குவரத்து அதிகரிக்கும். அது மட்டுமல்ல ; புதுச்சேரியையும், காரைக்காலையும், நாகப்பட்டினத்தையும், கூடலூர், பறங்கிப்பேட்டை, சிதம்பரம், சீர்காழி, தரங்கம்பாடி வழியாக இணைக்கும் சாலைத் தொடர்பும் உண்டாகும்.

சீர்காழி தாலூக்காவை இரண்டாகப் பிரித்துக் கொண்டிருக்கின்ற வடிகால் உப்பனாற்றின் மீது ஒரே ஒரு வண்டிப்பாலம் சட்டநாதபுரத்தில் மெயின் ரஸ்தாவில் இருக்கின்றது. அதுவும் குறுகலாக உள்ள பழைமையான பாலம். அதன்மீது அதிகப் போக்குவரத்து ஏற்பட்டு ஆபத்து ஏற்படாமலிருக்கவும், பல வழிகளில் போக்குவரத்தைப் பிரித்து விடவும், ஆணிக்காரன் சத்திரம், பட்டவர்த்தி ஆகிய ஊர்களை, குன்னம், வள்ளுவக்குடி, நல்லூராயது வழியாக இணைக்கக்கூடிய இரண்டாவது முக்கிய சாலையும், செம்மங்குடி-காரைமேட்டை, திருத்தோணிபுரம், தில்லைவிடங்கன், திட்டை வழியாக இணைக்கக் கூடிய மூன்றாவது முக்கிய சாலையும் சர்க்கார் செலவில் நிர்மாணிக்க வேண்டும். மேலும் சீர்காழி கடைத்தெருவிலும், வைத்தீசுவரன்கோவில் கடைத்தெரு மூலையிலும் சர்க்காருக்குச் சொந்தமான சாலை குறுகலாக இருக்கிறது. மக்களுக்கு உபயோகமான இந்தச் சாலைகள் உடனடியாக விசாலப் படுத்தப்பட வேண்டும்.

சீர்காழி
7—7—56

எஸ். வி. முத்தையா

★

சொல்லும் செயலும்

மனிதன் கடைப்பிடிக்க வேண்டியவைகளில் முக்கியமானது காலந் தவறாமல் இயற்றும் செயல்களே யாகும். ஆங்கிலேயரிடமிருந்து நம் நாட்டுக்கு ஒவ்வாத பல விஷயங்களைப் பிரயாசையுடன் பயின்றோம். முக்கியமாக அவர்களிடமுள்ள காலந் தவறாமையைத் தள்ளி விட்டோம்.

இப்பொழுது ஆறு மணி நாடகமோ, கூட்டமோ ஆரம்பமாகும் என விளம்பரம் தடபுடலாய் நடக்கும். ஆனால் ஆரம்பிப்பது ஏழு மணிதான். சில சமயங்களில் இன்னும் தாமதமாகக்கூட ஆரம்பமாகும்.

பிரபல அரசியல் தலைவர்கள் என்ன, உயர் தர அதிகாரிகள் என்ன, இவர்கள் கலந்து கொள்ளும் எல்லாக் கூட்டங்களும்கூட முரண்பாடாகவே தொடங்கி முடிகின்றன. ஏன் காலாகாலத்தில், குறித்த நேரத்தில் கூட்டங்களை நடத்தக் கூடாது?

சுதந்திரக் குடியரசில் ரயில்கள்கூட அதன் அதன் இஷ்டத்துக்கு வருவதும் புறப்படுவதுமா யிருக்கின்றன. ஆனால் ரயில்வே கால அட்டவணைப் புஸ்தகத்தில் மட்டும் நேரம், நிமிஷம், தவறாமல் குறிக்கப்பட்டிருக்கும்.

மேலும் ஒவ்வொரு புகை வண்டி நிலையத்திலும் 'நேரம் கழித்து வரும் ரயில்கள்' என்று எழுதி ஒரு போர்டு காணலாம். ஏனெனில் எந்த ரயிலும் குறித்த நேரத்தில் வராது என்பதை அது ஊர்ஜிதம் செய்கிறது. ஆரம்பத்தில் நிமிஷக்கணக்கில் தாமதமான து போக, இப்பொழுது மணிக்கணக்கிலும் நாள் கணக்கிலும் தாமதமாகிறது.

கொட்டகைகளில் பீடி, சிகரெட் பிடிக்கக் கூடாது என்ற அறிக்கை காணப்பட்டவுடன் அதுவரை மறந்து சும்மா இருந்தவர்களும் புகைமண்டலம் எழுப்பத்தொடங்குகிறார்கள்.

இந்த 'முரண்பாடுகள்' எல்லாம் எப்பொழுது தீர்ந்து மக்கள் எல்லோரும் முரண்பாடின்றி வாழ்வார்களோ தெரியவில்லை.

கூளப்பாடு
23—6—56

ஆர். நாராயணன்

கிராம வைத்திய உதவி

இன்று கிராமப் பிரதேசங்களுக்கு ஏற்ற வாறும் நிரந்தரமாகவும் தங்கிக் கிராமத்தா ருடன் ஒத்துழைக்க, சென்னை சர்க்காரால் நிறுவப்பட்ட இந்திய வைத்தியக் கல்லூரியில் பயிற்சி பெற்ற கிராம வைத்தியர்களை உப யோகப் படுத்தலாம் அல்லவா? ஏன் அவர்களை மூடி யிருக்கும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தி லுள்ள கிராம வைத்தியசாலைகளுக்கு நிய மிக்கக் கூடாது? இப்படித் தேர்வு பெற்ற வர்கள் நாட்டு வைத்தியத்திலும் மேனாட்டு முறையிலும் போதுமான அளவு பயிற்சி பெற் றிருக்கும் போது இவர்களை ஏன் விலக்க வேண்டும்? இன்று இப்படித் தேர்வு பெற்ற ஆயிரத்துக்கு மேற்பட்ட கிராம வைத்தியப் பட்டதாரிகள் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி அரசாங்கம் எந்தவிதக் கவலையும் படுவ தாகத் தெரியவில்லை.

மக்களுக்கு வைத்திய சேவை அவசியம் எனக் கருதும் அரசாங்கம் கிராம மக்களுக் காகச் சேவை செய்யத் தயாராயுள்ள கிராம வைத்தியர்களைப் புறக்கணிப்பது ஏன்? கூன் மையில் மாற்றுந்தாயின் மக்களாகக் கிராம வைத்தியர்களைக் கருதாமல் அவர்கள் சேவை களையும் பயன்படுத்தி, மூடியிருக்கும் ஸ்தல ஸ்தாபன கிராம வைத்தியசாலைகளைத் திறப்ப தற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கொளத்தூர்
6—7—56

ரா. ரங்கநாதன்


கீரை



பால்

பூரண பெறமுடியுமா?

அது அளிக்கிறது. கண்பார்வையைப் பாது காக்கவும், சருமவியாதிகள் மற்றும் தொத்து வியாதிகள் வராமல் தடுக்கவும் உதவும் வைட்டமின் 'ஏ' இதில் ஏராளமாக உள்ளது. மேலும் சர்க்காரின் உயர்ந்த தர விதிகளுக் குட்பட்டு வனஸ்பதி தயாரிக்கப்படுகிறது.

சில பிரத்யேக சமையல் பதார்த்தங் களுக்கு நீங்கள் நெய் உபயோகிக்க விரும் பலாம். ஆனால் தினசரி சமையலுக்கு வனஸ் பதி உபயோகித்தால் குறைந்த செலவில் விருந்த போஷாக்கு கிடைக்குமென்று நீங் கள் தெரிந்து கொள்வீர்கள்.





புகழ்பெற்ற இந்தக் கம்பெனிகள் தயாரிக்கும் வனஸ்பதியை வாங்குங்கள்

ஹிந்துஸ்தான் வனஸ்பதி மானு. கோ. ப்ரைவேட் லிட்.	பம்பாய்
ஹிந்துஸ்தான் டெவலப்மெண்ட் கார். லிட்.	ரிஷ்ரா
[illegible] வனஸ்பதி ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible] ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.	[illegible]
[illegible] கோல்ட் புட் ப்ராடக்ட் கோ. லிட்.	[illegible]
வெஸ்ட்டோர்ன் இந்தியா வெஜி. ப்ரொ. லிட்.	[illegible]
வெஜிடபிள் விடமின் புட்ஸ் கம்பெனி லிட்.	[illegible]
வெஜிடபிள் ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible] இண்டஸ்ட்ரீஸ் லிட்.	[illegible]
[illegible] வெஜிடபிள் ஆயில் ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible] வெஜிடபிள் ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
மோதி வனஸ்பதி மான்யுபாக்சரிங் கோ. ..	மோடிநகர்
[illegible] கெமி. & இண்ட. கார். லிட்.	[illegible]
[illegible] & [illegible] ஆயில் கோ. ப்ரைவேட் லிட்.	[illegible]
[illegible] வனஸ்பதி ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible] வெஜிடபிள் ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible] ப்ரைவேட் லிட்.	[illegible]
[illegible] வனஸ்பதி	[illegible]
[illegible] ஆயில் இண்டஸ்ட்ரீஸ்	[illegible]
[illegible] வெஜிடபிள் ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible] இண்டஸ்ட்ரீஸ் லிட்.	[illegible]
[illegible] வனஸ்பதி மான்யுபாக்சரிங் [illegible] ..	[illegible]
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.	பம்பாய்
[illegible] இண்டஸ்ட்ரீஸ் ப்ரைவேட் லிட்.	[illegible]
[illegible] மில்ஸ் கம்பெனி லிட். ..	[illegible]
[illegible] ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible] இண்டஸ்ட்ரீஸ் லிட்.	—
[illegible] வெஜிடபிள் ப்ராடக்ட்ஸ்	[illegible]
[illegible] புட் ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible] கம்பெனி (இந்தியா) ப்ரைவேட் லிட்.	[illegible]
இந்தியன் வெஜிடபிள் ப்ராடக்ட்ஸ் லிட்.	[illegible]
[illegible]	[illegible]
[illegible] வனஸ்பதி கம்பெனி லிட்.	[illegible]

வனஸ்பதி மான்யுபாக்சரர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் மெம்பர்கள்

வாழ்க திலகர் நாமம்

ரா. நா

"இந்திய விடுதலைக் கிளர்ச்சிக்குத் தந்தையெனும் பெயருக்குத் தகுதியுடையவர் யாரேனும் உண்டென்றால் அவர் பால கங்காதர திலகர் தான்."

இவ்வாறு மதிப்பிட்டுக் கூறியவர் இந்தியரல்ல; திலகர் பக்தர்களில் ஒருவருமல்ல. திலகரை ராஜத் துரோகி எனக் கூறி அவரை இழிவு படுத்தும் நோக்கத்துடன் 'இந்தியக் கொந்தளிப்பு' என்னும் நூலை எழுதிய ஸர் வாலண்டைன் சிரால் (Sir Valentine Chirol) என்பவர் தான்! அவரையும் அறியாமல் அவர் உண்மையைக் கூறிவிட்டார்!

"சிப்பாய்க் கலகம்" என அன்னியர் சிறுமைப் படுத்திய முதலாவது இந்திய சுதந்திர யுத்தம் 1857ல் தொடங்கிய தல்லவா? அதற்கு ஒரு வருஷத்துக்கு முன் அதாவது 1856 ஜுலை மாதம் 23ம் தேதி திலகர் இப் புனித பாரத புண்ணியபூமியில் அவதரித்தார். அவர் தமது திருப்பணியை உலகம் வியக்குமாறு நிறைவேற்றி விட்டு 1920ம் ஆண்டு ஆகஸ்ட் 1-ம் தேதி விண்ணுலகம் எய்தினார். அவர் அமரத்துவ மடைந்து இப்பொழுது முப்பத்தாறு ஆண்டுகள் ஆகின்றன.

"'லோக மான்யர்' என்ற பட்டம் திலகர் ஒருவருக்கே தகும்" என்று கூறிக் காந்திஜி அந்தப் பட்டத்தை அவருக்குச் சூட்டினார். அவ்வளவு சிறப்பு மிக்க மகானின் நூறாவது பிறந்ததின விழா நாளை யதினம் (23 – 7 – 56) தேசமெங்கும் கொண்டாடப்படும். இந்நன்னாளில் அவருடைய கல்யாண குணங்களையும் அறிவாற்றலையும், இணையற்ற தியாகத்தையும், மேதையையும், பாண்டித்யத்தையும், போதனைகளையும், தூய வாழ்க்கையையும் பாரத மக்கள் ஞாபகப்படுத்திக் கொண்டால்நாட்டுப் பணிக்கான ஊக்கமும் உளவலியும் பண்பாடும் பெறலாம்.

வாழ்க்கை வரலாறு

திலகர் மகாராஷ்டிரத்தில் ரத்னகிரி ஜில்லாவில் சிகல்கோவான்எனும் சிற்றூரில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் சித்பவன் என்ற அந்தண வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவருடைய பாட்டனார் ஏழைமையில் பிறந்தாலும் ஏராளமாகப் பொருளீட்டினாராம். ஆனால் அதில் திலகருக்குக் கிடைத்த பகுதி குடும்ப ஆலயத்தின் பராமரிப்புக்குப் பயன்படுத்தப் பட்டதாம்.

கங்காதரபந்த் என்பவரின் மூத்த புதல்வர் தான் நமது திலகர். அவரது பெற்றோர் அவரை ஆங்கிலப் பள்ளியில் சேர்த்தனர். திலகர் கல்வியில் விரைவாக முன்னேறிப் பரீட்சைகளிலெல்லாம் சிறப்பாகத் தேறிக் கடைசியில் சர்வகலாசாலைப் பட்டமும் பெற்று வெளி வந்தார்.

பி. ஏ. பரீட்சையில் தேறியதும் சட்டப் பரீட்சையில் வெற்றி பெற்று வக்கீலானார்.

ஆனால் படிப்பைக் கொண்டு பணம் சட்டுவதில் அவர் மனம் நாட்டம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, இளைஞர்களுக்குக் கல்வி புகட்டுவதன் மூலம் பொதுஜன சேவை புரிவதெனத் தீர்மானித்தார். அவர் தொடங்கிய புதிய ஆங்கிலப் பள்ளி பின்னர் பெர்க்குஸன் கல்லூரியாக மாறியது. இந்த ஆசிரியப் பணிக்கு அவர் பெற்றுக் கொண்ட ஊதியம் மாதம் எழுபத்தைந்து ரூபாய்தான்!

"நீர் இறந்தால், இந்த எழுபத்தைந்து ரூபாயில் உமது மரணச் சடங்குகள் செய்வதற்குக்கூடப் பணம் மிச்சமிருக்காதே" என ஒரு நண்பர் திலகரைக் கேட்டார். அதற்கு, "நான் இறந்தால் என் சடலத்தை சுகாதாரத்தை உத்தேசித்தாவது நகரசபையார் அப்புறப்படுத்திக் கொளுத்தி விடுவார்கள்" என்று திலகர் பதில் கூறினாராம்! அவருடைய தன்னலமற்ற மனப்பான்மையை இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

இளைஞர்கள் கல்வியறிவு பெற்றால் மட்டும் போதுமா? முதியோரை நாட்டுப் பணிக்கு எப்படித் தயாரிப்பது என்பது பற்றியும் அப்பொழுதே அவருக்குக் கவலை ஏற்பட்டது. உடனே "மராட்டா" என்னும் ஆங்கிலவாரப் பத்திரிகையையும் "கேஸரி" என்னும் மராத்தி சஞ்சிகையையும் 1881-ம் ஆண்டில் திலகர் தொடங்கினார்.

ஆனால் பெர்க்குஸன் கல்லூரி நிர்வாகிகள் தங்களது ஆசிரியர்கள் பிற துறைகளில் கவனம் செலுத்தக்கூடாது என்று தடைசெய்தனர். உடனே திலகரும் அவருடைய சக ஆசிரியரானஅகார்க்கரும் கல்லூரிப் பதவிகளை ராஜிநாமா செய்து விட்டுத் தங்கள்முழு நேரத்தையும் பத்திரிகை வளர்ச்சிக் காகவே செலவிட்டனர்.



திலகரும் அவரது உற்ற நண்பர் கனம் கபார்டேயும். கபார்டேயின் தலைப்பாகை அந்நாட்களில் மிகப் புகழ் பெற்று விளங்கியது!

ஆனால், பத்திரிகை வருவாயைக் கொண்டு பிழைப்பு செய்வனே நடத்த இயலாது என்பதை அறிந்து திலகர் ஒரு பஞ்சு பதனிடும் ஆலையில் கூட்டாளியாகச் சேர்ந்தார். அதில் நஷ்டம் வரவே அதை விட்டு விலகித் தமது இல்லத்தில் சட்ட வகுப்புகள் நடத்தத் தொடங்கினர். அதன்மூலம் அவருக்கு மாதம் நூற்றைம்பது ரூபாய் வரை வருமானம் கிடைத்து வந்தது.

தொல்லைகள் ஆரம்பம்

அந்தக் காலத்தில் 'பத்திரிகைச்' சுதந்திரம் என்பது மருந்துக்குக்கூடக் கிடையாது. கோல்ஹாபூர் சமஸ்தான நிர்வாக ஊழல்களைக் கண்டித்து எழுதியதற்காகத் திலகர் மீதும் அகார்க்கர் மீதும் வழக்கு தொடரப்பட்டு நான்கு மாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

பத்திரிகைகள் மூலமாக மட்டும் நாட்டு மக்களைத் தேசப்பணியில் ஊக்கங் கொள்ளச் செய்ய முடியாது என்பதை உணர்ந்து, மகாராஷ்டிரம் முழுதும் விநாயகர் விழாவும் சத்திரபதி சிவாஜி விழாவும் கொண்டாடுவதற்குத் திலகர் ஏற்பாடு செய்தார். இதனால் மக்களிடையே சமயப்பற்றும் நாட்டுப்பற்றும் பெருகின. அதன் மூலம் விடுதலைப் புரட்சிக்கும் போருக்கும் வித்தூன்றியவர், திலகர் பெருமான்தான்.

தந்திரமாகத் திலகர் சுதந்திர ஆர்வத்தை வளர்க்கிறார் என்பதை உணர்ந்த ஸர் வாலண்டைன் சிரால் "இந்த விழாக்களெல்லாம் வெறும் மேல் பூச்சு; உண்மையில் திலகர் புரட்சித் தீயை மூட்டி வருகிறார்" என்று ஆத்திரத்துடன் எழுதினார்.

1897 ல் புனா நகரிலே பிளேக் நோய் கண்டபொழுது அதன் சம்பந்தமான நிவாரண வேலையில் திலகர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அச்சமயம் அரசாங்கத்தின் சார்பாக நிவாரண வேலைக்கு நியமிக்கப்பட்ட ராண்ட் என்பவர் பேரில் பலவகைக் குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தன. அவரையும் அயர்ஸ்ட் என்பவரையும் யாரோ சுட்டுக் கொன்றுவிட்டனர்.

திலகர் தமது பத்திரிகைகளில் செய்து வந்த பிரசாரத்தினால்தான் இந்தக் கொலை நடந்ததென அதிகாரிகள் கூறி அவருடைய சஞ்சிகையில் வெளிவந்த சில கவிதைகளுக்காக அவர் மீது வழக்கு தொடர்ந்தனர். அதன் முடிவில் அவர் பதினெட்டு மாதங்கள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறை சென்றார்.

உண்மையில் அந்தக் கவிதைகளை அவர் எழுதவில்லை. கோர்ட்டார் கேட்ட கேள்விக்கு அவைகளைத் தாம் எழுதவில்லை என்று பதில் கூறியிருந்தால் வழக்கு வாபஸ் ஆகியிருக்கலாம். ஆனால், திலகர் பெருமான் அவ்விதம் செய்யச் சிறிதும் விரும்பவில்லை.

சிறையில் திலகரின் உடல் நலம் குன்றத் தொடங்கியது. எனவே, மாக்ஸ் முல்லர், ஸர் வில்லியம் ஹண்டர், தாதா பாய் நௌரோஜி போன்ற பிரமுகர்களின் வேண்டுகோளின்படி சர்க்கார் திலகரைத் தண்டனைக் காலம் முடிவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே விடுதலை செய்தனர்.

சர்க்கார் இப்படித் தள்ளிக் கொடுத்த ஆறு மாத காலத்தைப் பின்னர் தமக்குச் சிறைத் தண்டனை கிடைக்க நேரிட்டால் அதனுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென அவரே வேண்டிக் கொண்டார்! அவ்வாறே 1908 ல் அவருக்கு கோர்ட்டார் ஆறு வருஷச் சிறைத் தண்டனை விதித்தபோது பழைய பாக்கியான ஆறுமாதத் தண்டனையும் சேர்க்கப்பட்டது!

இந்த இரண்டு சிறைவாச காலத்தில்தான், ஹிந்து நாகரிகம் மற்றெல்லாவற்றையும் விடத் தொன்மையானது என்பதை நிரூபிக்கும் 'ஓரியன்' (Orion), ஆரியர்களின் ஆர்க்டிக் வாசஸ்தலம் (Arctic Home of the Aryans) என்னும் இரு அருமையான நூல்களைத் திலகர் எழுதினார்.

1898 ல் விடுதலை செய்யப்பட்டதும் திலகர் சிவாஜியின் வாசஸ்தலமாகிய சிஙகாதில் ஓய்வுபெறச் சென்றார். ஆனால் பிறகு அவர் அந்த ஆண்டு இறுதியில் சென்னையில் நடந்த



வங்கப் புரட்சி வீரர் அரவிந்தரும்
சுதந்திரப் போர் வீரர் திலகரும்

காங்கிரசுக்கு விஜயம்செய்து விட்டுத் தென்னாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார். இந்தப் பிரயாணத்தின் பொழுது நமது தமிழகத்திலுள்ள தேவாலயங்களையும் தென்னாட்டினரின் சமயப் பற்றையும் கண்டு திலகர் பரவசமடைந்தார்.

காங்கிரசுக்குச் சேவை

திலகரும் கோகலேயும் 1889-ல் காங்கிரசில் சேர்ந்தனர். உண்மையில் கோகலேயை அரசியலில் ஈடுபடச் செய்தது திலகர்தான். பின்னர் திலகர் தீவிரமாகக் காங்கிரஸ் லட்சியங்களைத் தமது பத்திரிகைகள் மூலம் நாடெங்கும் பரப்பி வந்தார்.

1889-ம் ஆண்டில் பம்பாயில் நடந்த இந்திய தேசிய மகாசபையில்தான் திலகர் முதன் முதலாகக் கலந்து கொண்டார். மற்றத் துறைகளில் ஈடுபட்டு அவர் ஏற்கனவே மக்களிடையே புகழ் பெற்றிருந்ததால், அவரது காங்கிரஸ் பிரவேசம் நாட்டில் மிகுந்த உற்சாகத்தை உண்டாக்கியது.

அக்காலத்தில் காங்கிரஸ் மகாசபையின் நடவடிக்கைகள் பிரிட்டிஷாரிடம் யாசகம் கேட்கும் தோரணையில் இருந்தன. அந்த நிலை

வீரத் திலகருக்கு வெறுப்பைக் கொடுத்தது. அவர் காங்கிரசுக்கு உயிர் கொடுத்து, அதைப் பலம் பொருந்திய தேசப் பிரதிநிதி ஸ்தாபனமாகச் செய்ய விரும்பினார்.

1905-ல் கர்ஸன் பிரபுவின் வங்காளப் பிரிவினை, சுதேசி இயக்கமும், பயங்கரப் புரட்சி இயக்கமும் தோன்றக் காரணமாயிருந்தது. அதுவரை சில்லறைக் குறைகளைத் தீர்ப்பதிலேயே பெரிதும் கவனம் செலுத்தி வந்த காங்கிரஸ் மகாசபை சுயராஜ்ய லட்சியத்தை மேற்கொள்வதற்கும் இப் பிரிவினைக் கொடுமையே காரணமாயிருந்தது.

அப்போதுதான் இந்தியா வைஸ்ராயாக இருந்த கர்ஸன் பிரபுவின் விபரீத ஆட்சி தாண்டவ மாடியது. அவர் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு, இந்தியாவில் பெருகி வந்த தேசபக்தி வெள்ளத்தைத் தடுக்க முற்பட்டார்.

வங்காளப் பிரிவினை கர்ஸனின் மூளையிலிருந்து உதித்த திட்டம்தான். தேசிய இயக்கத்தில் முஸ்லிம்கள் சேராமல் தடுப்பதுதான் அத் திட்டத்தின் நோக்கம். அவ்விதம் தடுத்து விட்டால் கிழக்கு வங்காளத்தில் பெரும்பான்மையோராக உள்ள முஸ்லிம்களை வங்காளத்தில் தேசிய இயக்கத்துக்கு விரோதமாகத் தூண்டிவிடலாம் அல்லவா?

1906ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரசுக்குத் தலைமை வகித்த தாதாபாய் காங்கிரஸின் முப்பெரும் லட்சியங்கள் சுயராஜ்யம், சுதேசி, அன்னியச் சரக்கு பகிஷ்காரம் என முதன் முதலாகக் கம்பீரமாக முழங்கினார். இந்த நேரடிப் பிரகடனம் தீவிர வாதிகளுக்கு உற்சாகமளித்ததுடன், திலகர் செல்வாக்கு உச்ச நிலை அடைவதற்கும் காரணமாக இருந்தது.

1907-ல் நாகபுரியில் கூடவிருந்த காங்கிரஸை அந் நகர் தீவிரவாதிகளின் கோட்டையென அஞ்சி சூரத்துக்கு அதன் மிதவாத நிர்வாகிகள் மாற்றினர். கல்கத்தாவில் நிறைவேறிய தீர்மானங்களில் சிலவற்றைக் கைவிட்டதாலும், மற்றும் சிலவற்றை மாற்றியதாலும் எங்கும் தீவிரவாதிகளிடையே ஆத்திரம் அதிகரித்து வந்தது.

ஆகையால் அவர்கள் சார்பாகத் திலகர், தலைமைப் பதவிக்கு டாக்டர் ராஷ்பிகாரி கோஷுக்குப் பதிலாக லாலா லஜபதி ராயின் பெயரைப் பிரேரேபித்தார். இதற்கு நம் தமிழ் நாட்டிலிருந்து வ. உ. சி., பாரதியார் முதலியவர்கள் பக்கபலமா யிருந்தனர். இந்தப் பிரேரபணையைச் செய்வதற்குக்கூட மிதவாதிகள் அவருக்கு அனுமதியளிக்கவில்லையாகையால் காங்கிரஸ் அந்த ஆண்டு நடைபெறாமலே கலைந்தது. தீவிரவாதிகள் காங்கிரஸில் இடம் பெற முடியாதவகையில் மிதவாதப் பிரமுகர்கள் அதன் அமைப்பு விதிகளை மாற்றி விட்டனர்.

அதிலிருந்து 1916-ல் லட்சுமண புரியில் நடந்த காங்கிரஸ் வரையில் அது மிதவாத ஸ்தாபனமாகவே இருந்து வந்தது. பெசண்ட் அம்மையாரின் முயற்சியினால் லட்சுமணபுரி காங்கிரசில் இரு சாராரும் ஒன்று கூடினர்.

அயல்நாட்டில் பிரசாரம்

இதற்கிடையில் 1908-ல் திலகர்மீது ராஜத்துரோக வழக்கு தொடரப்பட்டது. அதன் முடிவில் திலகர் ஆறு ஆண்டுகள் கடுங் காவல் தண்டனை விதிக்கப் பட்டார்.

1908-லிருந்து 1914 வரையில் திலகர் பர்மாவிலுள்ள மாண்டலே சிறையிலிருந்தார். அங்குதான் 'கீதா ரகசியம்' என்னும் புகழ்பெற்ற தத்துவ நூலை எழுதினார். திலகர் விடுதலை பெற்று வெளிவந்த சமயம் முதல் மகாயுத்தம் தொடங்கியிருந்தது.

மீண்டும் அவர் அரசியலில் பங்கு கொண்டு 'ஹோம் ரூல்' இயக்கத்தைத் தொடங்கினார். தமது கட்சியைப் பிரிட்டனில் எடுத்துக் கூறினால் லட்சியம் சித்தி பெறும் என நினைத்து அந் நாட்டுக்குப் புறப்பட்டார். ஆனால் அவர் வரவால் யுத்த நிலை மோசமாகி விடலாம் என எண்ணி அவரைக் கொழும்பிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியினர் திருப்பி யனுப்பி விட்டனர். சென்னை மார்க்கமாகக் கொழும்புக்குச் செல்லுகையில் சென்னை நகரிலும் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் திலகருக்கு ராஜோபசார வரவேற்புகள் நடைபெற்றன.

'இந்தியக் கொந்தளிப்பு' என்னும் நூலில் திலகரைப் பற்றி அவதூறாக எழுதியதற்காக சர் வாலண்டைன் சிரால் மீது வழக்கு தொடர்ந்து நடத்த அவருக்குச் சீமை செல்ல அனுமதி யளிக்கப்பட்டது. வழக்கு விரோதமாகப் போனதால் பிரிட்டிஷ் நீதியில் அவருக்கிருந்த நம்பிக்கை தளர்ந்தது. வழக்கு தோல்வியுற்றதே என்று அவர் மனம் ஒடிந்து போகாமல் பிரிட்டனில் இந்திய விடுதலை இயக்கத்தை விளக்கிப் பிரசாரம் செய்தார்.

யுத்தத்தில் இந்தியா பிரிட்டனுக்கு உதவினால் நாடு நலம் பெறலாம் என நினைத்துப் படைக்கு ஆள் சேர்க்கத் திலகர் இணங்கினார். இந்த நல்லெண்ணத்துக்குப் பிரிட்டிஷார் அளித்த கைம்மாறு டில்லி, பாஞ்சாலம் இரு பகுதிகளிலும் திலகர் நுழையக் கூடாது என்னும் தடை உத்தரவுதான்!

ஒத்துழையாமைக்கு ஆசி

யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட லாபத் அநீதி. ஜாலியன்வாலா படுகொலை எல்லாம் நாட்டை ஒத்துழையாமைப் பாதையில் திருப்பத் தூண்டுவதாயிருந்தன. போயர் யுத்தத்திலும் முதலாவது மகா யுத்தத்திலும் பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்த காந்தியடிகளையே போராடத் தூண்டிய தென்றால் பிரிட்டிஷ் ஆட்சியின் அலங்கோலத்தைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்!

திலகர் சகாப்தம் முடிந்து காந்தி சகாப்தம் உதயமாயிற்று. ஆகஸ்ட் முதல் தேதி ஒத்துழையாமை இயக்கம் தொடங்குவதா யிருந்தது. ஜுலை மாதம் 30-ம் தேதி திலகர் பெருமானின் உயிர் அவருடைய புனித உடலை விட்டுப் பிரிந்தது. காந்தியடிகளின் இயக்கத்துக்கு ஆசி கூறிய பின்னரே திலகரின் உயிர்பிரிந்தது!

திலகருக்குச் சிறந்த ஞாபகச் சின்னமாகத் 'திலகர் சுயராஜ்ய நிதி' தொடங்கி அதற்கு ஒரு கோடி ரூபாய் சேர்த்த காந்திஜி லோகமான்யரின் மரணம் நேர்ந்ததும் மனமுருகிக் கூறிய மொழிகள் நாம் என்றென்றும் மறக்க முடியாதவை:

"மனிதர்களிலே அசாதாரண சக்தி வாய்ந்தவர் மறைந்து விட்டார். சிம்மத்தின் கர்ஜனை அடங்கி விட்டது. லோகமான்யரை இனி நாம் காண முடியாது. அவர் இறந்து விட்டார் என நம்புவதே கஷ்டமாயிருக்கிறது. நமக்கும் நமக்குப் பின் வரப் போகும் சந்ததியினருக்கும் அவர் நவ இந்தியாவின் சிற்பியாகவே தோன்றுவார். தங்களுக்காகவே வாழ்ந்து தங்களுக்காகவே உயிர் நீத்தார் என்றே அவரைப் பற்றி மக்கள் எண்ணி வணக்கம் செலுத்துவார்கள். இப்பேர்ப்பட்டவர் இறந்து விட்டார் என்று கூறுவதே பாவம். அவர் வாழ்க்கையின் சாரம் எல்லாம் நம்மிடம் கலந்து விட்டது."

"வீரமிக்க மராட்டியர் ஆதர
  மேவிப் பாரத தேவி திருநுதல்
ஆரவைத்த திலகமெனத் திகழ்
  ஐயனல்லிசைப் பால கங்காதரன்
சேரலர்க்கு நினைக்கவும் தீயென
  நின்ற வெங்கள் திலகமுனிவர்கோன்
சீரடிக் கமலத்தினை வாழ்த்துவேன்
  சிந்தை தூய்மை பெறுகெனச்
                    சிந்தித்தே"

என்ற மகாகவி பாரதியாரின் பாடலை நினைவு கூர்ந்து நாமும் திலகர் நாமம் வாழ்கவெனப் பிரார்த்திப்போமாக!

கடலூர் நகர சபை அங்கத்தினர் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி அய்யரின் குமாரி சௌ. சௌதாமினிக்கும் கோயமுத்தூர் சிரஞ்சீவி எஸ். என். தேவராஜனுக்கும் சமீபத்தில் கடலூரில் வெகு சிறப்பாக விவாகம் நடந்தேறியது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

வாழ்க, சௌதாமினி – தேவராஜன்!





கோவார் தங்கச் சுரங்கத் தலைமைக் காரியாலய அகௌண்டெண்ட் ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாசன் அவர்கள் குமாரி; சௌ. ஜம்பகலக்ஷ்மிக்கும் திருச்சி டாக்டர் எம். ஆர். எஸ். வாஸ், கண் ஸ்பெஷலிஸ்ட்ஸ், அவர்கள் குமாரன் சிரஞ்சீவி எம். ஆர். எஸ். ராமகிருஷ்ணன் (எம் பி. பி. எஸ். மாணவர்) அவர்களுக்கும் 29-6-56 அன்று ஸ்ரீரங்கத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போதும் மாலையில் நடைபெற்ற வரவேற்புக்கும் ஏராளமான மக்கள் வருகை தந்தனர். புதுமணத் தம்பதிகளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன.



விடாக்கண்டர்

என்னைக் கண்டதும் ஜனாதிபதி ராஜன் பாபு "வர வேணும், வர வேணும்! பார்த்து ரொம்ப நாளாகிறது" என்று உபசாரம் செய்தார்.

"நான் மட்டும் தங்களைத் தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்" என்றேன்.

"என்னையா? எப்போது? எங்கே? இத்தனை நாள் நான் ஹைதராபாத்தில் அல்லவா தங்கியிருந்தேன்? நீர் என்னைப் பார்த்திருக்க முடியாதே" என்றார் ஜனாதிபதி ஆச்சரியத்துடன்.

"பொழுது விடிந்தால் தங்கள் போட்டோ வராத பத்திரிகை உண்டா? தினமும் தங்களையும் தங்கள் அலுவல்களையும் பத்திரிகைகளில் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்! கையில் என்ன அது?" என்று கேட்டார் ஜனாதிபதி.

"ஒன்றுமில்லை, ஒரு சிட்டிகை!.." என்று இழுத்தேன்.

"விடாக் கண்டரே, இந்தப் பழக்கம் வேறு வைத்துக் கொண்டிருக்கிறீரா?"

"இல்லை, இல்லை" என்று கூறியபடியே கட்டை விரல் நுனிக்கும் ஆள்காட்டி விரல் நுனிக்கும் இடையில் மூடியிருந்த வஸ்துவை அவருக்குக் காட்டாமல் அவர் மூக்குக்கு மேல் கொண்டு போனேன்.

"சேச்சே! கிட்டே கொண்டு வராதே" என்றார் ராஜன்பாபு.

"தயவுசெய்து கொஞ்சம் முகத்தைக் காட்ட வேண்டும்" என்று கூறி அவர் நெற்றியில் அந்த வஸ்துவைத் தீட்டினேன்.

"என்ன அது?" என்று வியப்புடன் கேட்டார் ராஜன்பாபு.

"திலக்!" என்றேன்..

"ஓ! குங்குமப் பொட்டா? இன்று என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"நாளை லோகமான்ய பாலகங்காதர திலகின் நூறாவது ஜெயந்தி விழா. திலகரின் ஞாபகார்த்தமாகத்தான் தங்கள் நெற்றியில் ஒரு திலகம் வைத்தேன்" என்றேன்.

"விடாக்கண்டரே! நீர் ரொம்பப் புத்திசாலி!" என்று என்னைப் பாராட்டினார்.

இதுதான் சமயம் என்று நான் "வர வேணும், வரவேணும்" என்றேன்.

"யாரை எங்கே அழைக்கிறீர்?" என்று திகைத்தபடி கேட்டார் ராஜன்பாபு.

"தங்களைத்தான்; சென்னைக்கு அழைக்கிறேன். ஆகஸ்டு பதினைந்தாம் தேதி சுதந்திர தினம் வருகிறதல்லவா? வரும் சுதந்திர தினத்தைத் தாங்கள் சென்னையில் தமிழ் மக்களோடு இருந்து குதூகலமாகக் கொண்டாடி மகிழ வேண்டும் என்பது என்னுடைய அவா" என்றேன்.

"நானும் அப்படித்தான் தீர்மானித்திருக்கிறேன். எனக்கும் தமிழ்நாடு என்றால் ரொம்பப் பிடிக்கும். முன் தீபாவளியைக் கூட நான் தமிழகத்தில்தானே கொண்டாடினேன்?" என்று முகத்தில் மகிழ்ச்சி ததும்பக் கூறினார் ஜனாதிபதி.

"ஆமாம்; இந்தத் தடவை தாங்கள் பொதுக் கூட்டத்தில் பேசுவீர்கள் அல்லவா?"

"ஏன் அப்படிக் கேட்கிறாய்? பிரம்மாண்டமான 'ஐலண்டு' மைதானத்தில்தான் சுதந்திர தினம் வழக்கம்போல் கோலாகலமாகக் கொண்டாடுவார்களே!" என்றார் ஜனாதிபதி.


"ஆமாம்; ஆனால் இந்தத் தடவை பொதுக் கூட்டத்தை மட்டும் கடற்கரையில் திலகர் கட்டத்தில் வைத்துக் கொள்ளலாம்' என்பது என் யோசனை. திலகர் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக நடக்கும் பொதுக் கூட்டமாகவும் அதைப் பாவிக்கலாமல்லவா!" என்று கூறிவிட்டுக் கிளம்பினேன்.

"பேஷ்! அருமையான யோசனை! ஆமாம்; இப்போது எங்கே கிளம்பி விட்டீர்?"

"ஐக்கிய நாட்டுச் சபைக்கு!"

"அங்கே உமக்கு என்ன வேலை?"

"அங்கே பன்னிரண்டு தேசத்துப் பிரதிநிதிகள் அடங்கிய ஆயுதப் பரிகரணக் கமிஷன் கூடியிருக்கிறதல்லவா?"



சப்ளை செய்பவர்: இப்படி வாருங்கள்: அங்கு போய் உட்காராதீர்கள். அங்கே உள்ள விசிறிகள் ஓடாது.

வந்தவர்: ஏன், அந்த விசிறிகளைச் சர்க்கார் எடுத்துக் கொண்டு விட்டார்களோ!



பேராசிரியர் கல்கி அவர்கள் 'அமரதாரா' என்னும் சமூகத் தொடர் கதையை எழுத ஆரம்பித்த சில வாரங்களிலேயே அமரர் ஆகி விட்டார். அவருடைய மறைவால் எங்கே 'அமரதாரா' தொடர் கதை முடிவு பெறாமலே நின்றுவிடுமோ என்று தமிழ்கூறும் நல்லுலக மெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பெரிதும் கவலைப் பட்டார்கள். ஆனால் அவர்கள் கவலைக்கு இடம் இல்லாமல் 'அமரதாரா' கதை பூராவையும் படித்து மகிழும்படி செய்தார் பேராசிரியர் கல்கி அவர்களின் புதல்வி ஸ்ரீமதி ஆனந்தி. ராஜாஜி அவர்கள் ஆசியுடன் தம் தந்தை விட்ட தொடர் கதையைத் தொடர்ந்து எழுதுவதற்கு ஸ்ரீமதி ஆனந்தி முன் வந்தார். பதினெட்டு மாதகாலம் கதையின் களை குன்றாமல் ஆசிரியர் கல்கியின் பாணியிலேயே எழுதி, ஸ்ரீ கல்கி அவர்களே எழுதுகிறார்களோ என்று வியக்கும் வண்ணம் பூர்த்தி செய்தார். ஸ்ரீமதி ஆனந்திக்குச் சென்ற 6-ந் தேதியன்று கல்கி காரியாலயத்தில் ஒரு பாராட்டு விழா நடந்தது. மேற்படி விழா சிற்றுண்டி விருந்துடன் குதூகலமாக நடைபெற்றது. விழாவுக்கு ராஜாஜி தலைமை தாங்கிச் சிறப்பித்தார். பாராட்டு விழாவின் போது ஸ்ரீமதி ஆனந்திக்கும், அமரதாரா தொடர்கதைக்கு அற்புதமான முறையில் சித்திரங்கள் வரைந்து சிறப்பித்த ஓவியர் மணியத்துக்கும் ராஜாஜி அவர்கள் ஆசி வழங்கினர்.

மேலே படத்தில் ஸ்ரீமதி ஆனந்திக்கு ராஜாஜி ஆசீர்வாதம் செய்வதையும், ரசிகர்களின் சார்பாக ஸ்ரீமதி வசுமதி ராமசாமி கதாசிரியைக்கு மாலை சூட்டுவதையும் காணலாம்.

"ஆமாம்; நமது கிருஷ்ண மேனன்கூட அங்கே போய்ச் சக்கைப்போடு போட்டுக் கொண்டிருக்கிறாரே!"

"நானும் ஒரு போடு போட்டு விட்டு வரலாமென்றுதான் புறப்பட்டுப் போகிறேன்" என்று கூறிவிட்டு ஐ. நா. சபைக்குப் பறந்து சென்றேன்.

ஸ்ரீ கிருஷ்ண மேனனைக் கண்டு, "சபாஷ்! பலே! அப்படிப் போடுங்கள்!" என்றேன்.

"எப்படிப் போடுவது? நான் அணுகுண்டே போடக் கூடாது என்று வல்லரசுகளிடம் மன்றாடிக் கொண்டிருக்கிறேன். நீர் பூஜை வேளையில் கரடி புகுந்த மாதிரி 'போடு போடு' என்று சொல்லிக் கொண்டு வருகிறீரே!" என்றார் மேனன்.

"ஆமாம்; போடத்தான் வேண்டும்" என்றேன் நான்.

"அணுகுண்டையா?"

"ஆமாம்."

"உமக்கென்ன பைத்தியமா! நீர் எங்கிருந்து வருகிறீர்?"

"கீழ்ப்பாக்கத்திலிருந்து!"

"அணுகுண்டைப் போட்டால் உலகமே அழிந்து போகுமே. இப்போதே கதிரியக்கம் காரணமாக உலகத்தில் பிறக்கும் குழந்தைகளில் நூற்றுக்கு இரண்டு வீதம் பாதிக்கப்படுகின்றனவாம். அணுகுண்டு சோதனைகள் இப்படியே தொடர்ந்து நடக்குமானால் 1962-ம் ஆண்டுக்குள் உலகப் பிரஜைகள் அனைவருமே பாதிக்கப் படுவார்கள் என்று உலக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அதுமட்டுமல்ல. உலகம் முழுவதையும் அழிப்பதற்கு வேண்டிய அணுகுண்டுகள் வல்லரசுகள் வசம் இப்போதே இருக்கின்றன" என்றார் ஸ்ரீ மேனன்.


"அதனால்தான் சொல்கிறேன்; அணுகுண்டைப் போடுங்கள் என்று" என்றேன் மீண்டும். கிருஷ்ணமேனன் திகைத்தார்.

"ஏன் திகைக்கிறீர்கள்? அணுகுண்டுகளை யெல்லாம் கடலில் அல்லவா போட்டு விடச் சொல்கிறேன்" என்றேன்.

"ஓகோ! நீர் ராஜாஜி சொல்வதைச் சொல்கிறீரா? நல்ல வேளை! நான் பயந்தே போய் விட்டேன்" என்றார் மேனன்.

"கடவுள் பக்தர்களைச் சோதிப்பது போல் இந்த வல்லரசு தெய்வங்கள் அணுகுண்டுகளைப் போட்டுக் கடவுளையே சோதிக்கிறார்கள்! கடவுள் படைத்த உலகத்தை ஒரே நொடியில் அழிப்பதாக அல்லவா இருக்கிறது இவர்கள் சோதனை!" என்று கூறி விட்டுச் சென்னைக்குப் பறந்து வந்து சேர்ந்தேன்.


எல்லோருக்கும் தெரியும்—
காற்றுப் புகாமல் நன்றாக பாக் செய்யப் படுவதால் ப்ரூக் பாண்ட் தேயிலை களங்கமற்று மெத்தவும் சுத்தமாக உங்களுக்குக் கிடைக்கிறது
நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு ப்ரூக் பாண்ட் தேயிலை அதிகப்படியான, ருசியான தேநீரை அளிக்கிறது
ஒவ்வொரு நாளும் 24,90,496 ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டுகள் வாங்கப்படுகின்றன
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள் !



புதுமை பெறுக!
இதம் பெறுக! நளினமாய் இருங்கள்!
நாள்முழுதும்!
சிறந்த, இன்பகரமான மணமுள்ள சார்மிஸ் டால்கம் பவுடரால் ஏற்படும் உணர்ச்சிகள் இவை. குளித்தபின் மேனிமுழுதும் சார்மிஸ் டால்கம்பவுடரைத்தூவுக. எத்தகைய புதுமை, குளுமை - தெய்வீகக்குளுமை ஏற்படுகிறது! அரிப்பு வராமல் அதன்பட்டுப் படலம் பாதுகாக்கிறது. சிக்கனமான, அதியாவசியப் பொருள் சார்மிஸ் டால்கம் பவுடர். இன்பம், அழகின் இரகசியம் அது.
CHARMIS
சார்மிஸ்
டால்கம்பவுடர்
மிகவும்
சிறந்த இன்ப மணமுள்ளது
கால்கேட் சார்மிஸ் வாசனைத்திரவியங்கள் சகல-உபயோககிரீமும் ஸ்னோவும் உள்ளன-எல்லாவித சருமங்களுக்கும் ஏற்ற இரு பிரபல வதன கிரீம்கள்.





முதலாம் அத்தியாயம்

வல்லத்தரசர் யோசனை

நாம் செய்யும் காரியங்களின் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது என்றும், பலனில் பற்று வைக்காமல் நம்முடைய கடமைகளை நாம் செய்து கொண்டு போக வேண்டும் என்றும் பகவத் கீதை உபதேசிக்கிறது. இந்த உபதேசத்தின் உண்மையை நன்றாக உணர்ந்தவர் உதயசந்திரன்.

வில்லிவள நாட்டுக்கு அதிபதியாக விளங்கிய உதயசந்திரன் பல்லவ சாம்ராஜ்யம் ஒரு பெரிய சிக்கலில் அகப்பட்டுத் தவித்த போது, பட்டத்துக்கு உரிய இளவரசரைத் தேடி அலைந்து நந்திவர்மனை அழைத்து வந்தார் அல்லவா? அதன் விளைவுகளைப் பற்றி அவர் கவலைப்பட வில்லை. அரச பக்தியும், நாட்டின் நலத்தில் எல்லையற்ற ஈடுபாடும் கொண்டிருந்த தளபதி அவர். அவருக்குச் சரியென்று பட்ட ஒரு காரியத்தை எத்தனையோ எதிர்ப்புகளுக்கு மத்தியில் செய்து முடித்தார். ஆனால் அதன் விளைவுகள் தொடர்ந்து பல விபரீதங்களைச் செய்யும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. பின்னும் அப்படி விபரீதங்கள் நேர்ந்த போது அவற்றுக்காகவும் அவர் தமது உறுதியை இழக்கவில்லை. எந்த நந்திவர்மனுக்காக அத்தனை தூரம் அலைந்து பாடுபட்டு அரசை ஸ்தாபித்தாரோ அதே நந்திவர்மனுக்காக அவர் நாள்தோறும் போர் செய்ய நேரிட்டது. அப்பொழுதெல்லாம் அவர் அபாரமான மன உறுதியோடும், அசையாத ஆற்றலோடும் போர்முனையின் முன்னணியிலே நின்றார். அது மட்டுமில்லை. தம்முடைய யோசனைக்கும் அரசியல் சாமர்த்தியத்துக்கும் தோன்றிய அத்தனை தந்திர முறைகளையும் அவர் கையாண்டார். அந்தத்திரமான அற்புத சாதனைகளின் ஆரம்பந்தான் அன்று நடந்த அந்த எதிர்பாராத சம்பவம்.

விடுதித் தலைவனும் சித்திரமாயனும் சுரங்கப் பாதையிலிருந்து தப்பியோடி விட்டார்கள் என்று தெரிந்ததும், உடனே அவருக்கு முத்தரையர்களின் நினைவுதான்

வந்தது. நந்திவர்மனுடைய பட்டாபிஷேகத்துக்கு உறுதியோடு துணையாக நின்றவர் பெரும்பிடுகு முத்தரையர். அவருடைய பக்க பலம் இருந்தால் ஒழிய, தெற்குப் பக்கத்தில் விடுதித் தலைவனுடைய சூழ்ச்சியின் வலிமையால் பல்லவ சாம்ராஜ்யத்துக்குப் பெருங் கேடு விளையலாம் என்று அவருக்குத் தோன்றிற்று. எனவே, மயங்கி விழுந்திருந்த அந்த மனிதரைக் குதிரையில் ஏற்றிக் கொண்டு வேகமாகப் புறப்பட்டார் உதயசந்திரன்.

மயங்கி விழுந்திருந்த அந்த மனிதர் முத்தரையர்களின் தாயாதிக் குடும்பத்தைச் சேர்ந்த மண்டலாதிபதி. வல்லம் என்று இன்று விளங்கும் இடத்தில், பெருமண்டலமாக விளங்கிய பிரதேசத்தில் அவருடைய செங்கோல் சென்று வந்தது. தெற்கு மண்டலங்களில் அவருக்கு இருந்த செல்வாக்கை உதயசந்திரன் நன்ருக அறிவார். எதிர்பாராமல் இப்படி அவர் ஒரு சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டது உதயசந்திரனுக்கு வேதனை தந்தது. என்ருலும் அவருடைய உயிருக்கு எவ்விதக் கேடும் ஏற்படாமல் இம்மட்டோடு தப்பித்தாரே என்பதில் ஒரு நிம்மதி. அந்த நிம்மதியோடு கொடும்பாளூர் எல்லையைத் தாண்டிப் பறந்தது உதய சந்திரனின் குதிரை.

கொடும்பாளூரிலிருந்து தஞ்சை செல்லுகிற விசாலமான பெருஞ் சாலையில் ஒரு மிகப் பெரிய விடுதியிருந்தது. தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் வழிப்போக்கர்கள், அரசாங்க யாத்திரிகர்கள் ஆகியோரின் வசதிகளுக்காக இம்மாதிரிப் பல யாத்திரிகர் விடுதிகள் இருந்தன. அப்படிப்பட்ட விடுதிகளில் மிகவும் புகழ் வாய்ந்த ஒருவிடுதி அது. பரமேசுவரவர்மர் காலத்தில் இந்த விடுதி அரசாங்கத்தின் பேராதரவில் மிகவும் உன்னத நிலையில் பல பல வசதிகளோடு விரிந்திருந்தது. இப்பொழுது உதயசந்திரன் தம்முடைய யோசனைகளுக்கும், முயற்சிகளுக்கும் அந்த விடுதியை ஒரு முக்கிய சந்திப்புக் கூடமாகப் பயன்படுத்துவது என்று தீர்மானித்தார். அதே சமயம் தாம் யார் என்பது பிறருக்குத் தெரியாத முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்திருந்தார். எனவே சாலையில் கொஞ்ச தூரம் சென்றதும் அங்கிக்குள்ளே வைத்திருந்த ஒரு விசித்திரமான விருதாவை எடுத்து வாகவமாக இரண்டு கன்னங்களிலும் ஒட்டிக் கொண்டார். அப்பொழுது அவருடைய முகத்தைப் பார்த்தால், ஒரு சாமான்யக் கிழுதா முகத்தோற்றத்தில். எத்தனை பெரிய மாறுதலைச் செய்து விட முடியும் என்பது, ஆச்சரியப்படும்படி இருந்தது. உதய சந்திரன் அந்த விடுதிக்குச் சென்ற போது சூரியோதயம் ஆகிக் கொண்டிருந்தது.

சூரியோதயத்தில் விடுதியினுள்ளே சென்ற உதயசந்திரர் ஏதோ அடையாள முத்திரையின் துணை கொண்டு அங்கே பல வசதிகளைப் பெற்ருர். பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்ட போது அவரோடு வந்த மனிதரைக் காணேம். அந்த மனிதர் விடுதியிலேயே தங்கினரா, அல்லது வேறெங்காவது சென்ருரா என்பது ஓர் அரசியல் இரகசியம். அந்த இரகசியம் இரண்டு வாரம் கழித்துத் தஞ்சையிலேதான் வெளியாயிற்று.

ஆமாம்; இதன் பிறகு இரண்டு வாரங்கள் கழித்துத் தஞ்சைமா நகரிலே முத்தரையர்களின் சுவர்ண மாளிகையிலே ஒரு மந்திரக் குழு கூடிற்று. அந்த மந்திரக் கூட்டத்தில் மந்திரிகள் இருந்தார்கள். ஆமாத்தியர்கள் என்று அந்தக் காலத்தில் அழைக்கப்பட்ட அரசியல் நிபுணர்கள் இருந்தார்கள். அமைச்சர்கள் என்று அழைக்கப்பட்ட தீரர்கள்-செயலாற்றும் வீரர்கள்—இருந்தார்கள். அரசப்




பிரதானிகள் இருந்தார்கள். சூழ்ச்சியினால் சூழ்ச்சியை வெல்லக் கூடிய மேதைகள் இருந்தார்கள். இவர்கள் அனைவரும் உதய சந்திரனின் தலைமையில் கூடி ஆலோசித்தார்கள்.

"பல்லவ அரசுக்கு இப்பொழுது பெரிய எதிர்ப்பு தோன்றி விட்டது. தெற்கே சேர சோழ பாண்டிய வம்சத்தினர் ஒன்று கூடி நந்திவர்மனுடைய அரசை எதிர்க்கலாம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. சித்திரமாயனுக்குத் துணையாக வேளிர் வம்சத்தைச் சேர்ந்த அந்தப் பொல்லாத விடுநித் தலைவன் ஏதேதோ வஞ்சக வேலைகள் செய்கிறான். இந்த நிலையில் எந்த எதிர்ப்பையும் சமாளிக்கக்கூடிய படை பலம் நமக்கு அவசியம்."

இதுவே உதயசந்திரன் பேசிய வார்த்தைகளின் சாரம். இந்த வார்த்தைகளை மற்றப் பிரதானிகள் அனைவரும் ஆமோதித்தார்கள். முத்தரையர்கள் சம்பந்தப்பட்டவரை, தஞ்சையிலும் வல்லத்திலும் உள்ள இரண்டு வம்சத்தாரும், தங்களுடைய பூரண ஒத்துழைப்பையும் தருவதாக வாக்களித்தார்கள். ஆலோசனைக் கூட்டம் ஐந்து நாழிகை நேரம் நடந்தது. முடிவில் வல்லத்து



வம்சாதிபதி எழுந்து ஓர் அரிய யோசனை கூறினார். அன்று அவர் கொடும்பாளூர்க் கானகத்திலே சூழ்ச்சிக் கூட்டத்திலே சிக்குண்டு தவித்த தவிப்பிலிருந்து, அவருடைய இதயத்தில் ஏற்பட்டிருந்த கொதிப்பு, அவருடைய புத்திக்குச் சூடேற்றி அதை மிகவும் கூர்மைப் படுத்தியிருந்தது. ஆவேசத்தோடு பேசினாலும், அவருடைய பேச்சில் தீர்க்கதரிசனத்தோடு கூடிய ஓர் அற்புதமான யோசனை இருந்தது. அந்த யோசனையை உதயசந்திரன் முழு மனத்தோடு வரவேற்றார். பூரண உற்சாகத்தோடு ஆமோதித்தார். அளவுகடந்த மகிழ்ச்சியோடு பாராட்டினார். இத்தனை உற்சாகத்துக்கும் மகிழ்ச்சிக்கும் ஆமோதிப்புக்கும் காரணம் என்னவென்றால், உதயசந்திரன் தம்முடைய உள்ளத்தின் அந்தரங்கத்திலும் அம்மாதிரி ஒரு யோசனையைச் சிந்தித்ததுண்டு. ஆனால் அது குறித்து முத்தரையர்கள் என்ன நினைப்பார்களோ என்ற ஒரு தயக்கம் இருந்து வந்தது. இப்பொழுது அந்த யோசனையை முத்தரையர்களின் தாயாதியான வல்லத்து வம்சாதிபதியே எடுத்துச் சொன்னதும் உதயசந்திரனுக்குத் தம்முடைய முயற்சி யெல்லாம் வெற்றி யடைந்துவிட்டது போன்ற ஒரு களிப்பு உண்டாயிற்று. சொன்னார்:

'' நண்பர்களே! இந்த யோசனை என் உள்ளத்தில் ஏற்படுத்தி யிருக்கும் இன்பத்தை வார்த்தைகளிலே சொல்ல முடியாது. நந்திவர்மருடைய அரசு ஆடாமல் அசையாமல் நிலை நிற்பதற்கு முத்தரையர்களின் பூரண ஒத்தாசையும் எனக்கு உண்டு என்பதை ஏற்கனவே அறிவேன். காஞ்சிமா நகரின் எல்லையிலே நந்திவர்மரை எதிர்கொண்டு அழைத்த பிரதானிகளில் பெரும் பிடுகு முத்தரையர் முன்னணியிலே நின்றவர். நந்திவர்மருக்கு இராஜ்யாபிஷேகம் செய்த அந்தப் புனிதமான சடங்கில் மனம் மொழி மெய் மூன்றும் பூரணமாக ஈடுபட்ட மனிதர் ஒருவர் உண்டு என்றால் அது பெரும் பிடுகு முத்தரையர்தான். அப்படிப்பட்ட இந்த உத்தம நண்பர் நந்திவர்மரின் அரசியல் மேம்பாட்டுக்காக இப்பொழுது இப்படிப்பட்ட ஒரு யோசனைக்கு உடன் பட்டது தேச பக்தியும், அரச விசுவாசமும், தீர்க்க தரிசனமும் நிரம்பிய மகத்தான உதவியாகும். அவருடைய தாயாதியான வல்லத்து அரசருடன் இந்த யோசனையை ஏற்கனவே கலந்துபேசி, இப்பொழுது அந்த அரிய யோசனையை நாம் சொல்வதற்கு முன்பு வல்லத்து அரசரே சொல்லிவிட்டது என் உள்ளத்தைக் கூத்தாட வைக்கிறது. இனி இந்த யோசனை செயலாகப் பரிணமிக்கும் காரியத்தில் உங்கள் அனைவருடைய பூரண உதவியும் பக்கபலமாக நின்று இந்தத் தமிழ் நாட்டின் அரசியலைக் காக்குமாக!''

இவ்வாறு பேசினார் உதயசந்திரன். அவருடைய பேச்சில் அங்கு கூடியிருந்த அத்தனை பிரதானிகளும் மிக்க சிரத்தையுடன் ஈடுபட்டு ஆமோதித்தார்கள். கூட்டம் கலைந்த பிறகு முத்தரையரும், வல்லத்து அரசரும், உதய சந்திரனும் நீண்ட நேரம் அந்தச் சுவர்ண மாளிகையில் ஒன்று கூடி யிருந்தார்கள். வலம்புரித் தீவுக்கும் தமிழ் நாட்டுக்கும் நீண்ட நாட்களாக முறிந்து போய் விட்ட தொடர்பை இப்பொழுது மறுபடியும் நிலைநாட்டுவதற்கு ஒரு அரிய வழியை வகுத்தார்கள் அவர்கள். அந்த யோசனைக்காக முத்தரையருக்கு மனப்பூர்வமான நன்றியை ஆயிரந்தடவை தெரிவித்தார் உதயசந்திரன்.

தமிழ் நாட்டில் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் புகழோடு விளங்கிய நாடு முத்தரையர் நாடு. பல்லவ சாம்ராஜ்யத்தின் தென் எல்லைக்கும், பாண்டிய நாட்டின் வட எல்லைக்கும் நடுவே இருந்தது அது. இன்றைய புதுக்கோட்டை, தஞ்சாவூர் முதலிய பகுதிகளைக் கொண்டது முத்தரையர் நாடு. தஞ்சையிலும் வல்லத்திலும் இந்த அரச பரம்பரையும், தாயாதிகளும் ஒன்று கூடி உன்னதமான முறையிலே ஆண்டு வந்தார்கள். நந்திவர்மன் பட்டத்துக்கு வந்த காலத்தில் தஞ்சாவூர்ப் பகுதியை ஆண்டுவந்தவன் சுவரன் மாறன் என்ற முத்தரையப் பேரரசன். பெரும்பிடுகு முத்தரையன் என்ற சிறப்புப் பெயர் பெற்றவன். அவனுடைய யோசனைப்படி உதய சந்திரன் செய்த முடிவுதான் பிற்காலத்தில் சித்திராங்க பூபதிக்குப் பெரிய இடையூறாக முடிந்தது.

இரண்டாம் அத்தியாயம்

வலம்புரித் தீவிலே!


மேலே கூறப்பட்ட விஷயங்கள் நடந்த ஒரு மாதத்துக்கெல்லாம் வலம்புரித் தீவின் அரச மாளிகையிலே ஓர் ஆச்சரியமான நிகழ்ச்சி நடந்தது.

மந்திர நாயகம் அரச மண்டபத்துக்குள்ளே ஒரு தூதுவரோடு நுழைந்தார். அந்தத் தூதுவர் அரசச் சின்னங்களோடு காணப்பட்டாலும் அவருடைய நெற்றியில் தூய வெண்ணீறு கோலம் தந்தது. சந்தனத்தைக் குழைத்து இட்ட திலகம் அந்த வெண்ணீற்றுக்குமேல் துலங்கியது. புத்திக் கூர்மையும், ஆழ்ந்த யோசனையும் நிரம்பிய அறிவுச் சுடர் கண்களிலே காந்தி வீசியது.


'இவர் முத்தரையப் பேரரசரிடமிருந்து வந்துள்ள தூதர்!' என்று அரசியாருக்கு அவரை அறிமுகப்படுத்தினார் மந்திரநாயகம். இதன் பிறகு அங்கே நடந்த பேச்சு வார்த்தைகள் முக்கியமானவை. விரிவானவை. அவற்றின் சுருக்கம் வருமாறு:

தமிழ் நாட்டில் பல்லவர்களை எதிர்த்துக் கொடும்பாளூர் வேளிர்களின் முயற்சியால் சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தின் விளைவாகத் தமிழ் நாட்டில் ஒரு பெரும்போர் மூள இருக்கிறது. இந்தப் போரில் நந்திவர்ம பல்லவனுக்குத் துணையாக முத்தரையர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறார்கள். உதய சந்திரன் தலைமையில் பல்லவப் படை ஒன்று பெரிய அளவில் ஒன்று சேர்கிறது. நுட்பமான முறையில் பல வெடி

உங்கள் கேசத்தை அதிக கருமையுடனும் பகட்டுடனும் வைக்க குளிர்ச்சியான வெண்ணிற ப்ரில்க்ரீம் உபயோகியுங்கள்



கீர்த்திபெற்ற மற்றவர்களைப்போல் வினு மான்காடும் ப்ரில்க்ரீம் உபயோகிக்கிறர்



* ப்ரில்க்ரீமின் சுத்தமான க்ரீமாக்கப்பட்ட எண்ணெய்கள் உங்கள் கேசத்தின் இயற்கை கருமை நிறத்தை சேமிக்கச் செய்கின்றன. சுத்தமான வெண்ணிற ப்ரில்க்ரீமை உங்கள் தலையில் தினந்தோறும் அழுத்தித் தேயுங்கள். பொடுகுகள் ஏற்படுவதை இது தடுத்து உங்கள் கேசத்தை சுத்தமாயும் ஆரோக்கியத்துடனும் வைக்கிறது.

* சிறிதளவு ப்ரில்க்ரீம் நீடித்த உபயோகத்திற்கு வருகிறது! இன்றே ஒரு ப்ரில்க்ரீம் ஜாடியை வாங்கி எவ்வளவு காலம் அது நீடித்த உபயோகத்திற்கு வருகிறதென்று பாருங்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்

ப்ரில்க்ரீம் BRYLCREEM

உபயோகிக்கிறர்கள்

BRL. 2948 (a) Tam


செல்வம் பெருக நிர்மாணத் திட்டங்கள்
நங்கல் பாரேஜ்
15,00,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் பக்ரா நங்கல் நிர்மாணத் திட்டத்திற்கு உபயோகிக்கப்படும்.
மலம்புழை அணைக்கட்டு
64,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.
துங்கபத்திரா அணைக்கட்டு
2,35,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் இதுவரை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.
கீழ்பவானி அணைக்கட்டு
இத்திட்டத்திற்கு 1,29,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.
உறுதியாக நிலைத்து நிற்க
ஏசிசி
சிமெண்டினுல் கட்டப்பட்டது

மருந்துகளும் விஷப் புகை கக்கும் ஆயுதங்களும் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆனால் இத்தனை நடவடிக்கைகளுக்கும் வேண்டிய இரகசிய இடம், படை பலத்தைச் சேகரித்து ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் செய்வதற்கு வேண்டிய இரகசிய பூமி ஒன்று அவசியப்படுகிறது. உதய சந்திரனின் யோசனைப்படி வலம்புரித் தீவை விட இதற்கு ஏற்ற இடம் வேறு இல்லை. தவிரவும், உதய சந்திரனின் தூதுவர்கள் கடாரம், சாலேகம் முதலிய தீவுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். இலங்கைக்கும் ஒரு முக்கியமான தூதுவர் சென்றிருக்கிறார். கடல் கடந்த இந்தப் பிரதேசங்களிலிருந்து பல்லவர்களுக்குப் படை பலம் கிடைக்கக் கூடும். இந்தச் சேனை வீரர்களை யெல்லாம் ஒருமுகப்படுத்தி, இவர்களுக்குப் பல தந்திர வழிகளை உபதேசித்து, திடீரென்று தாக்குதல் செய்ய வேண்டியிருந்தால் வானத்திலிருந்து தமிழ் நாட்டிலே வந்து குதித்ததுபோல இந்த வீரர்கள் அனைவரும் திடுதிப்பென்று வந்து இறங்க வேண்டும். அதுவரை இரகசிய பூமி ஒன்றில் பதுங்கிப் பயிற்சி பெற வேண்டும். இதற்கெல்லாம் பொருத்தமான இடம் வலம்புரித் தீவுதான். எனவே உதயசந்திரனின் யோசனைப்படி முத்தரையர் வலம்புரித் தீவின் அரசியாரோடு ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறார். அதன்படி வலம்புரித் தீவு இனி பல்லவர்களுக்குப் பக்கபலமாக நின்று போர் செய்யும். பல்லவர்களுக்கு எதிராக நிற்பவர்களுக்கு இனி இந்தக் கடல் எல்லையிலே இடம் கொடுக்கக் கூடாது. பகைவர்களின் மரக்கலங்கள் இந்தத் தீவுக்கு அருகில் வந்தாலும் அவற்றை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளை உடனே செய்ய வேண்டும். முக்கியமாகப் பாண்டிய நாட்டு மரக்கலங்களுக்கு இங்கே இடம் தரக்கூடாது.

இதுதான் முத்தரையர் அனுப்பிய தூதின் சாரம். அரசியல் முறையில் முத்தரையர் வலம்புரித் தீவின் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கும் உதவி இதுதான். இதற்கு உடன்பட்டு விட்டால் தமிழ் நாட்டிலிருந்தும், தொலை நாடுகளிலிருந்தும் பல்லவருக்காக ஆயத்தமாகும் சேனை வீரர்கள் வலம்புரித் தீவுக்கு வந்து சேருவார்கள். பிறகு எந்த விநாடியும் யுத்தத்துக்குச் சித்தமாக இருப்பார்கள். உத்தரவு வருகிற நேரத்தில் வலம்புரித் தீவிலிருந்து புறப்படுவார்கள்.

வலம்புரி மகாராணியார் இந்த உடன்படிக்கைக்கு ஒப்புக் கொண்டு விட்டால், முத்தரையர்களுடைய அன்பின் இணைப்பாக முத்தரையர் குலத்து அரசகுமாரியை வலம்புரி இளவரசன் சித்திராங்க பூபதிக்கு மணம் முடிக்க இசைகிறார் பெரும்பிடுகு முத்தரையர்! முத்துக்குமரி என்ற அழகுத் திருப்பெயர் தாங்கியவளும், தமிழ்நாட்டு மண்டலங்களில் எல்லாம் 'மதி வதனி' என்றும் 'அதிரூப சித்தினி' என்றும் சிறப்புப் பெயர் பெற்றவளுமாகிய முத்தரைய குமாரி வலம்புரித் தீவின் அரசியாக, மகாராணியின் மருமகளாக வந்து சேர்வாள்.

முத்தரையர் அனுப்பிய தூதுவர் இந்தச் செய்திகளை யெல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னார். இம்மாதிரி ஒரு தூதுச் செய்தியை வலம்புரித் தீவில் யாருமே எதிர்பார்க்கவில்லையாதலால், முதலில் மகாராணியாருக்கும் பிரதானிகளுக்கும் ஆச்சரியமாக இருந்தது. எனவே, தூதுவர் ஒரு வாரம் வலம்புரித் தீவில் தங்கியிருந்து படிப்படியாக இந்த விஷயங்களை மனத்தில் நன்றாகப் பதியும்படி எடுத்துக் கூறினார். வலம்புரித் தீவின் மந்திர நாயகத்தின் முன்னோர்கள் பூர்வத்தில் முத்தரையர் குலத்தில் தோன்றியவர்களாதலால், மந்திர நாயகத்துக்கு இந்த உடன்படிக்கையில் எல்லை கடந்த ஆசையும் திருப்தியும் இருந்தன. ஆனால் சித்திராங்க பூபதி தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்த காலத்தில் இப்படி ஒரு தூது வரநேரிட்டதால், பேரரசிக்கு இது விஷயமாய் முடிவு சொல்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆரம்பத்தில் சித்திராங்கன் கடல்கடந்து யாத்திரை சென்றிருப்பதாகவும் அவன் திரும்பிய பிறகே இதற்குப் பதில் சொல்ல முடியும் என்றும் சொன்னாள். மறுநாள் மந்திரநாயகத்தோடு மீண்டும் ஆலோசித்தாள். சித்திராங்க பூபதி தமிழ் நாட்டுக்குச் சென்றிருக்கும் விஷயம் முத்தரையருக்கு இதுவரை தெரிந்திராவிட்டால், இனி எப்படியும் தெரியத்தான் போகிறது என்பதை மந்திரநாயகம் எடுத்துக் கூறினார். இதன் பேரில் மறுபடியும் தூதுவரிடம் கலந்து பேசினார்கள். தூதுவரோ அசகாய சூரராக இருந்தார். இவர்கள் முழுதும் சொல்வதற்கு முன்பே அவர் விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தார்:

"நானாக அதைச் சொல்ல வேண்டாம் என்று இருந்தேன். எனக்குச் சித்திராங்க பூபதி தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்த விவரம் முழுதும் தெரியும். இன்னும் அதற்கு மேலும் தெரியும். உங்களுக்குத் தெரியாத சில விவரங்களும் நான் அறிவேன். நீங்கள் வருத்தப்படாமல் கேட்பதாக இருந்தால் சொல்லுகிறேன்" என்றார் தூதுவர்.

மந்திரநாயகத்துக்கு ஏற்பட்ட ஆவலும், பேரரசியாருக்கு உண்டான கவலையும் கரையற்ற கடலாக இருந்தன. அதன்பேரில் தூதுவர் தொடர்ந்து சொன்னார்:

பிள்ளைப்பிராயத்திலே திலகர்

இளமையில் திலகர் உடலுறுதி வாய்ந்தவர். பயிற்சியினால் அதை மேலும் அபிவிருத்தி செய்து கொண்டார். படகோட்டுவது, நீந்துவது, குஸ்தி போடுவது அவருக்குப் பிரியமான விளையாட்டுகள். காசியில் கங்கை நதியில் நீந்தி அக்கரை செல்வார். இரு கைகளிலும் ஒரு ரொட்டித் துண்டை வைத்துக் கொண்டு அது நனையாமல் மணிக் கணக்கில் நீரில் மிதப்பார். உடல் அபிவிருத்திக்கு மருந்து உட்கொள்பவர்களின் வீடுகளுக்குச் சென்று மருந்து புட்டிகளை உடைத்து உடற்பயிற்சி மேற்கொள்ளும்படி வற்புறுத்துவார்.

'' சித்திராங்க பூபதி தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டு வந்த இலட்சியம், பேரியாழை இந்த வலம்புரித் தீவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பது. இந்த இலட்சியத்துக்காக அவர் தமிழ் நாட்டுக்கு வந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. வலம்புரித் தீவின் பேரியாழ் இந்தத் தீவிலிருந்து எந்தப் பல்லவ அரசரால் தமிழ் நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டதோ, அதே பல்லவ அரசர்களுக்கு நீங்கள் ஒரு தூது அனுப்பியிருந்தால் போதும். அல்லது நீங்கள் முத்தரையர்களுக்கு இது விஷயமாக ஒரு தூதுவரிடம் திருமுகம் கொடுத்தனுப்பியிருந்தாலும் போதும். பெரும் பிடுகு முத்தரையரே பேரியாழை வலம்புரித் தீவுக்கு அனுப்புவதற்கு வேண்டிய காரியங்களை உடனே செய்திருப்பார். சரி; அதுதான் நடக்கவில்லை. தமிழ் நாட்டுக்கு வந்த சித்திராங்கராவது நேரே உதயசந்திரரை வந்து பார்த்திருக்கலாம். அல்லது முத்தரையர்களை வந்து சந்தித்திருக்கலாம். இரண்டும் முடியவில்லை யென்றால், காஞ்சிமாநகரில் அரசியல் விஷயங்கள் தெரிந்த பிரதானிகளிடம் போய்ப் பேரியாழைப் பற்றிய விவரங்களை விசாரித்திருக்கலாம். உங்கள் இளவரசர் இதொன்றும் செய்யவில்லை. சிறு பிள்ளைத்தனமாக யாரோ ஒரு விடுதித் தலைவனிடம் இந்த விஷயத்தைச் சொல்லப்போக, அது பெரும் விபரீதமாக முடிந்தது. உண்மையில் அந்த விடுதித் தலைவன் யாரோ ஒரு மனிதன் என்று அலட்சியமாகத் தள்ளிவிடக்கூடிய அநாமதேயம் இல்லை. 'பல்லவ வேந்தர்களை வேரோடு கிள்ளி எறிய வேண்டும்' என்று ஒரு பெரும் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிற நயவஞ்சகக் கூட்டத்துக்குத் தலைவன் அவன். அவனும் அவனுடைய விடுதியின் எதிர்காலமும் இப்பொழுது உதயசந்திரனுடைய தீவிரமான சீற்றத்துக்கு உள்ளாகி, நான் தமிழ் நாட்டுக்குத் திரும்பிப் போவதற்குள் என்ன நிலை ஏற்படுமோ! கடவுளுக்குத்தான் தெரியும். விடுதித் தலைவன் விஷயம் அப்படியிருக்கிறது. பூபதி அந்த விடுதியிலாவது இருந்தாரா? இல்லை. அந்தச் சூழ்ச்சிக்காரனின் வஞ்சகமான யோசனைப்படி அவர் கொடும்பாளூருக்குச் சென்றார். கொடும்பாளூரிலாவது



அரண்மனைக்குச் சென்றாரா? இல்லை. ஆதிரையனைச் சந்தித்தாரா? சந்திக்கவில்லை. ஆதிரையன் ஒருவன் நல்லவனாக இருந்ததால், அவனையும் சந்திக்க விடாதபடி செய்தான் அந்தப் பொல்லாத விடுதித் தலைவன். அப்படிச் செய்ததோடு நிற்கவில்லை. இப்பொழுது ஆதிரையன் எங்கிருக்கிறான் என்றே யாருக்கும் தெரியாது. ஆதிரையனுடைய முன்னோர்கள் எல்லாம் பல்லவர்களுக்குத் துணைவராக இருந்தவர்கள். இப்பொழுது ஆதிரையனை எங்கோ காணாமல் அடித்துவிட்டு அந்த விடுதித் தலைவன் தன்னோடு சில மண்டலாதிபதிகளைச் சேர்த்துக் கொண்டு பல்லவர்களுக்கு எதிராகக் கிளம்பி விட்டான். சோழர்களும் பாண்டியர்களும் அவனுடைய சூழ்ச்சி வலையிலே வீழ்ந்து விட்டார்கள். சித்திரமாயனுடைய உறவினனான பாண்டிய மன்னன் மதுரையில் ஒரு பெரும் படை திரட்டுகிறான். சித்திராங்க பூபதியோ இதொன்றும் தெரியாமல், பாவம், குங்கும மாளிகையிலே சிறையிருக்கிறான்!''

இவ்வாறு கூறினான் தூதுவன்.

'' குங்கும மாளிகையிலா? சிறையிலா?'' என்று கேட்டார்கள், ஏக காலத்தில், அரசியாரும் மந்திரநாயகமும். அரசியார் உள்ளம் பதறி விட்டார். மந்திர நாயகத்துக்கோ தலை சுற்றியது.

'' ஆமாம்; குங்கும மாளிகை யென்பது கொடும்பாளூரில் ஒரு சூழ்ச்சிக் கூடம். அரசப் பிரதானிகள் எல்லாம் சங்கேதத்துக்கு என்று கூடி, இரகசியமாகச் சதியாலோசனை செய்கிற இடம் அது!'' என்றார் தூதுவர்.

''அது என்ன மாளிகை?'' என்று கேட்டார் மந்திரநாயகம்.

'' அது ஒரு கணிகையர் கூடம். கூத்தும் பாட்டுமாக இருக்கும் மாளிகை அது. இரண்டும் இல்லாத நேரத்தில் இரகசியக் கூட்டங்கள் அங்கேதான் நடக்கும். இப்பொழுது பூபதி அங்குதான் சிறையிருக்கிறான்!'' என்றார் தூதுவர்.

'' பூபதி அங்கே எதற்காகப் போனான்?'' என்று கவலையோடு கேட்டார் அரசியார்.

''எல்லாம் பேரியாழிலே உள்ள பைத்தியத்தினால்தான்! அரசியாரே, கவலைப்படாதீர்கள். இந்தக் குங்கும மாளிகையில்லை, இதைவிடப் பெரிய இரகசிய மாளிகையாக இருந்தாலும் கவலையில்லை. பெரும் பிடுகு முத்தரையர் நினைத்தால் அந்தக் கொடும்பாளூர்ப் பட்டணமே இரவோடு இரவு தரைமட்டமாகச் செய்ய முடியும். அத்தனை வலிமையும் செல்வாக்கும் அவருக்கு உண்டு. உங்கள் வலம்புரித் தீவின் அரசகுமாரரை அவர் நினைத்தால் ஒரு விநாடியில் அந்தக் குங்கும மாளிகையிலிருந்து மீட்டு விட முடியும்! அவர் ஒருவராலேயே முடியும் அது! அத்தோடு இப்பொழுது அவருக்குத் தலைவராக யார் நிற்கிறார்கள்? இந்தக் கடல் சூழ்ந்த பூமியில் தனக்கு நிகர் தானேதான் என்று சொல்லக்கூடிய மதியூகியும், அரசியல் மேதையுமாகிய உதயசந்திரன் இருக்கிறார். இந்த இருவரும் ஒன்று சேர்ந்திருக்கும் போது ஏன் கவலைப்படுகிறீர்கள்? சித்திராங்க பூபதி

யைச் சிறையிலிருந்து விடுவிக்கும் பொறுப்பு எங்களுடையது. முத்தரையர் அதைத் தம்முடைய கடமையாகவே கருதுகிறார். அதிலும் வலம்புரி அரச குடும்பத்துக்கும், முத்தரையர்களுக்கும் இப்படி ஒரு திருமண உறவு ஏற்படுவதாக இருக்கும் போது, நீங்கள் ஏன் அதைப் பற்றிக் கவலைப் படவேண்டும்? தம்முடைய குமாரியின் நாயகனை, தமது மருமகனைத் தாம் எப்படி மீட்டுக் கொள்ள வேண்டும் என்று தெரியாதா முத்தரையருக்கு?''

இவ்வாறு கூறி முடித்தார் அந்தத் தூதுவர்.

இதன் பின்னர் மூன்று நாட்கள் தீவிரமான ஆலோசனை நடந்தது. மந்திர நாயகமும், வலம்புரித்தீவின் மற்றப் பிரதானிகளும் தீர்க்கமாக யோசித்துப் பார்த்தார்கள். அரச மாளிகையில் மீண்டும் மீண்டும் கூடி ஆலோசித்தார்கள். அரசியார் தமக்குத் தோன்றிய சந்தேகங்களை யெல்லாம் சொன்னார். அவற்றின் பேரில் சர்ச்சை நடந்தது. ஒருவர் மாற்றி ஒருவர் பல கருத்துக்களை வெளியிட்டார்கள். முடிவில் அரசியாரும் பிரதானிகளும் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். அதாவது பல்லவர்களின் படைக்கலப் பயிற்சிக்கு வலம்புரித்தீவை ஆயத்த பூமியாக வழங்குவதில் எவ்வித ஆட்சேபமும் இல்லை. ஆனால் வலம்புரித்தீவையே ஒரு சமர் பூமியாக அவர்கள் மாற்றிவிடக் கூடாது. கலைக்கும், கலையின் ஆக்கத்துக்கும் ஒரு வளர்ச்சிப் பண்ணையாக விளங்கி வந்துள்ள இந்த வலம்புரித்தீவை, போர்க் குழப்பங்கள் ஓய்ந்ததும் மீண்டும் ஒரு அற்புதக் கலைக் கூடமாகப் புனர் நிர்மாணம் செய்து தர வேண்டிய பொறுப்பு பல்லவர்களைச் சார்ந்தது. முத்தரையர் தமது குமாரியைச் சித்திராங்க பூபதிக்கு மணம் முடிக்கும் விஷயமாக அரசியாருக்கு எவ்விதத் தடையும் இல்லை. ஆனால் சித்திராங்க பூபதியைச் சந்தித்து இது சம்பந்தமாய்ப் பேசி ஒரு முடிவுக்கு வருவதே நல்லது என்று அரசியார் கருதுகிறார். அதே சமயம் எப்படியும் பூபதியின் இஷ்டத்தைப் பெற்று இதற்கு அவன் உடன்படும்படி செய்வது அரசியாரின் பொறுப்பு. அதற்கு முன்னேற்பாடாக இப்பொழுதே அந்தத் தூதுவரோடு மந்திரநாயகமும் முத்தரையர் நாட்டுக்குப் புறப்படுவார்.

இந்த முடிவைத் தெரிவித்ததும் தூதர் பாதி மகிழ்ச்சியும் பாதித் திகைப்புமாக இதை ஏற்றுக் கொண்டார். இதைக் கவனித்த மந்திரநாயகம் தூதுவரைத் தனியாக அழைத்துச் சென்று நீண்ட நேரம் பேசினார். தூதர் சொன்ன ஆட்சேபம் இதுதான்.

''பெரும் பிடுகு முத்தரையர் எந்த விஷயத்திலும் ஒரு தெளிவும் தீர்மானமும் உள்ளவர். அவர் இந்த உடன்படிக்கைக்குச் சம்மதிப்பது அவருடைய வம்சத்தின் எதிர்காலத் திருமண உறவைப் பொறுத்திருக்கிறது. எனவே இளவரசன் சித்திராங்க பூபதி இந்தத் திருமண விஷயமாக மறுத்துக் கூறிவிட்டால் முத்தரையர் வெகுண்டு விடுவார். ஏதோ தமக்கும் தமது வம்சத்துக்கும் வலம்புரி அரச குடும்பத்தார் அவமரியாதை செய்து விட்டதாகவே கருதுவார். இதனால் பெரிய விபரீத விளைவுகள் நேரலாம்!''

தூதர் சொன்ன இந்த ஆட்சேபனைக்குச் சரியான முறையில் சமாதானம் கூறினார் மந்திர நாயகம். சித்திராங்க பூபதி எப்பொழுதுமே அன்னையின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிற புதல்வன் என்றும், அவனை இந்தத் திருமணத்துக்குச் சம்மதிக்கும்படி செய்வது தம்முடைய பொறுப்பு என்றும் உறுதி கூறினார் மந்திர நாயகம். இந்த உறுதியின் பேரில் தூதுவர் முழு மகிழ்ச்சியோடு எல்லாரிடமும் விடைபெற்றுக் கொண்டு வலம்புரித் தீவிலிருந்து வெற்றியோடு புறப்பட்டார்.

வலம்புரித்தீவில் தூதுவரை வழியனுப்பிய தினத்தில் கோலாகலமான விருந்து நடைபெற்றது. அரசப் பிரதானிகளோடு, அந்தத் தீவின் மங்கிப் போன பழங் கலைகளின் சிதறிய துண்டுகளாக மீதி இருந்த இரண்டொரு கலைஞர்கள் தங்களுடைய ஆடல் பாடல்களின் மூலம் அந்த விருந்தைப் பரிமளிக்கச் செய்தார்கள். தூதுவரோடு மந்திரநாயகம் புறப்பட்டபோது, வலம்புரி அம்மன் கோவிலிலிருந்து தீபாராதனை ஆகிக் குங்குமப் பிரசாதம் கொண்டு வந்து கொடுத்தார்கள். பிரதானிகள் எல்லாரும் மந்திரநாயகத்தை வழியனுப்பும்போது அவருடைய வெற்றிக்காக வாகை மாலைகளைக் கொண்டு வந்து சூட்டினார்கள்!

''தூதுவரே! உங்களோடு நான் புறப்படுவதால், மனத்தில் என்னளவும் தயக்கம்



வேண்டியதில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தின் கொடியை உயர்த்திப் பிடிப்பதற்காக உங்களோடு இந்த வலம்புரித் தீவும் கங்கணம் கட்டி நிற்கிறது. இனி எதிர்காலத்தில் முத்தரையர் குலத்து அரசகுமாரி இங்கே வந்து இந்த வலம்புரித் தீவின் புனர் அமைப்புத் திருவிழாவிலே கலந்து கொண்டு, இந்த அம்மன் கோவிலிலே தீபம் ஏற்றி எங்களை வாழ்விப்பாள்!''

இவ்வாறு தூதுவரிடம் கூறினார் மந்திர நாயகம். அந்த வார்த்தைகள் கடல் அலைகளின் மேலே தவழ்ந்தன.

எத்தனையோ மனிதர்களின் கனவுகளையும், ஆசை மொழிகளையும் எத்தனையோ பல நூற்றுண்டுகளாகக் கேட்டுக் கேட்டுச் செவி யெல்லாம் கைத்துப் போன — உப்பாகக் கைத்துப் போன- அந்தக் கருநீலக் கடல், மந்திரநாயகத்தின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தனது ஆயிரம் ஆயிரம் அலைக் கைகளையும் ஆரவாரத்தோடு உயர்த்திக் கரகோஷம் செய்தது!

(தொடரும்)



4

த்தம் புதிய 'பெட்டி'. அதிலும் முதல் வகுப்புப் பெட்டி! அருகே சென்றால், புதிய வர்ணத்தின் வாடைகூட இலேசாக நாசியைத் தாக்கிற்று. உட்புறத்தில் இளம் பச்சை வர்ணம் கண்களுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. மௌனமாகச் சுழலும் விசிறிகள். ஒளியைக் கொட்டும் மின்விளக்குகள்.

இந்தப் பெட்டியில் நான் பிரயாணம் செய்யப் போகிறேன்.

படுத்துக் கொள்வதற்குச்சுகமான மெத்தை இருந்தது. ஆனாலும் எனக்குத் தூக்கம் வரும் என்ற நம்பிக்கை இல்லை. ஆமாம்! மூன்றும் வகுப்புப் பெட்டியில், புளிமூட்டை போல அடைத்துக் கிடக்கும் பிரயாணிகளோடு பிர யாணியாக ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டோ அல்லது ஓரத்தில் தொத்திக் கொண்டோ கவலையில்லாமல் பிரயாணம் செய்து பழகிப் போயிருந்த எனக்கு முதல் வகுப்பின் தனிமை பயங்கரமாகத்தான் தோன்றியது.

தனிமை என்று எப்படிச் சொல்வது? என்னோடு கூடத்தான் இன்னொரு பிரயாணி வரலாமே? இந்தப் பெட்டியில் இரண்டு படுக்கைகள் அல்லவா இருக்கின்றன?

வண்டி புறப்படுவதற்கு இன்னும் பதினைந்து நிமிஷங்கள்தான் இருக்கின்றன. அதற்குள் எவரும் வராமலிருந்தால் நான் தனியாகத்தான் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட தனிமை கிடைக்குமானால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன். நான் உல்லாசப் பிரயாணமா செய்கிறேன்? இல்லையே! என்னுடைய முதலாளியின் மானத்தைக் காப்பதற்கு ஆதாரமாகவுள்ள தஸ்தாவேஜிகளைக் கோயம்புத்தூர் வக்கீலிடம் கொடுத்து விட்டு வருவதற்கல்லவா நான் போகிறேன்.


"ராமன்! உங்களை நம்பி இந்தப் பெரிய பொறுப்பை ஒப்படைக்கிறேன். நீங்கள் எடுத்துச் செல்லும் இந்த ஐந்தாறு காகிதங்களில் தான் என் மானம், வாழ்வு எல்லாம் அடங்கியிருக்கின்றன. நான் நேரில் சென்றாலோ, அல்லது நெருங்கிய உறவினர்களிடம் கொடுத்தனுப்பினாலோ எதிரிகள் ஏதேனும் இடையூறு விளைவிக்கப் பார்ப்பார்கள். இதனால் தான் உங்கள் மூலம் இவைகளை அனுப்புகிறேன். முதல் வகுப்புப் படுக்கை உங்களுக்கு 'ரிஸர்வ்' செய்து விடுகிறேன். பயமில்லாமல் போய் வாருங்கள்."

"நல்லது, ஸார்! உங்கள் பேச்சு எனக்குப் புரிகிறது. இந்தத் தஸ்தாவேஜிகளை யெல்லாம் பத்திரமாக வக்கீலிடம் ஒப்படைத்து விட்டு, உடனே 'டிரங்க் போனி'ல் உங்களுக்குச் செய்தி தருகிறேன்."

சம்பவங்கள் சிந்தனைகளாக உருவெடுத்து மாய்ந்து கொண்டிருந்தன. மறக்கக் கூடிய நிகழ்ச்சிகளா, அவை? என் மீது எங்கள் முதலாளி கொண்டிருக்கும் அபார நம்பிக்கைக்கு அத்தாட்சிகளல்லவா? 'கற்பகா டிரேடர்' ஸ்தாபனத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குமாஸ்தாக்கள் வேலை செய்கிறார்கள். ஆனால், முதலாளி கற்பகநாயகம், இந்த அவசரமான சொந்த வேலைக்கு என்னைத்தான் தேர்ந்தெடுத்தார்! காரணம் என்ன? என் உழைப்பு ஐயா, உழைப்பு!

"ஒரு 'பர்த்' இங்கே காலியாக இருக்குமா?"—தனிமையான குரல் கேட்டு உணர்வுலகுக்கு வந்தேன். பெட்டிக்கு வெளியே ஒரு நங்கை நின்று கொண்டிருந்த கோலத்தில், நாகரிகம் தன் கோரைப் பற்களைக் காட்டி

தெய்வச் செயல்



டி.எஸ்.கோதண்டராமன்

நகைத்தது. உடையிலும் உடலிலும் செயற்கையின் பாதரஸப் பூச்சு.

"ஒரு 'பர்த்' இருக்கிறது" என்று உண்மையைக் கூறுவோமா என்று ஒரு கணம் யோசித்தேன். யோசனை முடிவதற்குள், அவன் உள்ளே காலடி எடுத்து வைத்து விட்டான்! எனக்குப் பகீரென்றது. இவனோடு எப்படித் தனியாகப் பிரயாணம் செய்வது?

ஒரு நிமிஷம்கூட ஆகவில்லை. பெட்டியின் நுழையும் இடத்தில் யாரோ ஒரு ஆடவனின் குரல் கேட்டது.

"லில்லி! உனக்கு அங்கே இடம் பிடித்து விட்டேன்! தனி கம்பார்ட்மெண்ட்!"

"வந்தனம், அண்ணா!"

பகட்டுச் சிரிப்பு வழியும் உதடு வழியே வார்த்தையை உதிர்த்துவிட்டுப் பறந்து செல்வது போல அவள் கீழே இறங்கினாள். பெட்டியைச் சூழ்ந்திருந்த வாசனைத் தைலம், சென்ட் முதலியவைகளின் மணமும் கீழே இறங்கியது!

லில்லி பத்தடி சென்றதும் அவளை எட்டிப் பார்த்தேன். மெல்லிய தேகம், கொடிபோல் துவண்டு, ஆடி, அசைந்தது....! உடலின் அசைவுக்கு ஏற்றாற்போல ஜார்ஜெட் புடவையின் நெளிவு, கண்ணுக்கு ஓர் விருந்தாக அமைந்திருந்தது.

விருட்டென்று உடலை உள்ளுக்கு இழுத்துக் கொண்டு படுக்கையில் அமர்ந்தேன். மனத்தில் சுரீரென்ற எரிச்சல். பரபரப்புடன் எழுந்து சாமான்கள் வைக்கும் மேல் தட்டைப் பார்த்தேன். தோல் பை பத்திரமாகக் கிடந்தது. மன நிம்மதியுடன், உட்காருமிடத்தில் நான் விரித்திருந்த படுக்கையின் தலையணைக்குக் கீழே அதை வைத்து விட்டுச் சாய்ந்து கொண்டேன்.

சிறிய தோல் பை தான், அது. ஆனால், லட்ச ரூபாய் சொத்து அதில் அடக்கம்! 'கற்பகா டிரேடர்ஸி'ன் முதலாளியான திருவாளர் கற்பகவிநாயகத்தின் மானம், மரியாதை எல்லாம் அதில்தான் ஒளிந்து கொண்டிருக்கின்றன!

தாயாதிகளுக்குள் சண்டை. ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு பிரித்துக் கொண்ட சொத்துக்களில் தகராறு. 'மைனர் பிள்ளையின் உரிமைகளையும் உடைமைகளையும் பறித்துக் கொண்டு விட்டார் கற்பக விநாயகம் என்று வழக்கு. மைனர் மேஜராகி விட்டார். வழக்காட உரிமை கிடைத்து விட்டது. தூண்டி விட்டு, அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ளும் சந்தர்ப்பவாதிகளின் ஒரு கோஷ்டி 'மேஜர்'ருக்குத் துணை செய்தது. பாவம், கற்பக விநாயகம்! நேர்மையாகவே வாழ்ந்து விட்டவர். எதிராளிகள் கேட்கும் தொகையைக் கொடுத்து விட்டு நீதி மன்றத்தின் வாயிற்படியையே எட்டிப் பார்க்காமலிருக்க அவருக்கு முழு சம்மதம். அப்படித் தணிந்து போக முயன்றால் குற்றம் அவருடையது என்றல்லவா ஆகிவிடும்?....

கடவுள்தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்! எதிர்க்கட்சிக்காரர்கள் மோசடி செய்யத் தயங்க மாட்டார்கள். பொய்ச் சாட்சியும் பொய்க் கையெழுத்தும் அவர்களுக்குத் தண்ணீர் பட்ட பாடு! ஏன், கற்பக விநாயகத்தைத்தான் எப்படியெல்லாம் மிரட்டியிருக்கிறார்கள்? நேரிலும், கடித மூலமாகவும், தனியாகவும், கூட்டாகச் சேர்ந்தும்....அப்பப்பா!.....பணம் பண்ணுகிற வேலை! லட்சம் ரூபாய்!

கற்பக விநாயகத்தின் குவிந்து கிடக்கும் செல்வம் அவர்கள் ஆசையைத் தூண்டுகிறது. ஆனால், அந்தச் செல்வ மலையின் ஒவ்வொரு அணுவும் கடுமையான உழைப்பு, முன் யோசனை, வியாபார தந்திரம், நேர்மை— இவைகளின் பயன் என்பதை அவர்கள் உணர்வார்களா?

'கற்பகா டிரேடர்ஸி'ன் ஆரம்பகாலச் சிப்பந்திகளில் நானும் ஒருவன். கோட்டை



ரெஸாக்...

போல் வளர்ந்து விட்டிருக்கும் அந்த ஸ்தாபனத்தின் அஸ்திவாரத்தில் எனக்கும் பெரும் பங்கு உண்டு. இன்றுவரை வஞ்சனை இல்லாமல் உழைத்திருக்கிறேன். இரவு, பகல் பாராமல் 'கற்பகா டிரேடர்ஸி'ன் வளர்ச்சிக்காகப் பாடு பட்டிருக்கிறேன். என் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் எனக்கு எப்பொழுதும் கிடைத்து வந்திருக்கிறது. இப்போது நான் செய்யும் இந்த அந்தரங்கமான வேலைக்கும் கூட எனக்குப் பலன் உண்டு!....

ஜன்னலுக்கு வெளியே நின்று கொண்டிருந்த ஜனங்கள், விர்ரென்று நகர்ந்து கொண்டிருந்தனர். ஒரு கணம் நான் திடுக்கிட்டு விட்டேன். ரயில், பிளாட்பாரத்தைத் தாண்டும் போதுதான் எனக்கு விஷயம் புரிய வந்தது. ரயில் கிளம்பி விட்டது. சிந்தனையில் ஆழ்ந்திருந்ததனால் மணி அடித்தது. கார்டு 'விசில்' ஊதியது. இஞ்சின் கூவியது: எவையுமே காதில் விழவில்லை!



திரும்பி இருபுறத்துக் கதவுகளையும் நோக்கினேன். இரண்டும் உட்புறம் தாளிடப் பட்டிருந்தன. திருப்தி பொங்கும் முகத்துடன் தலையணையைத் தூக்கிப் பார்த்தேன். புதிய தோல் பை, மின்னொளியில் பளபளத்தது. இந்தப் பிரயாணத்துக்கு என்றுதானே அதை வாங்கினேன்!

கையில் ஒரு நாவலைப் பிரித்து வைத்துக் கொண்டு நிம்மதியாகச் சாய்ந்து கொண்டேன். நாவல் மிகவும் ரஸமானதாக இருந்தது. நேரம் போனதே தெரியவில்லை! பல ரகமான கூச்சல் கேட்டு எழுந்து உட்கார்ந்து வெளியே பார்த்தேன்.

நான் உணவருந்த வேண்டிய ஊர் இது தான். மீனு, ஆயிரம் முறை சொல்லியனுப்பி இருக்கிறாள்.

"இதோ பாருங்கள், நீங்கள் பாட்டுக்கு முதல் வகுப்பில் பிரயாணம் செய்கிற ஜோரில் சாப்பாட்டை மறந்து விடாதீர்கள்! அரக்கோணம் வந்தவுடன் சாப்பிட்டு விடுங்கள். அதற்கப்புறம் போனால் வெகு நேரமாகி விடும். உங்கள் உடம்புக்கு ஆகாது...."

"உன் இஷ்டம், உன் இஷ்டம்" என்று அரைக் கோபத்தில் இரைந்தவாறே காது களைப் பொத்திக் கொண்டேன். பின் என்ன? நான் எவ்வளவுதான் கரடியாகக் கத்தினாலும் முடிவில் வெற்றி அவளுக்குத்தான். அவள் பிடிவாதம் தெரிந்திருக்கும்போது அனாவசியமாக அவளுடன் வாதுக்கு நிற்பானேன்?

'டாக்ஸி'யில் படுக்கையை எடுத்து வைத்த போது, மறக்காமல் 'டிபன் காரியரை'யும் கொண்டு வந்து வைத்தாள், மீனு. அதைக் கண்டதும் எனக்குத் திடீரென்று எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

"கஷ்டம், கஷ்டம்! எத்தனை சாமான்களை ஒரு மனுஷன் சுமக்கிறது?"

மீனுவின் குரல் தணிந்து, பதில் கண்டிப்பாக வந்தது. "நீங்களா சுமக்கப் போகிறீர்கள்? ரயிலும், போர்ட்டரும்தானே!.."

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. முறைத்துக் கொண்டு டாக்ஸியில் ஏறினேன். என் பெண் கௌசல்யா, கன்னங் குழியச் சிரித்துக் கொண்டே, "போயிட்டு வாருங்கள், அப்பா!" என்றாள். கோபு, பலூன் போல் முகத்தை வைத்துக் கொண்டு நின்றான். தன்னை அழைத்துக் கொண்டு போகவில்லை என்ற கோபம் அவனுக்கு!

டாக்ஸி நகர்ந்தது. நான் எல்லோருக்குமாகச் சேர்த்துத் தலையை ஆட்டினேன்.

"அரக்கோணம் வந்ததும் மறந்து விடாதீர்கள்!" என்று கத்தினாள் மீனு.

அரக்கோணம் வந்து விட்டது. 'சாப்பிட்டு விடலாமே!' என்று தோன்றியது. கையில் இருந்த புத்தகத்தை மூடினேன். 'டிங், டிங்' என்று இரண்டாவது மணியும் அடித்தார்கள். இஞ்சின், முன்னறிவிப்புக் கொடுத்தது.

"ஸார், ஸார்...கொஞ்சம் கதவைத் திறவுங்கள், வண்டி புறப்படப் போகிறது!"

அவசரம் அவசரமாகக் கதவைத் திறந்தேன். மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்க அந்த மனிதர் உள்ளே ஏறினார். கையில் ஒரு துணிப் பை மட்டும் இருந்தது.

"கண் மூக்குத் தெரியாத வேகத்தில் காரை ஓட்டிக் கொண்டு வந்தேன், ஸார்!

அப்படியும் வண்டி புறப்படுகிற சமயத்திலே தான் ஸ்டேஷனுக்குள் நுழைய முடிந்தது !'' எதிர்ப் படுக்கையில் அமர்ந்த அவர் தானாகப் பேச ஆரம்பித்தார்.

ஏறக்குறைய முப்பது வயதிருக்கும் அவருக்கு. களையான முகம் என்று வேண்டுமானாலும் சொல்லலாம். நைசான மில்-வேஷ்டி, உள்ளே அணிந்திருந்த பனியன் மிக நன்றாகத் தெரியும்படி துல்லியமான ஜிப்பா, விரல்களில் நாலைந்து மோதிரங்கள், கைக் கெடிகாரம், கழுத்தில் மெல்லிய பவுன் சங்கிலி — இவ்வாறு காட்சியளித்தார் அவர். இந்த மனிதர் பேசும் போது நான் எப்படிப் பதில் சொல்லாமல் இருப்பது? ''ரொம்பத் தூரத்திலிருந்து வருகிறீர்களா....?''

''இல்லே. முப்பது மைல்தான் !...... போன காரியம் முடிந்து விட்டது. அநாவசியமாக அங்கே அப்புறம் தங்குவானேன் ?'' என்றார் அவர்.

விசிறிகளின் காற்று போதாதென்று, கைக்குட்டையை எடுத்து அலட்சியமாகச் சுழற்றினார் அவர். மருக்கொழுந்தின் மணம் 'கும்'மென்று பரவியது. மணத்தை இலேசாக உள்ளுக்கு இழுத்தேன். மனத்துக்கு மிகவும் இன்பமாக இருந்தது.

'' நீங்கள் எத்தனை தூரம் போகிறீர்கள்?''

உண்மையைக் கூறுவதா, வேண்டாமா என்று மனத்துக்குள் தர்க்கம். ஆனால், நாக்கு முந்திக் கொண்டது. '' கோயமுத்தூர்..''

'' நம்மைத் தாண்டித்தான் போறீங்க! நான் ஈரோட்டில் இறங்கணும்....''

பையைத் தலைக்கு உயரமாக வைத்துக் கொண்டு அவர் படுக்கையில் சாய்ந்தார்.

சாப்பாடு நிறைந்த எவர்ஸில்வர் பாத்திரம் என் கண்களில்பட்டு வயிற்றைக் கிளறியது. அரக்கோணம் தாண்டிய பின்னும் நான் சாப்பிடாமல் இருந்தது மீனுவுக்குத் தெரிந்தால் கோபித்துக் கொள்ள மாட்டாளா ?

ஆனால், சாப்பிட்டபின் கை அலம்புவதற்கு எதிர் உள்ளுக்குச் சென்றுதானே ஆக வேண்டும் ? அப்போது சக பிரயாணி தோல் பையிலிருந்து தஸ்தாவேஜிகளை எடுத்துக் கொண்டு விட்டால்.....?

சே ! என்ன பைத்தியக்காரத்தனமான யோசனை ! அவராவது, எடுத்துக் கொள்ளவாவது ? நான் எங்கே போகிறேன், எதற்குப் போகிறேன் என்பதெல்லாம் அவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும் ?

தெரியாது என்று என்ன நிச்சயம் ? ஒரு வேளை, கற்பக விநாயகத்தின் எதிரிகள் அனுப்பிய ஆளாகவும் இருக்கலாம் !

இருக்கும், இருக்கும் ! இந்தக் காலத்தில் யாரை நம்ப முடியும் ?

கண் ஏங்கியது ; கரங்கள் துடித்தன ; வயிறு அழுதது. ஹூ....ஹூம் ! நான் தகரவில்லை ! ஒரு வேளை சாப்பாடு இல்லாவிட்டால் உயிரா போய்விடும் ? ஆனால், தோல்பை போய் விட்டால் என் உயிரே போன மாதிரிதான் !

திடீரென்று ஒரு சந்தேகம். '' இவர் என்னை அடித்துப் போட்டு விட்டால் ?''

இந்தச் சந்தேகம் எழுந்ததும் என் உடல் ஒரு முறை விதிர்த்தது. தலையை நிமிர்த்தி 'அபாய அறிவிப்புச்சங்கிலி'யுள்ள இடத்தைப் பார்த்துக் கொண்டேன். கை, எந்த நிமிஷத்திலும் அதன்மீது தாவத் தயாராக இருந்தது!

அவர் எழுந்து உட்கார்ந்தார். பையிலிருந்து இரண்டு, மூன்று ஆரஞ்சுப் பழங்களை எடுத்து அவற்றில் ஒன்றை என்னிடம் நீட்டினார்.

'' வேண்டாம், ஸார்! இப்பொழுதுதான் சாப்பிட்டேன்....''

''சும்மா வாங்கிக் கொள்ளுங்கள், ஸார் ! நான் ஒன்றும் தாராள மனத்தோடு கொடுத்து விடவில்லை !...பழம், பைக்குள் இருப்பதால் தலையைச் சுகமாக வைக்க முடியவில்லை..''

சிரித்தவாறே பலவந்தமாக என் கையில் ஒரு பழத்தைத் திணித்தார். வெறுப்புடன் பெற்றுக் கொண்டேன்.

அவர் பழத்தைக் கொடுப்பதற்காக என்னை நோக்கி நகர்ந்தபோது, மறுபடியும் குப்பென்று மருக்கொழுந்தின் மணம் நாசியைத் தாக்கியது. அப்பப்பா ! மருக்கொழுந்து மணம்தான் மனிதனை எப்படி மயக்குகிறது!.. மனுஷன், சுகபுருஷர் போலிருக்கிறது !

''என்ன ஸெண்ட் ஸார், இது ?...பிரமாத வாசனையாக இருக்கிறதே !''

''மருக்கொழுந்து ஸெண்ட்டுங்க!...எங்கள் வீட்டுக்கு 'ஸ்பெஷலா' வருது.....'' என்று சொல்லி விட்டுக் கைக்குட்டையை மூக்கில் வைத்து ஏகபோகமாக மணத்தை நுகர்ந்தார்.

எனக்குப் பொறுமையாகக்கூட இருந்தது ! அவரோ, அலட்சியமாகக் கைக்குட்டையை ஜிப்பாவின் பையில் திணித்து விட்டு ஆரஞ்சுப் பழத்தை உரிக்க ஆரம்பித்தார்.

பத்து நிமிஷம் கடந்தது. எழுந்து சென்று கையைக் கழுவி விட்டு வந்து இடத்தில் அமர்ந்தார். கைக்குட்டையை எடுத்து உதட்டைத் துடைத்துக் கொண்டார்.

இப்போது வெளிப்படையாகவே 'ஸெண்ட்'டின் மணத்தை நுகர்ந்தேன்.

''உங்களுக்கும் ஸெண்ட்டுன்னு பிடிக்கும் போல் இருக்கிறது !''

''ஹி....ஹி....''

''இந்தாங்க...இந்தக் கர்சீப்பை முகர்ந்து பார்த்தால் வாசனை தூக்கிக்கிட்டுப் போய் விடும்..'' ஜிப்பாவின் மற்றொரு பையிலிருந்து ஒரு கைக் குட்டையை எடுத்து என்னிடம் நீட்டினார் அவர்.

ஒரு கணம் தயக்கம்.

''நல்ல வாசனை, ஸார்...''

திடீரென்று ஒரு துணிச்சல். கைக்குட்டையை நாசியில் அழுத்திக் கொண்டேன். ஆமாம் ! அவர் கூறியதைப் போல வாசனை என்னைத் தூக்கிக் கொண்டே போயிற்று ! மணம் தந்த போதையில் நான் வசமிழந்தேன்.

கண் விழித்தவுடன் என்னை நான் உணரவே சில கணங்கள் தேவைப்பட்டன. ரயில் வண்டி ஏதோ ஒரு நதியின் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்திருக்க வேண்டும். 'கடபுடா' என்று காதைப் பிளக்கும் சப்தம். என்னைச் சுற்றி, ஒட்டிக் கொள்ளும் இருள். தட்டுத் தடுமாறி 'ஸ்விச்'சைக் கண்டு பிடித்து விளக்கைப் போட்டேன். ஜிப்பாக்காரரைக் காணவில்லை ! நடுங்கும் கரத்துடன் தலையணையை நகர்த்தினேன். தோல் பையைக் காணவில்லை! எனது எஜமானர் மிகுந்த நம்பிக்கையுடன் என்னிடம் ஒப்படைத்திருந்த தஸ்தாவேஜிகளைப் பறிகொடுத்து விட்டேன் ! ஒரு குழந்

தையை ஏமாற்றுவதைப் போல் அல்லவா, என்னை அவன் ஏமாற்றிச் சென்று விட்டான்?

அவன் கொடுத்த கைக்குட்டையில் வாசனையோடு மயக்கம் தரும் விஷ மணமும் கலந்திருந்தது என்பதை நான் அறியவில்லை.

கற்பகவிநாயகத்துக்கு நான் என்ன பதில் கூறுவேன்? முதலில், அவர் முகத்தில் எப்படி விழிப்பேன்?

'ஸார், ஸார், என்னை மன்னித்து விடுங்கள், ஸார். நான் மிகவும் ஜாக்கிரதையாகத்தான் ஸார், இருந்தேன். அந்த அயோக்கியன் இப்படி நடிப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை. உண்மையாகச் சொல்கிறேன், ஸார். தோல் பையை அவன்தான் திருடிக் கொண்டு போய் விட்டான். என் மீது நீங்கள் சந்தேகப்படாதீர்கள்.'

'மிஸ்டர் ராமன்! உங்கள் பிதற்றல்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க நான் தயாராக இல்லை. யாரிடம் கதை அளக்கிறீர்?;

'இல்லை, ஸார். நிச்சயமாக...'

'அட, சட்! நிச்சயமாக நீர் அதை எதிரிக்குக் கொடுத்து விட்டீர், அவன் உமக்கு ஐயாயிரமாகத் தரமாட்டானா என்று? இத்தனை வருஷமாக வேலை பார்க்கிறீரே, உமக்கு ஒரு குறை வைத்ததுண்டா, நான்!.. துரோகி!'

எக்ஸ்பிரஸின் வேகத்தோடு போட்டியிட்ட என் சிந்தனையின் வேகத்தில் இத்தகைய எண்ணங்கள் மனத்தில் எதிரொலித்தன. என் உடல் சிலிர்த்தது.

எதிர்நோக்கி யிருக்கும் கௌஸல்யாவின் கல்யாணமே, முதலாளியிடம் நான் எதிர்பார்த்த வெகுமானத்தைத்தான் நம்பி யிருந்தது. இப்பொழுது? படுகுழியில் அல்லவா கிடக்கிறேன்?

பெண்ணின் கல்யாணம் இருக்கட்டும். எங்கள் வாழ்வு? இப்பொழுது அதுவே ஆட்டம் கண்டு விட்டதே!

உடல்முழுவதும் ஆறாக வியர்த்துக் கொட்டி யிருந்தது. இரண்டு மின்சார விசிறிகளையும் சுழலவிட்டு விட்டுப் படுக்கையில் அமர்ந்தேன். உட்கார முடியாமல் முட்படுக்கையாகக் குத்தியது முதல் வகுப்பு.

சுழலும் விசிறிகளும், ஒளிரும் விளக்குகளும் இளிப் பச்சை தகதகத்த ரயில் பெட்டியும் என்னைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தன. கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதேன். கண்ணீர் வற்றும் வரை அழுதேன். பயன்? கண்ணிமைக்குள் நீர்ச் சித்திரமாக மீனுவும் கௌஸல்யாவும் கோபுவும் தோன்றித் தோன்றி மறைந்ததுதான் மிச்சம்!

ரயில் வண்டியின் வேகம் குறைந்தது.

ஈரோடு ஸ்டேஷனில் வண்டி நின்றது. போலீஸில் புகார் செய்வதற்காகப் படுக்கையைச் சுருட்டி வைத்து விட்டுக் கதவருகே வந்தேன்.

'' மிஸ்டர்...''

''யா...யாரு?...நீங்களா?''

''ஆமாம். மன்னிக்க வேண்டும்?''

''எதற்கு?''

''அவசரத்தில் உங்கள் தோல் பையை எடுத்துக் கொண்டு போய் விட்டேன்!....''

''ஆ!.....தோல் பை!...''

''என் தம்பிக்காக வாங்கினேன். ஸென்ட்ரலில் இந்தக் கம்பார்ட்மெண்டில் நுழைந்ததும் மேல் தட்டில் வைத்தேன். அன்று அவசரமாகக் கூப்பிட்டதும் அருகே இருந்த உங்கள் பையை மறதியாக எடுத்துக் கொண்டு போய்! விட்டேன்! இந்தாருங்கள். அந்தப் பையைத் தருகிறீர்களா?''

அவள் கையிலிருந்து பையைப் பிடுங்குகிறாற் போல் வாங்கிக் கொண்டேன்.

'' அந்தப் பை காணாமல் போய் விட்டதம்மா....'' என்று கூறி, நடந்த கதையைச் சுருக்கமாகக் கூறினேன்.

''நீங்கள் அதிர்ஷ்டக்காரர்! நான் செய்த தவறான செயல் உங்களுக்கு நன்மையையே செய்திருக்கிறது!''

'' தவறான செயலா? தெய்வம் செய்யும் செயல், அம்மா! தெய்வச் செயல்! ரொம்ப நன்றி. தோல் பைக்கு உரிய பணத்தை வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன்.''

'' பாதகமில்லை! என்னையறியாமலே உங்களுக்கு உதவி செய்ய முடிந்ததில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.''

போர்ட்டர் பின்தொடர, அவள் நகர்ந்தாள். அவளையே பார்த்துக் கொண்டு நின்றேன். அவள் நடையின் கொடித் தன்மை எனக்கு வள்ளியை - நான் வணங்கும் தெய்வமான முருகனின் வள்ளியை-நினைப்பூட்டியது.

திலகரும் கோகலேயும்

இவ்விரு பெரியார்களும் அரசியலில் மாறுபட்ட கட்சியினராயினும் பரஸ்பரம் அன்பும் மதிப்பும் உள்ளவர்கள். கோகலே, தீரர் திலகரைப் பற்றிச் சொல்லி யிருப்பதைப் பாருங்கள்:

"திலகர்மாதிரி நாட்டுக்காகக் கஷ்டப்பட்டவர்களையோ, பலம் வாய்ந்த எதிரிகளைச் சமாளித்தவர்களையோ காண முடியாது. அவர் மாதிரி உறுதியும், பொறுமையும் தீரமும் காட்டியவர்களைக் காணுவதும் அரிது. அநேக தடவைகளில் அவர் தமது சொத்துக்களையெல்லாம் இழந்திருக்கிறார். ஆனால் அவரது தளராத உறுதியினால் அவைகளை மீட்டிருக்கிறார்."

★



பாக்யசாலிக் குழந்தை!
அனுபவமுள்ள அப்பா!
குழந்தைக்கு ஓரே குஷி! அவன் தகப்பனார் எப்பொழுதும் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் வாங்கி வருகிறார். என்ன குளுமை! என்ன மென்மை! அந்தக் குழந்தையின் சருமத்திற்கு எவ்வளவு இனிமையானது!
Johnson's
ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்
Johnson's
BABY
POWDER
இலவசம் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு வேண்டிய அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. சுலபமாகப் புரிந்து கொள்ளும்படியான இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டுள்ளது.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 20J
பம்பாய்

ஒவ்வொரு இரவும் அதே கதை தான். குழந்தை நிலையில்லாமல் அயர்ந்து போயிருந் தான். பகலிலோ அதிலும் மோசம். தாயார் ஆத்திரப்பட்டிருந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை.





ஒரு நாள் அவள் அண்டை வீட்டுக்காரி யின் யோசனையைக் கேட்டாள். அவள் சொன்னாள் "குழந்தை சந்தோஷமாயும் ஆரோக்கியமாயுமிருக்க அவனுக்கு உணவு கணக்காய் புகட்ட வேண்டும்" தவிர 'க்ளாக்ஸோ'வை வாங்கும்படி அவள் வற்புறுத்திச் சொன்னாள்.

'க்ளாக்ஸோ' ஒரு புஷ்டியான பால்-உணவு உறுதியான எலும்பும் பற்களும் வளர விட்டமின் 'டி'யும் ரத்தத்தை வளம்பெறச் செய்ய இரும்புச் சத்தும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.





அப்பாடா! குழந்தை எவ்வளவு விரைவில் வளர்ச்சியடைந்தான் என்பதை நீங்கள் நம்பவே மாட்டீர்கள். விரை வில் அவனுக்கு ஒரே ஆனந்தம் தான்! இரவு முழுவதும் நேர்த்தியாய் தூங்க லானான், நிதானமாய் எடையும் அதிகமாயிற்று.

Glaxo

'க்ளாக்ஸோ' குழந்தைகளின் மிகச் சுத்தமான பால் உணவு

D 36

தேர்தல் முடிவு!

விரசா



தாழம்பூ மேனி; தாமரை முகம். முல்லைப் பல் வரிசை. தலையிலே கதம்பம்.—இப்படி ஒரு நடமாடும் பூக்கடையாகக் காட்சி தந்தாள் காஞ்சனா. அவளது பூப் போன்ற உடலை, பூப் போட்ட கட்டாவ் வாயில் அணைத்திருந்த அழகே தனி! காஞ்சனா சந்தானம் பிள்ளையின் மூத்த மகள். வாசற்படியில் வந்து நின்ற சுந்தரத்தைக் கண்டதும் அவள், "யாரைப் பார்க்க வேண்டும்?" என்று கேட்டாள்.

அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரம் திடுக்கிட்டு, "சந்தானம் பிள்ளையைப் பார்க்க வேண்டும்!" என்றான்.

"உள்ளே இருக்கிறார். வாருங்கள்." என்று சொல்லி விட்டு ஓடி மறைந்தாள் அவள்.

ஊரில் சில நாட்களாகவே மக்களது பேச்சில் எருமை மாடும், ஏகாம்பரமும் அடிபட்டுக் கொண்டிருந்தன. தேர்தல் சமயம். மண்டிக் கடை ஏகாம்பரமும், மாவு மில் கோவிந்தசாமியும் எட்டாவது வார்டுக்குப் போட்டி போட்டனர். எருமைமாடு ஏகாம்பரத்தின் சின்னம். குதிரைப் பெட்டி கோவிந்தசாமிக்குச் சொந்தம்.

அந்தப் பகுதியில் மொத்தம் முந்நூறு வோட்டுகள். அதில் நூற்று நாற்பத் தொன்பது வோட்டுகளைத் தமது உரிமையாக்கிக் கொண்டிருந்தார் ஏகாம்பரம். கோவிந்தசாமியும் பெரிய புள்ளிதான். நூற்று நாற்பது வோட்டுகளை மடக்கியிருந்தார்.

பதினொரு வோட்டுகள் உள்ள அந்த வீட்டை மட்டும் இருவராலும் அண்ட முடியவில்லை. காரணம், அதன் சொந்தக்காரரான சந்தானம் பிள்ளை வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியூர் போயிருந்தார்.



அன்று காலையில்தான் சந்தானம் பிள்ளை ஊருக்குத் திரும்பி வந்தார் என்றும், இரவு அவரைச் சந்திக்கக் கோவிந்தசாமி திட்டமிட்டிருப்பதாகவும் ஏகாம்பரத்துக்குத் தெரிய வந்தது. ஏகாம்பரம் தமது மகன் சுந்தரத்தை அவர் வீட்டுக்கு முன்னதாக முடுக்கி விட்டார்.

வந்த காரியத்தை மெதுவாக விவரித்தான் சுந்தரம்.

"என் தந்தையின் வெற்றி உங்கள் கையில்தான் இருக்கிறது. தயவுசெய்து உங்கள் வோட்டுகளை என் தந்தைக்குப் போட வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

சந்தானம் பிள்ளை மேலே குருவிக் கூட்டைப் பார்த்துக் கொண்டிருந்தவர் தொண்டையை ஒரு தடவை கனைத்துக் கொண்டார்.

"இந்தத் தேர்தல் விஷயம் மகா தொந்தரவு பிடிச்ச விஷயம், தம்பி!" என்றார் சந்தானம் பிள்ளை.

"ஆமாம், சார்!"

மறுபடியும் பார்வையைக் குருவிக் கூட்டுக்குத் திருப்பிய சந்தானம்பிள்ளை, "இதோ பார், தம்பி! மாவு அரைக்க எப்போதும் கோவிந்தசாமி மில்லுக்குத் தான் போகிற வழக்கம். அவன் வேறு என்னைப் பார்க்க வேணும் என்று சொன்னான்" என்றார்.

சுந்தரத்துக்கு வியர்த்துக் கொட்டியது. முகத்தைத் துடைத்துக் கொள்ளக் கைக் குட்டையை எடுத்தபோது 'பர்ஸ்' கீழே விழுந்தது. சுந்தரம் பர்ஸை எடுத்துப் பையில் வைத்துக் கொண்டு, "சார்! நீங்கள் இப்படிச் சொல்லக் கூடாது. உங்கள் தயவு வேண்டும். இதில் தோற்றால் என் தந்தையின் மனம் உடைந்து போய் விடும்!" என்று கெஞ்சினான்.

"சரி, இவ்வளவு தூரம் நீ சொல்கிற போது மறுக்க மனம் வரவில்லை!" என்று சந்தானம் பிள்ளை சொன்ன பொழுது சுந்தரத்தின் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. ஒரு கும்பிடு போட்டு விட்டு எழுந்திருந்தான்.

"என்ன அவசரம், தம்பி! கொஞ்சம் உட்காரு!" என்று சந்தானம் கூறவே

சுந்தரத்தின் குதூகலம் திரும்பிப் பார்க்காமல் ஓடி விட்டது.

'இதென்னடா வம்பு?' என்று நினைத்தான் சுந்தரம். அவன் மனம் 'டிக், டிக்' என்று கடியார ஓசை எழுப்பியது.

"உன் வயது என்ன, தம்பி?"

"இருபத்தி மூன்று சார்!"

"படிப்பு?"

இதென்ன சங்கடமான கேள்வி?

சுந்தரத்துக்குக் கோபம் கோபமாக வந்தது. சூடாக ஏதாவது சொல்ல வேண்டும் என்று எண்ணி வாயைத் திறந்தான். அதற்குள் கதம்ப வாசனை நாசியைத் துளைத்தது. "அப்பா!" என்றழைத்தவாறே நங்கை நல்லாள் வந்தாள். மகர் யாழா, மங்கையின் குரலா என்று தெரியாமல் திண்டாடிப் போனான் சுந்தரம்!

"வா அம்மா, காஞ்சனா!" என்று வரவேற்றார் சந்தானம்.

"காப்பி தயார்!" என்று தட்டை மேஜை மேல் வைத்தாள் அவள்.

"சாப்பிடு, தம்பி!" என்ற சந்தானம் தமது மகள் பக்கம் திரும்பி, "இவர் யார், தெரியுமா? நம் ஏகாம்பரத்தின் மகன். வோட்டு விஷயமாக வந்திருக்கிறார்" என்றார்.

"ஏகாம்பரம் நல்லவராம். அவருக்கே வோட் போடுங்கள், அப்பா!"

காஞ்சனையின் கனிவான பதிலைக் கேட்ட சுந்தரம் நன்றியுணர்ச்சியோடு அவளைப் பார்த்தான். அவன் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது.



சந்தானம் பிள்ளையைச் சந்தித்த விவரத்தைச் சொல்லித் தன் தந்தையிடம் 'சபாஷ்' பெற்ற சுந்தரம் கையோடு கையாக, "உங்களுக்கு நான் ஓர் உதவி செய்தது போல், நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும்?" என்றான் மெதுவாக.

"என்னடா உதவி செய்யணும்?" என்று கேட்டார் தந்தை.

"சந்தானம் பிள்ளையின் மூத்த மகள் காஞ்சனாவை நான் மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன்."

"என்ன சொன்னாய்?"

ஏகாம்பரத்துக்கு மூச்சு முட்டியது. வோட்டு விஷயமாகப் போனவன் இப்படி மாட்டிக் கொள்ளுவதா? என்ன அசட்டுத்தனம்?

"இதோ பார், சுந்தரம்! சந்தானம் பிள்ளையோ பெரிய சம்சாரி. பதினொரு குழந்தைகள் பெற்றவர். நீ அவருடைய மூத்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டால் ஒரு பெரிய பட்டாளமே நம் வீட்டில் வந்து 'டேரா' போட்டு விடும். அப்புறம் வீடு தண்ணீர்ப் பந்தல்தான்" என்றார்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது, அப்பா! வருகிற ஞாயிற்றுக்கிழமை நல்ல முகூர்த்த நாளாம். வாக்குக் கொடுத்து விட்டேன். அன்றே திருமணம் நடந்தாக வேண்டும்" என்றான் அவன்.

"பெரிய அரிச்சந்திரன் பேரன் இவன். வாக்குக் கொடுத்து விட்டானாம்! வாக்கு!" என்று எரிந்து விழுந்தார் ஏகாம்பரம்.

"எனக்கு என்ன அப்பா? நீங்கள் கேட்டால் கேளுங்கள், கேட்காவிட்டால் போங்கள். இன்றைக்குப் பதினைந்தாம் நாள் தேர்தல். இன்றைக்கு எட்டாம் நாள் ஞாயிற்றுக் கிழமைக்குள் கல்யாணம் நடக்கா விட்டால் கோவிந்தசாமி தேர்தலில் வெற்றி பெற்று விடுவார்! அவ்வளவுதான் எனக்குத் தெரியும்!"

"தேர்தலுக்கும் உன் கல்யாணத்துக்கும்...."

"என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்கள்?.. எனக்கும் காஞ்சனாவுக்கும்

வருகிறஞாயிறன்று மணம் நடக்கவேண்டும். அதற்கு நீங்கள் மறுத்தால் தமது பதினொரு வோட்டுகளும் கோவிந்தசாமிக்குப் போய்விடும் என்று சந்தானம் பிள்ளை சொல்லச் சொன்னார்.''

''அடப்பாவி?.. சரியான சிக்கலில் நம்மை மாட்டி வைத்து விட்டானே?''

தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்தார் ஏகாம்பரம்.

ஏகாம்பரம் தமது செல்வாக்கில் தேர்தலில் ஜெயித்து விடலாம் என்று நினைத்தார். மகனின் விருப்பத்துக்கு இணங்காவிட்டால் தோல்வி நிச்சயம் என்று தீர்மானம் ஆகிவிடவே அவன் விருப்பப்படியே மணம் செய்து வைப்பதாக வாக்களித்தார். தேர்தலில் தோற்று அவர் அவமானப்படுவதற்கு விரும்பவில்லை. அதனால் பணத்தைப் பணம் என்று பாராமல் தண்ணீராகச் செலவிடவும் செய்தார். ஏகாம்பரம் தேர்தலில் செய்யும் செலவைக் கண்டு சந்தானம் பிரமித்தார்.

ஞாயிற்றுக் கிழமை வந்தது. அதி விமரிசையாகக் கல்யாணமும் நடந்தது.



'பூக் கடையை' உரிமை யாக்கிக் கொண்ட சுந்தரம் தகப்பனுக்குப் பயந்து தனது டேராவைச் சந்தானம் வீட்டிலேயே போட்டுக் கொண்டான்.

தேர்தல்தினத்தன்று ஊரே இரண்டுபட்டது. கார்கள் இங்கும் மங்கும் பறந்தன. ஒரே அலைச்சல், இரைச்சல்!

தேர்தல் முடிந்து இரண்டு நாட்கள் நிம்மதியாகத் தூங்கினார் ஏகாம்பரம். மூன்றும் நாள். 'வோட்' எண்ணிக்கை தினம். மாலை நான்கு மணிக்கு முடிவு தெரிந்தது.

பாவம்! ஏகாம்பரம் தேர்தலில் தோற்றுப் போய்விட்டார்!

அவருக்குத் தலை சுற்றியது. படுபாவி! சந்தானம் அவரை மோசமல்லவா செய்து விட்டார். உஷ்ணக் காற்று நாசியிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்க, தடியை எடுத்துக் கொண்டு மேலத் தெருவுக்கு வேகமாக ஓடினார்.

கூடத்தில் தன் அருமை மனைவி காஞ்சனாவோடு சிரித்து அளவளாவிக் கொண்டிருந்தான் சுந்தரம்.

திடீரென்று, வாசலில் செருப்புச் சத்தம் கேட்பதை யறிந்து திரும்பினாள் காஞ்சனா. அவர்கள் வீட்டு வாசற் படியில் ஏறுபவரைக் கண்டு திடுக்கிட்டு, ''அப்பா!'' என்றாள் காஞ்சனா.

''உன் அப்பாதானே? பரவாயில்லை'' என்றான் சுந்தரம்.

''இல்லை. உங்கள் அப்பா!'' என்றாள் அவள் அரண்டபடியே.

சுந்தரம், ''ஐயோ!'' என்று அலறியவாறு எதிர் அறைக்குள் அடைக்கலம் புகுந்தான்.

''வாருங்கள்'' என்று வரவேற்ற மருமகளையும் மதிக்காமல், ''எங்கே சந்தானம்?'' என்று கர்ஜித்தார் ஏகாம்பரம்.

''எப்போது வந்தீர்கள்?'' என்று கேட்டவாறே சந்தானம் உள்ளிருந்து வெளியே வந்தார்.

''ஏன், சந்தானம்! நீ இப்படி அக்கிரமம் செய்யலாமா? இது உனக்கு அடுக்குமா? உன் விருப்பப்படி நடந்தும் என் தலையிலே கல்லைப் போட்டு விட்டாயே!'' என்று அலறினார் ஏகாம்பரம்.

மெதுவாகச் சுந்தரம் தலையை நீட்டினான்.....

''நான் நல்லதுதானே செய்தேன், ஏகாம்பரம்! இப்படி அடிக்கடி நீ தேர்தலுக்கு நின்று பணத்தை வாரி இறைத்தால் என் மகளுக்கும், மருமகப் பிள்ளைக்கும் ஒன்றும் மிஞ்சாது. பின்னால் அவர்கள் சிரமப்பட நேரிடும். இதை யெல்லாம் யோசித்தே எங்கள் வோட்டுக்களைக் கோவிந்தசாமிக்குப் போட்டேன்! நான் செய்தது.....''

சந்தானம் பிள்ளை வாக்கியத்தை முடிக்கவில்லை. அதற்குள் சுந்தரம், ''மகா புத்திசாலித்தனம்!'' என்று கூறி முடித்தான்.

அவனை ஒருதடவை முறைத்துப் பார்த்தார் ஏகாம்பரம். அவர் கோபம் முழுதும் அந்தப் பார்வையிலே தெரிந்தது.

உடனே ஓடி அவன் 'பூக்கூடை'க்குப் பின்னால் ஒளிந்து கொண்டான்.

ஏகாம்பரம் 'தோல்வி'யோடு வீடு திரும்பினார். தேர்தலின் பயனைத் தங்கள் காதலின் வெற்றியை அந்த இளம் தம்பதிகள் குதூகலத்துடன் கொண்டாடியதை அவர் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை.

ப்ளாஷ்




வீட்டிலுள்ளோ, அல்லது வெளியிலோ, ப்ளாஷ்ஹோல்டர் பொருத்தியோ, பொருத்தாமலோ, இப்படி நேர்த்தியான படங்களை கோடக் 'ட்ரை-X' பிலிமில் எடுங்கள். உங்கள் கோடக் வியாபாரிகளிடம் 'நல்ல படங்கள் எப்படி தயாரிப்பது' என்ற படங்கள் கொண்ட கோடக் புத்தகத்தைக் காண்பிக்கச் சொல்லுங்கள்.

நம்பகமான 'கோடக்' காமிரா மூலம் நீங்கள்

இல்லாமல்கூட

வீட்டினுள் படங்கள் எடுக்கலாம்!

கோடக் 'ட்ரை-X' பிலிமின் சிறப்பு!




வீட்டினுள்ளேயே தங்கி தவிக்க வைக்கும் இந்த மழை காலம்தான், உங்கள் குடும்பத்தினர்கள், மற்றும் சிநேகிதர்களின் மனங்கவரும் படங்களை வீட்டினுள்ளே வைத்து எடுக்க சரியான தருணம். அதி வேகமுள்ள கோடக் 'ட்ரை-X' பிலிமை உங்கள் காமிராவில் பொருத்தி, வீட்டினுள்ளோ அல்லது வெளியிலோ எக்கோணத்திலும் ஒரு சாதாரண பாக்ஸ் காமிரா கொண்டே உங்களுக்குத் தேவையான படங்களை எடுங்கள்.

பகலில் வீட்டு அறைக்குள் படங்கள் எடுக்க, வராந்தா கதவு அல்லது ஜன்னலுக்கு எதிரே அதிக வெளிச்சமான பாகத்தை பயன்படுத்துங்கள் — நேரடியான சூரிய வெளிச்சமோ அல்லது மற்ற வெளிச்சமோ தேவையில்லை.

இருட்டின பிறகு படங்கள் எடுக்க ஒரு 'கோடக்' ப்ளாஷ்ஹோல்டரை காமிராவுடன் இணைத்து ஒரு பல்பை பொருத்தி, வழக்கம் போல் குறிபார்த்து படம் எடுக்கவும். இதைவிட சுலபமானது வேறென்ன இருக்க முடியும்! ஏனெனில், ப்ளாஷின் வெளிச்சம், எப்பொழுதும் தேவையான அளவில் இருப்பதுடன், வேண்டிய இடத்தில் விழவும் செய்கிறது.

உங்கள் கோடக் வியாபாரியிடம் ப்ளாஷ்ஹோல்டர் இணைக்க வசதியுள்ள 'கோடக்' காமிராக்களின் பற்பல ரகங்களைப் பார்வையிடுங்கள். அல்லது ஒரு காமிரா உங்களிடம் இருந்தால், அதில் பொருத்தக்கூடிய ஒரு 'கோடக்' ப்ளாஷ்ஹோல்டரைக் கேட்டு வாங்குங்கள்.



கோடக் லிட்.

(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது;

கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

பம்பாய்-கல்கத்தா-டில்லி-மதராஸ் K. 2502

எப்பொழுதும் நேர்த்தியான படங்களை எடுக்க முடியும்

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

36

ஒரே ஊருக்குப் போகும் பல பாதைகளைப் போலாகும் சமயங்கள். போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேரும் பாதைகளில், எந்தப் பாதையில் போனால் என்ன, குற்றமில்லை. ஆராய்ந்து பார்த்தோமானால் உண்மையில் எத்தனை மக்கள் இருக்கிறோமோ அத்தனை வேறுபாடுகள் உண்டு சமயத்தில். ஒவ்வொரு உள்ளத்திலும் சமயம் என்பது தனித்தனி வடிவம் எடுத்துக் கொள்ளும். ஒரே சமயத்தாராயினும், தத்தம் அறிவுக்கும் குணத்துக்கும் தக்கபடி சமயஉணர்ச்சி மாறுபடும். ஆனபடியால் உன்னுடைய சமயம், என்னுடைய சமயம் என்று சொல்லிக் கொண்டு பேத உணர்ச்சியை வளர்ப்பது தவறாகும். எல்லா சமயங்களும் சமம்.

[ஹிந்த் ஸ்வராஜ்-பக்கம் 36]

என்னுடைய கொள்கையின்படி எல்லா மதங்களுமே உண்மையாகும். ஏற்றக் குறைவு ஏதேனுமிருந்தால் அதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. மனிதன் தொட்டது எல்லாம் பூரணத்துக்குக் குறைந்துதான் இருக்கும். எவ்விதக் குறையுமற்ற சம்பூரணம் மக்கள் உலகத்தில் எப்படிக் காணப் பெறுவோம்? கடவுள் ஒன்றே பரிபூரணப் பொருள். அந்தப் பரிபூரணப் பொருளைக் கருத்திலாவது மொழியிலாவது அடக்க முடியாது. ஒவ்வொருவனும் பூரண நிலை அடைய முடியும். அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆனால் அந்த நிலையை அடைந்து விட்டால், அது சொல்லுக்கு அடங்காத நிலையாகும். ஆனபடியால் அடக்கத்துடன் சொல்லுகிறேன், வேதமும் குரானும், பைபிளுமே ஆண்டவனை நமக்குச் சம்பூரணமாக விளக்காது. குற்றமும் குறையும் நிறைந்த நாம்,விருப்புகளிலும் வெறுப்புகளிலும் தோய்ந்திருக்கும் நாம் கடவுள் என்ற சொல்லின் பொருளைக் கூட முற்றிலும் உணர்வது முடியாத காரியம். [யங் இந்தியா 22-9-27]

ஈசன் ஒருவன் இருக்கிறான் என்பது எல்லாச் சமயங்களுக்கும் அடிப்பீடம். ஆயினும் உலகத்திலுள்ள மக்கள் எல்லாம் ஒரே ஒரு சமயத்தை ஒப்புக் கொள்வார்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை. அனைவருக்கும் ஈசன் ஒருவனே ஆயினும் அவனை அனைவரும் ஒரே வடிவத்தில் காணமாட்டார்கள். தேசத்துக்கும் சூழ்நிலைகளுக்கும் குணங்களுக்கும் ஒத்தவாறு பல வேறு சமயங்கள் இருந்தே தீரும்.

[ஹரிஜன் 2—2—34]


நாம் கோர வேண்டியது அனைவரும் ஒரே மதத்தினர் ஆவது அல்ல. ஒவ்வொரு மதத்தினரும் பிற மதத்தினரை வெறுக்காமல் பொறுத்துக் கொண்டும், கௌரவித்தும் வரவேண்டும். அவ்வளவுதான். எல்லாரும் ஒரே மதத்தை ஒப்புக் கொண்டு வேறுபாடுகள் ஒழித்து விட்டு இருக்க வேண்டும் என்பதில்லை. வேற்றுமைகளுக் கிடையில் ஒற்றுமை வேண்டும். சம்பிரதாய பேதங்களை யெல்லாம் வேரோடு பறித்து எறிந்து விட்டு, பரம்பரையாகவும் சூழ்நிலையின் காரணமாகவும் காலதேச வேறுபாடுகளினாலும் உண்டாகி வளர்ந்து வழக்கத்தி லிருக்கும் சமய பேதங்களை அடியோடு ஒழித்து விடும் முயற்சி பயன் பெறாது. முடியாத காரியம். முடிந்தாலும் அது தெய்வ பக்தியைக் கெடுக்கும். சரீர வடிவ பேதங்களைப் போன்றது சமய பேதங்கள். பேதமற்ற ஆன்ம லக்ஷணத்தைப் போன்றது வெவ்வேறு சமயங்களில் கிடைக்கும் பேதமற்ற உண்மை. சரீரம் வெவ்வேறாயினும் ஆன்மா ஒன்று. வடிவ வேற்றுமைகள் எப்போதும் இருந்தே தீரும். கொட்டைக்குள் பருப்பு இருக்கிறது! வெளி ஓடு எவ்வளவு பேதப்பட்டாலும் உள்ளேயிருக்கும் பருப்பு ஒன்றே.*

[யங் இந்தியா 25—9—29]

---

*அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை
அவரவர் இறையவர் எனவடி அடைவர்கள்.
அவரவர் இறையவர் குறைவிலர்: இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே!

என்ற இந்தத் திருவாய் மொழிப் பாட்டை ஒப்பு நோக்கலாம்.





'அனசின்'

விஞ்ஞான முறையில் **நான்கு** மருந்துகளின் ஒரு கலப்பு.

'அனசின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் நசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனசினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —

1. குயினு : ஜுரத்தடுப்புகுணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனசினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனசின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் நசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனசினையே கேட்டு வாங்குங்கள்



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A. 1

மாடும் மங்கையும்

து.ரா



மாட்டுத் தரகன் சின்னசாமியும் மாட்டின் சொந்தக்காரனை லோகநாதனும் சிதம்பரம் பிள்ளையின் கண் முன் ஒரு நாடகமே நடித்துக் காண்பித்து விட்டார்கள்.

சிதம்பரம் பிள்ளை ஓர் இளைஞன். பித்தளைப் பாத்திர வியாபாரம் செய்து நல்ல பொருள் சம்பாதித்துக் கொண்டிருந்தான். அவன் தகப்பன் மாணிக்கம்பிள்ளை பல தொழில்களில் ஈடுபட்டு, கை ஒய்ந்து கடைசியில் நெல் குத்தும் 'மிஷின்' வைத்து அதிலும் நஷ்டம் அடைந்தவன். அப்பொழுதுதான் தலையெடுத்துக் கொண்டிருந்த சிதம்பரம் பித்தளைப் பாத்திர வியாபாரத்தின் நெளிவு சுளுவுகளை யாரிடமோ கற்றுத் தெரிந்து கொண்டு தகப்பன் எவ்வளவு தடுத்துக் கூறியும் கேளாமல் துணிந்து வியாபாரத்தில் இறங்கினான். மூன்றாண்டுகள் ஆயின. அவன் அதிர்ஷ்டமோ அல்லது தொழில் திறமையோ, தெரியாது. வியாபாரம் பெருகிற்று. மாணிக்கம் பிள்ளையும் பார்த்து வியக்கும்படியான முறையில் பித்தளையை விற்றுப் பொன்னாக்கிக் கொண்டிருந்தான்.

சிதம்பரத்துக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அவர்கள் கை ஒய்ந்திருந்த போது பராமுகமாயிருந்த உறவினர்கள் பெண் கொடுக்க நான் நீஎன்றுபோட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். இதை ஒரு வேடிக்கையாகவும், அலட்சியமாகவும் அவன் கவனித்துக் கொண்டு வந்தானே ஒழிய ஒருவருக்கும் ஒன்றும் பிடி கொடுத்துப் பேசவில்லை.



வீட்டில் அவனைத் தவிர அவன் பெற்றோர்களும் நான்கு தம்பிகளும் இருந்தார்கள். எல்லோரும் காப்பிப் பைத்தியங்கள். தாகம் எடுக்கும்போதெல்லாம் அவர்கள் தண்ணீருக்குப் பதில் காப்பி குடிப்பதுண்டு. தினம் இரண்டு படி பால் காப்பிக்காகச் செலவாயிற்று. அப்பொழுது யாரோ சொன்னார்கள்: ''ஒரு மாட்டை வாங்கிக் கட்டிக் கொண்டால் செலவும் குறைவாக ஆகும், நல்ல பாலாகவும் கிடைக்குமே'' என்று.

வழக்கப்படி மாணிக்கம் பிள்ளை ''பால் ராசி, மாட்டு ராசி'' என்று கூறிக் கொண்டு பல ஆட்சேபணைகளைக் கிளப்பினான். ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை சிதம்பரம். தன் நண்பன் சின்னசாமியிடம் சென்றான். சின்னசாமி ஊரில் அநேகருக்கு மாடுகள் வாங்கிக் கொடுத்திருக்கிறான். ஆனால் அவன் மாட்டுத் தரகன் என்பதும் ஒவ்வொரு வியாபாரத்திலும் லாபம் அடிக்கிறவன் என்பதும் சிதம்பரத்துக்குத் தெரியாது.

''சின்னசாமி! எல்லோருக்கும் மாடு வாங்கிக் கொடுக்கி

ரூயே. எனக்கும் ஒரு நல்ல பசு மாடு தேவையாக இருக்கிறது, வாங்கித்தரக் கூடாதா?'' என்று ஒருதினம் அவனைக் கேட்டான்.

''தருகிறேனே, எப்பொழுது உனக்கு ஒழியுமோ அப்போது வா, சந்தைக்குப் போவோம். நல்ல மாடாகப் பார்த்துப் பிடித்துக் கொண்டு வரலாம்!'' என்றான் சின்னசாமி.

ஒரு நாள் இரண்டு பேரும் சந்தைக்குப் போனார்கள். சின்னசாமி, தான் ஏற்கனவே பேசி முடித்து வைத்திருந்த மாட்டின் சொந்தக்காரனை லோகநாதனிடம் அழைத்துக் கொண்டு போனான் சிதம்பரத்தை. அப்பொழுது தான் மாட்டைப் பார்ப்பது போல் சின்னசாமி மாட்டை நோட்டம் விட்டான். அதை அவிழ்த்து முன்னும் பின்னுமாக நடந்து காட்டச் செய்தான். கொம்பைப் பார்த்தான், பல்லைப் பார்த்தான், மடியைப் பார்த்தான். சிதம்பரத்தின் காதோடு. ''நல்ல மாடு இது! விடக்கூடாது'' என்று கூறிவிட்டு, ''எவ்வளவு கறக்கும்?'' என்று மாட்டின் சொந்தக்காரனைக் கேட்டான்.

''வேளைக்கு இரண்டு படி. வேண்டுமானால் கறந்து பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றான் லோகநாதன்.

''விலை?''

''மூன்றரை ரூபாய்!''

''மூன்றரையா? சரிதான்! நாட்டுக் கட்டைக்கு மூன்றரையா? இரண்டுக்கு மேல் தம்பிடி கிடையாது!''

இப்படி இருநூறில் ஆரம்பித்து இருநூற்று ஐம்பது வரைக்கும் விலையை ஏற்றிக் கொண்டே சென்றார்கள். சிதம்பரத்துக்கு மாட்டு விஷயம் ஒன்றும் தெரியாதாகையால், தன் நண்பன் எவ்வளவு சாமர்த்தியமாகப் பேரம்பண்ணுகிறான் என்று வியந்தபடி மௌனமாக நின்று கொண்டிருந்தான். சின்னசாமி மாட்டை ஏற்கனவே இருநூறு ரூபாய்க்குப் பேசித் தீர்த்துவிட்டுத் தன் லாபத்துக்காக விலையை இருநூற்று ஐம்பது வரை உயர்த்திக் கொண்டு போனான் என்பது அவனுக்குத் தெரியாது.

லோகநாதன் அரை மனத்துடனேயே மாட்டை இருநூற்றைம்பதுக்குக் கொடுப்பதுபோல் ஒப்புக்கொண்டதும் ஒப்புக் கொள்ளாததுமாக இருக்கும் நிலையில் சின்னசாமி அவன் கையில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டை வைத்து அமுக்கி விட்டு, சிதம்பரத்தின் கையில் வைக்கோலைக் கொடுத்து அதை மாட்டின் மேல் போடும்படி கூறினான். அப்படியே செய்தான் சிதம்பரம். மாடு வாங்கியாயிற்று!

''பாலைக் கறந்து பார்க்க வேண்டும்'' என்றான் சின்னசாமி.

''இதோ பாத்திரத்தைக் கொண்டு வருகிறேன்'' என்று லோகநாதன் சென்றான். அவன் பின்னாலேயே சின்னசாமியும் போனான். சிதம்பரத்தை மாத்திரம் அங்கே விட்டு விட்டுத் தன் தரகுப் பணத்தை வாங்கிக் கொள்ளத் தான் அவன் அப்படிப் போனான்.

அப்பொழுது தான் ஓர் அதிசயம் நடந்தது!

* *
*

சின்னசாமியும் லோகநாதனும் தங்கள் நாடகத்தை நடத்திக்காட்டின



இடத்துக்குப் பின்னால் சற்றுத் தூரத்தில் ஒரு புளிய மரம் இருந்தது. அந்த மரத்தினடியில் கட்டப்பட்டிருந்த மாடுகளுக்குத் தீனி வைத்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண்.

அவள் பெயர் செந்தாமரை. லோகநாதனுடைய தமையனின் பெண் அவள். தாயும் தகப்பனும் ஒருவர் பின் ஒருவராக இறந்துவிட்டபடியால் லோகநாதன் வீட்டில் வேலை செய்து கொண்டு இருந்து வந்தாள். அள்ளி முடிந்த கொண்டையும், சுங்கடிப் புடவையும் முழங்கை வரை நீண்ட கையுடன் இடுப்புக்கு மேல் நான்கு விரற்கடை இடை தெரியும்படி அணிந்த ரவிக்கையும், காலில் வெள்ளிக் கொலுசும் பார்ப்பவர் உள்ளங்களில் பழைமையான சிற்பங்களையும் சித்திரங்களையும் பற்றிய சிந்தனைகளை வருவித்தன.

தன் சிற்றப்பனும் சின்னசாமியும் நடித்துக் கொண்டிருந்த நாடகத்தைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள். எத்தனையோ முறை நடிக்கப்பட்ட நாடகம்தானே அது? அதனால் இதழ்க் கடையில் அரும்பிய கேலிச் சிரிப்புடன் விழிக்கடையில் தன் பார்வையைச் செலுத்தி, மாடு வாங்க வந்திருக்கும் ஆள் யார் என்பதைக் கவனித்தாள்.

சிதம்பரத்தின் யௌவனமும் அவன் வசீகரமான தோற்றமும் அவள் பார்வையை இழுத்தன. கை வேலையைச் சற்றே நிறுத்திக் கொண்டு அவர்கள் பேச்சைக் கவனித்தாள். மாட்டின் விலையை அவர்கள் இருநூற்றைம்பது ரூபாய்க்கு உயர்த்தினதைப் பார்த்த போது அவள் நெஞ்சம் பதறியது.

அந்தச் சமயத்தில், சின்னசாமியும் லோகநாதனும் பால் கறப்பதற்காகப் பாத்திரம் கொண்டு வரப் போனதைப் பார்த்ததும் அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

கன்றுக்குட்டியைப் போலத் துள்ளிக் கொண்டு சிதம்பரத்தின் எதிரில் வந்து நின்றாள் செந்தாமரை. சிதம்பரம் திடுக்கிட்டு அவளை விழுங்குவது போலப் பார்த்தான். அவள் ஆகாசத்திலிருந்து குதித்த தேவதையோ?

''இந்த மாட்டை நீங்க வாங்கப் போறீங்களா?'' என்று கேட்டாள் செந்தாமரை.

''ஆமாம். ஏன்?''


''அப்படின்னா, இதன் விலை இருநூறு ரூபாய்க்கு மேலே கிடையாது. அதிகம் கொடுத்து ஏமாந்திடாதீங்க!'' என்று அவசரமாகக் கூறி விட்டு, வந்த சுருக்குப் போல் தன் இடத்துக்கு ஓடி விட்டாள் அவள்.

வியாபாரம் தீர்ந்த பிறகு விலையைக் குறைக்கச் சொன்னால் வியாபாரி ஒத்துக் கொள்வானா? சிதம்பரமும் வியாபாரி ஆயிற்றே? அதனால் அவன் பேசின விலையைக் கொடுத்து விட்டு மாட்டை ஓட்டிக் கொண்டு போனான்.

செந்தாமரையை நினைக்கும் போது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

அவள் எழில் உருவம் அவன் கண் எதிரே அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. அவளை மறுபடியும் பார்க்கலாம் என்கிற கருத்துடனே, ஒழிந்த நேரங்களில் மாட்டுச் சந்தைப் பக்கம் அவன் வட்டமிட்டான்.

மாட்டுச் சந்தையிலிருந்து • ஊரை நோக்கிப் போகும் ரஸ்தாவில் ஒரு தினம் அவன் நின்றுகொண்டிருந்த போது, தலையில் பால் நிறைந்த பானையும் கையில் மாட்டுக்குத் தீனி வைக்கும் வாளியும் தூக்கிக் கொண்டு வந்தாள் செந்தாமரை.




சிதம்பரத்தை அடையாளம் கண்டு கொண்டதும் சட்டென்று அவள் ஒரு விநாடி நின்று விட்டு மறுபடியும் நடக்கத் தொடங்கினாள்.

பேசாமல் நின்றால் அவள் போய் விடுவாள் என்று கருதிச் சிதம்பரம், ''அன்று வாங்கின மாட்டுக்கு நான் கொடுத்த விலை கொஞ்சம் கூடத்தான், இல்லையா?'' என்றான்.

''நான்தான் அப்பொழுதே சொன்னேனே உங்ககிட்டே!'' என்றாள் அவள் சிரிப்புடன்.

''சொன்னாய், ஆனால் நான் விலையைக் குறைக்காமல் முதலில் பேசின விலையையே கொடுத்து விட்டேன். அதிருக்கட்டும்; நீ எதற்காக என்னை எச்சரித்தாய்? உன் அப்பாவும் சந்தையில் மாடு வியாபாரம் செய்கிறவரா?'' என்று கேட்டான் சிதம்பரம். அவன் மனசில் ஒரு சந்தேகம். குதிர்ந்த வியாபாரத்தைக் கெடுத்து விட்டால், தங்கள் மாட்டை வாங்குவார்கள் என்பது அவள் நோக்கமாக இருக்கலாம்.



திருச்சி ஜில்லா மணக்கால் மிராசுதார் ஸ்ரீ எம். என். நாராயணசாமி அய்யர் அவர்களின் பௌத்திரியும், நியூடெல்லி யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், அண்டர் செக்ரடரி ஸ்ரீ ஏ. எம். நடராஜமூர்த்தி அவர்களின் புத்திரியுமான சௌபாக்கியவதி சாவித்ரி என்கிற கமலாவுக்கும் ரிடயர்டு ரயில்வே ஆபீஸர் ஸ்ரீ என். பி. ஸ்ரீனிவாசய்யர் புத்திரர் சிரஞ்சீவி வெங்கட்ராமனுக்கும் சென்ற ஜூன் மாதம் 18ம் தேதி மணக்காலில் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க கமலா—வெங்கட்ராமன்!

செந்தாமரை அவன் கருத்தைப் புரிந்து கொண்டு சிரித்தாள். ''எனக்கு அப்பாவும் இல்லே, அம்மாவும் இல்லே; உங்களுக்கு மாட்டை வித்தாரே, அவரு எங்க சித்தப்பா. அவங்க வீட்டிலே தான் நான் இருக்கேன்'' என்று கூறி விட்டு வேகமாக நடந்தாள்.

மாடு வாங்க வந்த அன்றே சிதம்பரத்தின் வசீகரமான தோற்றம் செந்தாமரையின் மனசில் பதிந்து விட்டது. பிறகு அடிக்கடி அவனைப் பார்க்க நேர்ந்ததில் தன் இளம் உள்ளத்தை அவனிடம் பறிகொடுத்து விட்டாள்.

ஆனால், இது நீடிக்கவில்லை. திடீரென்று சிதம்பரம் அவளைப் பார்க்க வருவதை நிறுத்திக் கொள்ளவே அவள் உள்ளத்தில் இருள் சூழ்ந்தது.

* * *

நான்கைந்து மாதங்கள் வராமல் இருந்த சிதம்பரம் ஒரு தினம் திடீரென்று அவள் முன் தோன்றினான்.

''என்ன செந்தாமரை! உங்கிட்டே சொல்லாமல் ஊருக்குப் போனதுக்காகக் கோபித்துக் கொள்ளாதே! எனக்குக் கல்யாணம் ஆச்சு. அதுக்காக ஊருக்குப் போயிருந்தோம்'' என்றான் சிதம்பரம் சிரித்துக் கொண்டே.

''கல்யாணம்'' என்று அவன் கூறிய வார்த்தை அவள் உள்ளத்தில் எழுப்பிய ஓசை போல் எதிரொலி செய்தது. அவள் உடல் சில விநாடிகள் வெடவெட என்று உதறி நின்றது. பிறகு மனத்தில் ஏற்பட்ட பதற்றத்தை வெளிக்குக் காட்டாமல், ''கல்யாணமா! உங்களுக்கா? ஆகி விட்டதா?'' என்று கேட்டாள். அவள் கரு விழிகள் கலங்கி விட்டன.

''ஆச்சு; உன்னை உடனே வந்து பார்க்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் பிரார்த்தனைகள் எல்லாம் செலுத்தத் திருப்பதிக்குப் போக வேண்டி இருந்தது. அதனால்தான் இவ்வளவு நாட்கள் ஆகி விட்டன.''

''என்னை ஏன் நீங்கள் வந்து பார்க்க வேண்டும்?''

''என்ன அப்படிச் சொல்லுகிறாய்? முன்பெல்லாம் அந்த மாதிரி கேட்கவில்லையே நீ?''

''முன்னெல்லாம், உங்களுக்கு என் மேல் ஆசை, அதனால் நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கிடுவீங்க அப்படின்னு நெனச்சிருந்தேன்—''

சிதம்பரம் கலகல என்று சிரித்தான்.

''நன்னா நெனச்சே போ! நீ மாட்டுக்காரப் பெண். நாங்கள் கண்யமான குடும்பம். நானும் நீயும் கல்யாணம் பண்ணிக்கிறது சாத்தியமா? நீயே சொல்லு'' என்றான்.

செந்தாமரை அவனை, முன்பு மாடு பேரம் செய்து கொண்டிருந்த போது ஏளனமான புன்னகையுடன் ஓரக் கண்ணால் பார்த்த மாதிரி இன்றும் பார்த்தாள். இப்பொழுது ஏமாந்தது அவனா அல்லது தானா என்பது அவளுக்கே புரியவில்லை.


''இனிமேல் இந்தப் பக்கம் வராதீங்க. எங்க சித்தப்பாவுக்குத் தெரிஞ்சிட்டா கொலை நடந்திடும்! மாடு வாங்கறாப்பலே மனிதர்களையும் வாங்க முடியாதுன்னு தெரிஞ்சுக்கிடுங்க'' என்று அலட்சியமாகக் கூறி விட்டுத் தன் வழியே நடக்கலானாள்.

''செந்தாமரை, செந்தாமரை!'' என்று கூப்பிட்டுக் கொண்டு அவள் பின்னாலேயே ஓடினான் சிதம்பரம்.

''நான் சும்மாச் சொன்னேன் செந்தாமரை! நெல்லூருக்கும் ஓங்கோலுக்கும் போய் வந்தேன், நல்ல மாடுகளாகப்பார்த்துக் கொண்டு வர. ஏன்னா நீ மாட்டுக்காரப் பெண்ணாச்சே! உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால், மாடுகள் இல்லா விட்டால் உனக்குப் பொழுது போகாதே என்று தான். நான் ஏமாறக் கூடாது என்று பரிவுடன் என்னை எச்சரித்த உன்னை நான் ஏமாற்றுவேனா செந்தாமரை?'' என்றான் சிதம்பரம்.

கண்ணில் அரும்பிய நீரைத் துடைத்துக் கொண்டு செந்தாமரை திரும்பினாள். தாமரை மலரைப் போலவே அவள் முகம் மலர்ந்தது.





சுப்பராய சாஸ்திரியார் தம் மூக்குக் கண்ணாடியை எங்கேயோ வைத்து விட்டு மறந்து போனார்.

"மூக்கே! என் பிரியமான மூக்கே! எப்போதும் உன் பேரில் சவாரி செய்து வந்த கண்ணாடி எங்கே?" என்றார்.

மூக்கும் பேச ஆரம்பித்தது. "ஏ கண்களே! என்னருமைச் சகோதரிகளே! மூக்குக் கண்ணாடியைத் தேடித் தாருங்களேன். நம் எஜமானர் படிக்க முடியாமல் வருந்துகிறார்" என்று மூக்கு கண்களுக்குச் சொல்லிற்று.

கண்கள் மூக்கின் விண்ணப்பத்தைப் பொருட்படுத்தவில்லை.

"ரொம்ப சரி! சவாரி உன் மேல்! பேரும் உன் பெயர்! எங்களுக்கு என்ன கவலை?" என்றது வலது கண்.

"ஏய் மூக்கே! நீதான் 'மூக்குக் கண்ணாடி!' 'மூக்குக் கண்ணாடி!' என்று சொந்தம் பாராட்டி வந்தாயே! நீயே தேடு!" என்றது இடது கண்.

"சரி, அப்படியே!" என்று ஒப்புக்கொண்டு மூக்கானது வீட்டில் எல்லா இடமும் மோந்து மோந்து தேடிப் பார்த்தது. கிடைக்க வில்லை. மூக்குக் கண்ணாடிக்கு ஏதேனும் தனி நாற்றம் இருந்தால் அல்லவா மூக்குக்குத் தெரியும்?

துயரத்துடன், "எனக்குச் சிக்கவில்லை. உம் கண்களைக் கேட்டுப் பாருங்கள்" என்றது மூக்கு, சுப்பராய சாஸ்திரிக்கு.

அவர் தம் கண்களைப் பார்த்து, "கண்களே! உங்களுக்காகத்தான் நான் இந்தக் கண்ணாடியை வாங்கிப் போட்டுக் கொண்டேன். கொஞ்சம் தேடிப் பாருங்கள். எங்கேயோ வைத்து விட்டு மறந்து போனேன்!" என்று வேண்டிக் கொண்டார். கண்கள் இந்தக் காரியத்தில் கவனம்செலுத்தாமல் மந்தமாகஇருந்தன.

அப்போது காது சொல்லிற்று "கண்களே! இப்படி ஒருவர் மேல் ஒருவர் நாம் போட்டியும் பொறாமையும் அசூயையும் வைத்துக் கொண்டோமானால் எல்லாருக்கும் கஷ்டமாகும். பெரியோர் சொல்லக் கேட்ட சாஸ்திரம் உங்களுக்குச் சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று வாயைத் தூண்டிற்று வலது காது. இடது காதும் கூடச் சேர்ந்து கொண்டது. வாயானது பேச ஆரம்பித்தது. அதாவது சாஸ்திரியார் பாட ஆரம்பித்தார்:—

பார்ப்பான் அகத்திலே
பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி
வெறித்துத் திரிவன —
மேய்ப்பாரும் உண்டாய்
வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும்
பாலாய்ச் சொரியுமே!

ஐந்து 'பசு'க்கள் என்றால் தெரியுமா? சுவை, ஒளி ஊறு, ஓசை, நாற்றம் இவற்றிற்குரிய ஐந்து பொறிகள். இந்த ஐந்து 'பசு'க்களும் வெறி கொண்டு தம் பாட்டுக்குச் செல்லாமல், எஜமானனால் சரியாக ஆளப்பட்டு நின்றால், அதாவது அவன் அவற்றைச் சரியாக அடக்கி ஆண்டால், அதாவது அவன் அந்தப் பசுக்களைச் சரியாக மேய்த்தானானால் அந்த ஐந்து பசுக்களும் நல்ல பால் சொரிந்து கறக்கும். இது திருமூலருடைய பாட்டு.

எவ்வளவு சாஸ்திரம் படித்து வித்துவானாக இருந்தாலும் ஐம்புலன்களை ஆளாமல் ஒருவனுக்கு ஆனந்தம் கிடையாது.

"நாம் ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டும். ஒன்றின்பேரில் பொறாமையோ அசூயையோ படலாகாது" என்று வாயானது சொல்லிற்று. கண்களுக்குப் புத்தி வந்தது. தேடிப் பார்த்தன. மூக்குக் கண்ணாடி கிடைத்து விட்டது.

பக்கத்திலிருக்கும் பொருளைத் தான் மூக்கு மோந்துகண்டு கொள்ளும். கண்



மூக்குக் கண்ணாடி

கனோ அளவுக்கு அடங்காத வெகு தூரத்திலுள்ள நட்சத்திரங்களையும் பார்க்கும். இது கண்களின் அற்புத சக்தி. மூக்கின் பெருமையோ, கொஞ்ச நேரம் இருந்து மறைந்த பொருளின் வாசனையைக் கூட கண்டு கொள்ளும். மறைந்துபோன பொருளைக் கண்கள் காணாது. ஆனால் மூக்கு கண்டு கொள்ளும்.

அக்காள் தலையில் ஒரு நாள் சூட்டியிருந்தது மல்லிகைப் பூ. மூன்றாவது நாளிலும் கூட தம்பி மோந்து பார்த்து வாசனையைக் கண்டு கொள்ள முடியும்.

முந்திய நாளிருந்த பூவை இன்று கண்களால் பார்க்க முடியாது. நேற்றிரவு திருடன் நடந்த வழியை, நாய் மோந்து மோந்து கண்டு கொள்ளும். அப்படியே முந்திய இரவு எலி ஓடின வழியைப் பூனை அறிந்து கொண்டு வேட்டையாடும். கண்களால் காண முடியாததை மூக்கு கண்டு கொள்ளும்.

மூக்கும் கண்ணும் காணாத பாட்டைக் காது கேட்டு உள்ளத்துக்கு இன்பம் தரும்.

உடலின் கதை வெகு விசித்திரம். கண்டும், கேட்டும், நுகர்ந்தும், தொட்டும் அனுபவித்த பொருளின் நினைவு. முப்பது ஆண்டுகள் கழிந்து போனாலும் வேண்டும் போது பழைய கணக்குப் புஸ்தகத்தில் வாங்கியதும் கொடுத்ததும் பதிவு ஆகியிருப்பதை எடுத்துப் பார்ப்பதைப் போல் வேண்டியபோது நினைவுக்கு வரவழைத்துக் கொள்ளலாம். ஐந்து பொறிகளின் சக்தியை விட நினைவு என்கிற சக்தியானது மிக அற்புதம். எவ்வளவு காலமாயினும் இன்று காண்பது போல் மனத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தும். அறுபது ஆண்டுகளுக்கு முன் கேட்ட என் தகப்பனாரின் குரல், தாயின் குரல் நினைவுக்கு வந்து இப்போது காதில் கேட்பதைப் போலவே இருக்கிறது.

"பாலாகச் சொரியும்" என்று திருமூலர் பாடுகிறார். இறந்து போனவர்களின் குரல் நினைவில் வந்தால் பாலைப் போல் தித்திக்கிறது. அப்படியே அவர்கள் உருவமும், அன்போடு கைகளால் அவர்கள் தடவிய நினைவும் வந்தபோது இறந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் பேதமில்லாமல் போகிறது.

நல்ல நினைவுகளின் ஆனந்தத்தைப் போல் வேறு ஏதுமில்லை.

ராஜாஜி




அவள் கேட்டது பின்னி சேலைகள்
நீங்களும் அதையே தான் கேட்பீர்கள்!
விருந்துக் கூட்டங்களில் அலங்காரமாய் எடுப்பாகத் தோன்றுவதற்கு
பின்னி
ஸில்குகளும்
ஜார்ஜெட்டுகளும்
இன்றியமையாதவை.
எச். ஏ. ஆர். மகம்மத் & சன்ஸ்



கர்ணபரம்பரைக் கதை :

கதை கதையாம் காரணமாம்

ஒரு பாட்டி ஒவ்வொரு ஏகாதசிக்கும் துளசி தீர்த்தம் மட்டும் சாப்பிட்டு விட்டுப் பட்டினி கிடப்பாள். அவளுக்கு ஒரு மருமகள் இருந்தாள். ஓர் ஏகாதசியன்று அந்தப் பெண், "அத்தை, அத்தை! நானும் இன்றைக்குப் பட்டினி இருக்கிறேனே!" என்று சொன்னாள்.

பாட்டி, "வேண்டாம், நீ சிறியவள்; உனக்குப் பசி தாங்காது. பேசாமல் சாப்பிடு" என்றாள்.

"இல்லை; நானும் விரதம் இருக்கப் போகிறேன்" என்று மருமகள் பிடிவாதமாகச் சொல்லவே, "சரி, அப்படியே செய்!" என்று கூறி விட்டாள் பாட்டி.



அன்று பகல் நேரத்தில் பாட்டி கண்ணை மூடித் தூங்கும் பாவனையில் படுத்திருந்தாள். கண்களை மூடித் தூங்கும் பாவனையில் அக்கம்பக்கத்தில் நடக்கும் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தினம் மூன்று வேளை வயிறு முட்டச் சாப்பிட்டுப் பழக்கப் பட்ட மருமகளுக்குப் பசி தாங்கவில்லை. சந்தடி செய்யாமல் எழுந்து போய்த் தோட்டத்திலிருந்து ஒரு சர இலையைப் பறித்து வந்தாள்.

சமையலறையில் தண்ணீரில் போட்ட சாதம் இருந்தது. அதை நிறையப் பிழிந்து வைத்துக் கொண்டு, தினந் தோய்த்த தயிரை விட்டுப் பிசைந்தாள். கற்சட்டியிலிருந்த கண்டைக்காய் வறுகாயை எடுத்து வைத்துக் கொண்டு, வயிறு நிறையச் சாப்பிட்டாள்.

பிறகு பாட்டியின் அருகில் வந்து படுத்துக் கொண்டு, "அத்தை! பசிக்கிறது. தூக்கமும் வரவில்லை. ஒரு கதை சொல்லுங்களேன்" என்றாள். பாட்டி நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள் அல்லவா?

"கதைதானே, சொல்கிறேன், கேள்" என்று ஆரம்பித்தாள் பாட்டி.

பாட்டி ஏதோ சுவாரசியமான கதை சொல்லப் போகிறாள் என்று மருமகள் எதிர்பார்த்தாள். பாட்டி, மருமகள் தனக்குத் தெரியாமல் தோட்டத்தில் போய் இலை பறித்து வந்து சாப்பிட்ட விவரத்தை அப்படியே அப்பட்டமாகச் சொல்லவில்லை. ஒரு பாட்டின் மூலம் சொல்லி விட்டாள்.

"கதை கதையாம் காரணமாம்
கலமெடுத்தால் ஓசைப்படுமாம்
சர இலையாம் கண்டைக்காய் வற்றலாம்
பழைய அமுதாம் பாலைத் தயிராம்
உண்ட பெண்ணுக்குக் கண்டது பொரட்டுது
தூங்கடி பெண்ணே தூங்கு"

என்று கதையை முடித்தாள்.

மருமகளுக்கு விஷயம் வெளியாகி விட்டதே என்று வெட்கம் பிடுங்கித் தின்றது. அடுத்த ஏகாதசிக்கு அவள் விரதம் இருப்பதாகச் சொல்லவே இல்லை!

—வி. பி. கிருஷ்ணசாமி

சிங்க ராஜா



சிங்கக் குட்டிகள் தூங்காமல் விஷமம் செய்தன. தாய்ச் சிங்கம் அவற்றை அருகில் அழைத்து ஒரு கதை சொல்லிற்று.

"குட்டிச் சிங்கங்களே! உங்கள் அப்பா சிங்கம்தான் இந்தக் காட்டுக்கு ராஜா. எத்தனையோ ஆபத்துக்களிலிருந்து தப்பி ரொம்பக் காலமாக அவரேதான் ராஜாவாக இருந்து வருகிறார்.

ஒரு சமயம் அவர் ஒரு யானையிடம் அகப்பட்டுக் கொண்டு திணறிப் போனார். ஒரு முரட்டு யானையின் பிடியில் பலமாகச் சிக்குண்ட சிங்க ராஜா தத்தளித்தார். யானை தன் இரு தந்தங்களில் சிங்கத்தைச் சிக்க வைத்துப் பூமியில் புதையும்படி அமுக்கிற்று. நல்ல வேளையாக யானை பூமியில் புதைந்து போன தன் தந்தங்களை வெளியே எடுக்க முயற்சிக்கும் போது சிங்கராஜா தந்தங்களின் இடைவெளியிலிருந்து நழுவித் தப்பி ஓடி விட்டது.




வழியில் குரங்குக் கூட்டம் ஒன்று சிங்க ராஜாவின் மீது பாய்ந்து பிடுங்கியது. சிங்கராஜா வால் அத்தனை குரங்குகளையும் ஒரே சமயத்தில் சமாளிக்க முடிய வில்லை. நல்ல வேளையாக அப் போது இடி இடிக்கவே குரங்கு கள் பயந்து ஓட்டமெடுத்தன. சிங்கராஜா 'செத்தேன், பிழைத் தேன்' என்று தப்பி ஓடி விட் டார்" என்று கதையை முடித் தது தாய்ச் சிங்கம்.

"சிங்கராஜாவா கேவலம் சின் னக் குரங்குகளிடமெல்லாம் அகப் பட்டுக் கொண்டு இந்தப் பாடுபட் டார்?" என்று கேட்டன சிங்கக் குட்டிகள் வியப்போடு.

"ஆமாம்; ராஜா என்றால் சும்மாவா? இத்தனை பிடுங்கல் களையும் சமாளிப்பவர் தான் ராஜா!" என்றது தாய்ச் சிங்கம்.








வேடிக்கை விளையாட்டு
முதல் படத்தில் ஆகாய விமானம் இருக்கிறது. இரண்டாம் படத்தில் ஒரு பெண் ஏதோ செய்து கொண்டிருக்கிறாள். மூன்றும் படம் என்ன? மூன்றையும் என்னவென்று விளக்கமாகச் சொல்லுங்கள் பார்க்கலாம்.
(விடை அடுத்த இதழில்)
சென்ற வாரப் புதிருக்கு விடை
காகிதத்தின் ஒரு முனையை மட்டும் இரண்டு தடவை சுழற்றி வளையம் ஒட்ட வேண்டும். பிறகு காகிதத்தின் நடுவில் உள்ள புள்ளிக் கோட்டின்படி கத்தரிக்கவும். அப்போது இன்னொரு வளையமும் வந்து விடும்!
ஐயோ! என் காகிதத்தில் இங்கியைக் கொட்டி விட்டாயே!
சபாஷ்! ஒரு யோசனை!
டேய்! உன் யோசனை பிரமாதம்
சீப்பு இல்லையே! எப்படி தலை வாரிக் கொள்வது?
என் விரல்கள் சீப்பு மாதிரி தானே இருக்கு நானே வாரி விடுகிறேன்!
வந்தவர்:—அப்பா எங்கே?
பையன்:—அப்பா குதிருக்குள் இல்லை. புதிருக்குள் இருக்கிறார். (புள்ளியிட்ட இடங்களை வர்ணம் தீட்டிப் பார்)



TAKE THIS DOWN
பெரும் தெறியல்
ஒரு நிமிஷம் கூட, இந்த சேட்ஜிக்கு ஓய்வில்லை. ஆனால் அவர் ஸ்னான அறையில் செய்யும் கடபுடாக்களுக்கு, பங்கு மார்க்கெட்டில் செய்யும் தாம் தூம்கள் ஈடு போடக் காணாது. காரணம், அவர் சொல்வது; ஹமாம் சோப் தான் வாழ்க்கையை சகிக்கும்படி செய்கிறது!
இதை நாங்கள் நம்பாவிட்டாலும், ஹமாம் சோப் ஒரு நல்ல டாய்லட் சோப் என்பதை யாராலும் மறுக்க முடியாது.
புதுமலர்ச்சி தருவது
HAMAM
A TATA PRODUCT
டாடாவின்
ஹமாம்
டாய்லட் சோப்
டாடா ஆயில் மில்ஸ்
இந்திய மூலதனத்துடன், இந்திய நிர்வாகத்தில், இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது.
SISTA'S TOM-1-TAM

ரிக்ஷாக்காரச் சின்னசாமி



பால் நிலவிலே குளித்தெழும் பச்சைப் பசும்புல் வெளியைக் கடந்து, இரும்புப் பாலத்தில் கட கட வென்று உருண்டு ஓடியது வடக்கே போகிற ரயில். பாம்பரணை போல் நெளிந்து நெளிந்து சென்று கரும் புள்ளியாகக் கரைந்து விட்ட அது எழுப்பிய இரைச்சொலி எல்லையற்ற வானகப் பெருவெளியிலே எதிரொலி செய்தது. ஊசிப் பிடுங்கி ஊசி கொண்டு குத்துவதுபோலச் சுழன்று அடித்தது சுழல் காற்று. மூன்றும் வகுப்புப் பெட்டி யொன்றின் மூலையில் உட்கார்ந்திருந்த சின்னசாமியின் உடல் குளிர் தாங்காது சிலிர்த்தது. மேல் துண்டை இழுத்துப் போர்த்திக் கொண்டான்.

கனவாகிப்போன கடந்த கால நினைவுச் சுழல்களின் குமைச்சலிலே அவனது உள்ளம் சிலிர்த்தது. பீடி ஒன்றை எடுத்துப் பற்ற வைத்த வண்ணம், டக்கென்று ரயிலின் ஜன்னல் கதவை இறக்கினான். இப்போது அவனது உடலை வாட்டிய சிலிர்ப்பு ஒடுங்கி விட்டது. ஆனால் உள்ளத்தை அரித்த அந்தச் சிலிர்ப்பு .... அன்புக் காதலி அங்கம்மாளைக் கண்டு, தான் சிறையிலே பட்ட துன்பங்களை, அனுபவித்த வேதனைகளை யெல்லாம் சொல்லி ஒரு குரல் அழுதால் தான் துக்கம் குறையும்போலிருந்தது அவனுக்கு. அனுபவித்த துயரங்களின் நரக வேதனையில் இதயமே கனத்துக் கிடந்தது.

கெ. ராதாகிருஷ்ணன்

சென்னை நகரத்தின் செல்லப் பிள்ளைகளான ஆயிரமாயிரம் நடைபாதைவாசிகளிலே ஒருவன்தான் சின்னசாமி. நினைவு தெரிந்தநாள் முதற்கொண்டு ரிக்ஷா இழுத்துப் பிழைப்பதுதான் அவன் தொழில். அன்பு காட்டவோ ஆதரவு செலுத்தவோ உற்றார் உறவினர் அற்ற ஒண்டிக் கட்டை அவன். உண்மையில் தன்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் யார் என்று கூட அவனுக்குத் தெரியவே தெரியாது!

காலையில் கொத்தவால் சாவடியிலும், மத்தியான நேரத்தில் ஹைகோர்ட்டு வாசலிலும் மாலையில் சைனு பஜாரிலும் தன் இணைபிரியாத் தோழனான ரிக்ஷாவைக் கையில் பற்றிய வண்ணம் கால் தேயச் சித்தம் சோர்ந்து நிற்பான். எந்தப் பெரிய மனிதனாவது இரக்கப்பட்டு அவனது ரிக்ஷாவில் சவாரி செய்தால், அரை வயிற்றுக்காவது வழி பிறக்கும். இரவு நேரங்களில் ஹைகோர்ட்டுக் கடற்கரையில் தனது ரிக்ஷாவை நிறுத்தி, அதிலேயே படுத்துறங்கி விடுவான். முழக்கமிடும் கடலொலியைப்பற்றியும், வீசும் குளிர் காற்றைப் பற்றியும் அவனுக்கு அக்கறை கிடையாது! மழைநாளில்தான் சின்னசாமிக்குச் சற்று சிரமம். கால், அரை வருமானத்திற்கே வாய்ப்பற்ற அந்த நாட்களில் நாயர் கடையில் ஒரு ''ஸ்டிராங்'' டீ குடித்து விட்டு, ஹைகோர்ட்டுக் கட்டடத்தில் தஞ்சம் புகுந்து விடுவான். அது கூடத் திருட்டுத்தனமாகத்தான்! குட்டு வெளிப்பட்டு விட்டால் காவல்காரன் நெட்டித் தள்ளி விடுவானே! அன்று காலையிலும் வழக்கம் போலக் கொத்தவால்சாவடி மார்க்கெட்டிலே தான் நின்றுகொண்டிருந்தான் அவன். அங்காடிக் கடைக்காரர்களும், சில்லறை வியாபாரிகளும் சரக்குகளை வாங்கிக் கைவண்டிகளில், நிரப்பிக்கொண்டிருந்தார்கள். பாவம், சின்னசாமி! ஒரு கிராக்கி கூட அவனுக்குப் படியவில்லை. உள்ளம் தளர்வுற்ற அந்த நேரத்திலேதான், ''கோட்டை

டேசனுக்கு வர்றியா ஐயா? எம்மாந் துட்டு கேக்கறே?'' என்ற சொற்கள் அவனது செவிகளிலே இன்ப நாதம் பாய்ச்சின. அவனது இதயத்தில் யாரோ ஒரு பவுண்டு ஐஸ் கட்டியை முழுசாகத் தூக்கி வைத்தது போலிருந்தது. அந்தக் குரலுக்குச் சொந்தக்காரி அங்காடிக்கார அழகி அங்கம்மா தான். இரண்டு மூன்று கூடைக் காய்கறிகளை வைத்துக் கொண்டு தூக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த அவளது அழைப்பு கருணைக் கடலான கடவுளின் அழைப்பாகத் தோன்றியது அவனுக்கு! மறு பேச்சு பேச வில்லை. இயந்திரம் போலக் கூடைகளை ரிக்ஷாவிலே ஏற்றி வைத்து, '' ம், ஏறி உக்காரு அம்மா!'' என்று அன்புக் கட்டளை பிறப்பித்தான். அடுத்த கணம் சென்னை நகரின் நெருக்கடி மிகுந்த பிராட்வே சாலையில், ரிக்ஷாவைப் பற்றிய வண்ணம் வெகு வாகவமாக ஓடிக் கொண்டிருந்தான் சின்னசாமி.

தாம்பரம் போகும் மின்சார ரயிலிலே அங்கம்மாவையும், கூடைகளையும் பத்திரமாக ஏற்றி விட்டான். '' போயிட்டு வாரேன். இந்தா..'' என்று கூறிய வண்ணம் அவனது ஏந்திய கரங்களிலே அவள் விட்டெறிந்த எட்டணா நாணயம் அவனைப் பார்த்துச் சிரித்தது. பெருமூச்சு விட்டபடியே நாயர் கடையை நோக்கி நடந்தான் அவன்.

இப்படித்தான் அவர்களுக்குள் ஆரம்பத்தில் பழக்கம் ஏற்பட்டது. தொடர்ந்து அவளுக்குச் சின்னசாமியின் ரிக்ஷாவிலேதான் தினசரி சவாரி. இருவருக்கும் இதில் இனம் புரியாத ஒரு இனிமை! அவள் பரங்கி மலைக்குப் பக்கத்திலிருந்த ஒரு கிராமத்தைச் சேர்ந்தவள். தன் பாட்டியின் ஆதரவில் வாழ்ந்து வந்த அவள் தினசரி அதிகாலையில் கோட்டைக்கு வந்து கொத்தவால்சாவடியில் காய்கறி வாங்கிக் கொண்டு போய் மாம்பலத்தில் விற்பனை செய்வாள். இதுதான் அவளது பிழைப்பு. இந்தச் சொற்ப வருமானத்தில் அவளும் அவள் பாட்டியும் நாளை ஓட்டியாகவேண்டும்.

அவளுக்கு அவன் மீது ஒரு கண். இடையிடையே ஏதாவது குறும்பாகப் பேசி அவன் வாயைக் கிண்டுவாள். பதில் எதுவும் பேசாமல் இலேசாகச் சிரித்துக் கொள்வான் சின்னசாமி. அவள் பேச்சே அவனுக்கு அமுதமாக இனித்தது. அவன் எப்போதாவது தப்பித் தவறி வாய் திறந்து விட்டால் அவள் பேசா மடந்தையாகி விடுவாள்! அவளது சின்ன வயசும், சொகுசு நடையும், சொக்க வைக்கும் விழிகளும், சுந்தர முகமும் அவனது நெஞ்சத்தைக் கவ்வி போட்டு இழுத்தன. அள்ளிச் சொருகிய அழகுக் கொண்டையில் குண்டு மல்லிகை மணக்க, வெற்றிலையை மாதுளை வாயில் குதப்பிக் கொண்டு, குவிந்த உதட்டிலே குறுஞ் சிரிப்பு மிதக்க அன்ன நடை நடந்து வரும் அவளைப் பார்க்கும்போதெல்லாம் அவன் உள்ளம் அலை மோதும். புண்பட்ட பேதை நெஞ்சம் பெருமூச்சு ஒன்றை நெட்டித் தள்ளும். '' எந்தப் புண்ணியவான் கொடுத்து வைச்சிருக்கானோ..'' என்று உதடுகள் முணுமுணுக்கும்.

இப்படி ஏங்கிக் கொண்டிருந்த அவனுக்கு அவள் ஒரு நாள் சொன்ன செய்தி திக்குமுக்காட வைத்தது. அவளும் அவனை விரும்புகிறாளாம்! என்ன இன்பமான செய்தி! அவள் சொன்ன அடுத்த விஷயம்தான் அவனைச் சிறிது திகைக்க வைத்தது. அவளை இன்னும் இரண்டொரு மாதங்களுக்குள் அவன் தன் உடைமையாகச் செய்து கொண்டு விட வேண்டும். இல்லா விட்டால் அந்தப் பொல்லாத பாட்டி அவளை வேறு யாருக்காவது கொடுத்து விடுவதாக இருக்கிறாள்.

அரவிந்தர் காணிக்கை

ஸ்ரீ அரவிந்தர் வங்கப் புரட்சியின் தந்தை. திலகர் இந்திய விடுதலை இயக்கத்தின் கர்த்தா. ஆகையால் அரவிந்தர் திலகரின் மேதாவிலாஸத்தைப் பாராட்டுவது ஆழ்ந்த கவனத்துக் குரியது. அரவிந்தர் கூறுகிறார்:

''திலகரின் மேதை பலதரப்பட்டது. அதன் சிறப்புகள் சாதாரணமானவையல்ல. அவர் ஈடுபட்ட துறைகளில் எதில் ஆழ்ந்த கவனம் செலுத்தியிருந்தாலும் அழியாப் புகழ் பெற்றிருக்கலாம். அவர் வக்கீலாகத் தொழில் நடத்தா விட்டாலும் சட்டத்திலே அவருக்குள்ள ஆழ்ந்த ஞானமும் நுண்ணிய அறிவும் சொல்லத்தரமன்று. அவர் விரும்பியிருந்தால் வக்கீல்களுள் முன்னணிக்கு வந்து ஏராளமான பொருளீட்டியிருக்கலாம். இலக்கியத் துறையில் இடையறாது பற்றுக்கொண்டிருந்தால், மிகுந்த கியாதி யடைந்திருக்கலாம். அப்படி முழு நேரமும் செலவிடாமலேயே அவருடைய '' ஓரியன் '', '' ஆரியர்களின் ஆர்க்டிக் வாசஸ்தலம் '' என்ற நூல்களின் மூலம் உலகப் புகழ் பெற்றதுமின்றிக் கீழ்த்திசை ஆராய்ச்சித் துறையில் நிரந்தர இடமும் பெற்று விட்டார். கீதை பற்றிய அவர் நூல் வெறும் வியாக்கியானமல்ல. அது பற்றிய உயர்தர குணதோஷ விமர்சனம். அதன் மூலம் பல அறநெறி உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். மராத்தி பாஷையில் உரைநடைத் துறையில் அது மகத்தான இலக்கியம். அது பெரிய இலக்கியமாகத் திகழக்கூடிய சிறப்பு நிறைந்தது. ஆனால் இலக்கியத் துறையில் தமது முழு நேரத்தையும் அவர் செலவிட்டிருந்தாரானால் மராத்தி இலக்கிய வரலாற்றில் ஒரு உன்னத ஸ்தானத்தை அடைந்திருப்பார். ஆனால் ஆண்டவன் அவருக்கிட்ட பணியில் அவர் சதாகாலமும் ஈடுபட்டிருந்ததால் வேறு துறைகளில் அவர் கவனம் செலுத்துவது இயலாமற் போய் விட்டது.''

ஆனால் பணம்....அவனை மணக்கப் பணம் வேண்டும் என்ற நினைவு இலேசாக அரும்பிய போது, அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

தனது ஏகபோக மூலதனமான உழைப்பின் மீது தளராத நம்பிக்கை வைத்து அயராது உழைத்துப் பொருள் ஈட்டவேண்டும் என்பது தான் அந்த நல்ல முடிவு.

இரவு ஒன்பது மணி. சைனாபஜாரில் திறந்திருந்த ஒன்றிரண்டு கடைகளையும் வியாபாரிகள் மூட ஆரம்பித்தார்கள். சட்டக் கல்லூரியின் ஓரமாக உள்ள பிள்ளையாருக்குப் பக்கத்தில் சிலை போல் உட்கார்ந்து கொண்டிருந்த சின்னசாமி சோர்வுடன் எழுந்து ரிக்ஷாவோடு நடந்தான்.

தன்னை மறந்து சென்று கொண்டிருந்த அவனை "ஏய், ரிக்ஷா!" என்ற சொற்கள் தடுத்து நிறுத்தின. தன்னையறியாமலே திரும்பிப் பார்த்தான். இருள் போர்த்தாகக் கிடந்த சந்திலிருந்து நடுத்தர வயதுள்ள ஒருவன் பரபரப்புடன் வந்து கொண்டிருந்தான். எதுவும் பேசாமல் ரிக்ஷாவில் உட்கார்ந்து கொண்ட அவன், "பாரிஸ்" என்று மட்டும் கட்டைக் குரலில் முணுமுணுத்தான். ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு இயந்திரம் போல, "பாரிஸ் கார்னரை" நோக்கி ஓடினான் சின்னசாமி.

அவன் ஒரு மைல் தூரம்கூடக் கடந்திருக்க மாட்டான். பின்னாலிருந்து ஓடி வந்த லாரியின் சத்தம் காதைத் துளைத்தது. சாலை ஓரமாக ரிக்ஷாவை ஒதுக்கினான். அதற்குள் "ஏய், வண்டியை நிறுத்து!" என்று அந்த மனிதன் திடீர் என்று உத்தரவு போட்டான். ரிக்ஷா சரியாகக் கூட நிற்கவில்லை. அதற்குள் அவசரப்பட்டுக் குதித்தே விட்டஅவன், சின்னசாமியிடம் ஒரு ரூபாய் நோட்டு ஒன்றைத் திணித்து விட்டு இருளில் மறைந்தான். நீராக ஊற்றிய வியர்வையைத் துடைத்த வண்ணம் அந்த ஒற்றை நோட்டை உற்றுப் பார்த்தான் சின்னசாமி. நெஞ்சம் பட படத்தது. வேகமாக ஓடி வந்ததனால் ஏற்பட்டதல்ல, அந்தப் பட படப்பு! முழுசாக ஒரு ரூபாய் நோட்டைக் கையிலே கண்டு விட்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சிப் படபடப்பு அது!! அது அடங்கக் கூட இல்லை. பின்னால் வந்து கொண்டிருந்த லாரி ரிக்ஷாவை மோதப்போவது போல வந்து ஒரு உறுமல் உறுமி விட்டுப் பக்கத்தில் வந்து நின்றது.

அகலத் திறந்த கண்களிலே ஆச்சரியம் வழியத் திரும்பிப் பார்த்தான் சின்னசாமி. சிவப்புத் தொப்பி அணிந்த நாலைந்து பேர்கள் லாரியிலிருந்து குதித்தார்கள். அவர்களிலே ஒருவர் சின்னசாமியைப் பிடித்துக் கொண்டார். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எதிரில் இருந்த விளக்குக் கம்பத்தின் நிழல் தூக்கு மரம் போல ஆடியது. "டேய் இப்ப உன் வண்டியிலே வந்தானே கேடி ரத்தினம், அவன் எங்கேடா?" என்று உறுமினார் ஒரு போலீஸ்காரர். சின்னசாமியின் தலை சுற்றியது. "எனக்கு அந்த மனிதரு யாருன்னு கூடத் தெரியாதே, ஐயா!" என்றான்.

"டேய், பொய்யா சொல்லறே?" அடுத்த விநாடி வலுவான கரமொன்று அவனது கன்னத்தைப் பதம் பார்த்தது. உடலெங்கும் நல்ல அடி. "ஐயோ..அம்மா.." என்ற சொற்கள் அடி தாங்காத அவனிடமிருந்து விம்மிச் சோகமாக ஒலித்தன.

ரிக்ஷாவைச் சோதனையிட்டுக்கொண்டிருந்த இன்னொருவர் 'இதோ' என்று கத்திய வண்ணம், சீட்டுக்கு அடியில் கிடந்த தோல்பை ஒன்றை வெளியே இழுத்தார்! பொன்னும் பொருளும், ஆபரணமும் அணிகளுமாக அதிலே கிடந்தவைகள் விளக்கு வெளிச்சத்தில் பளிச்சிட்டன.

"ஐயோ, இதெல்லாம் என்னுங்க? எனக்கு ஒண்ணுமே புரியல்லியே!" என்று அலறினான் சின்னசாமி. அந்த அப்பாவிக் குரலுக்கு அங்கே மதிப்பு ஏது? "நட போலீஸ் ஸ்டேஷனுக்கு! அங்கே வந்து உன் ஒப்பாரியை வச்சுக்கோ" என்று கூறி ஒரு போலீஸ்காரர் சின்னசாமியைத் தள்ளிக்கொண்டு போனார்.

"நாம் என்ன குற்றம் செய்தோம்?" என்று அவன் மனத்துக்குள் சிந்தித்துப் பார்த்தான். ஒன்றுமே புரியவில்லை! இது மட்டுமா?



அப்புறம் நடந்தவை கூட என்ன என்று புரியவில்லை. "கேடி ரத்தினம் என்பவனோடு கொள்ளையடிக்க உடந்தையாக இருந்ததாகவும், திருட்டுப்பொருள்களை வைத்திருந்ததாகவும் சின்னசாமி மீது நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. கண்களிலே கண்ணீர் மிதக்கக் குற்றவாளிக் கூண்டிலே நின்றான் அவன். அவனால் கூற முடிந்ததெல்லாம், "ஐயோ, சாமி! நான் ஏழைங்க! எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்க! என்னை வுட்டுடுங்க" என்பதுதான். அவன் பேச்சை யார் கேட்கிறார்கள்? அவனுக்கு ஆறு மாசம் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது.

* * *

சிறை வாழ்க்கையில் ஆறு மாதங்களும் அலை போல உருண்டு விட்டன. நேற்றுத்தான் பாழும் சிறையிலிருந்து அவனுக்கு விடுதலை. அங்கே வேலை செய்ததற்குக் கூலியாகப் பத்துப் பதினைந்து ரூபாய்ப் பணத்தையும், "ஒரு முறை சிறை சென்றவன்" என்ற தீராப் பழியையும் அவனுக்குக் கொடுத்து அனுப்பி வைத்தனர் அதிகாரிகள்.

திலகரும் சமூக சீர்திருத்தமும்

சமூக பழக்க வழக்கங்களில் தீவிர மாறுதல்கள் ஏற்பட வேண்டுமென்பதே திலகர் கருத்து. தீண்டாமையை அறவே அகற்ற விரும்பினார். ஹிந்துக்கள் கடல் கடந்து பிரயாணம் செய்யலாகாது என்னும் கொள்கையை எதிர்த்துத் தாமே பிரிட்டனுக்குச் சென்றார். நாற்பது வயதிற்கு மேற்பட்ட ஆடவர்கள் மணம்புரிந்து கொள்ள விரும்பினால் அவர்கள் கைம்பெண்களையே கலியாணம் செய்து கொள்ள வேண்டும் எனப் பிரசாரம் செய்தார். **ஆனால் சமூக அமைப்பையோ பழக்க வழக்கங்களையோ மாற்றச் சர்க்கார் சட்ட மியற்றலாகாது எனத் தீவிரமாக வாதாடினார்.**

சின்னசாமியின் சோகம் தெறிக்கும் வாழ்வுக் கதை இதுதான்.

இப்போது அவனது மனத்தில் ஒரே உணர்ச்சிக் கொந்தளிப்பு : மகிழ்ச்சி ஆரவாரம். விடுதலை பெற்று விட்டது மட்டுமல்ல இதற்குக் காரணம். நினைவில் நீங்காது நர்த்தனம் புரியும் காதலியின் அழகுத் திருமுகத்தைப் பார்க்கப் போகிறோம் என்பதனால் எழுந்த இதய தாளம் அது. அவள் எப்படியும் தனக்காகக் காத்திருப்பாள் என்று இதய பூர்வமாக அவன் நம்பினான். இந்த நம்பிக்கையைச் செயலுருவில் காணத்தான் அவன் இப்போது போய்க் கொண்டிருக்கிறான்.

கல்லையும், முள்ளையும், காட்டையும், மேட்டையும் தாண்டித் தொலைவை நோக்கி ஓடிக் கொண்டிருந்த ரயில் கிரீச்சிட்டு நின்றது. அதன் உசும்பலிலே சின்னசாமியின் சிந்தனை அறுந்து விழுந்தது. ஜன்னலைத் திறந்து கொண்டு ஆவலுடன் வெளியே பார்த்தான். பெயர் தெரியாத பட்டிக்காட்டு ஸ்டேஷன் ஒன்றில் ரயில் நின்று கொண்டிருந்தது. அவனது உள்ளத்தைப் போலவே வண்டியின் முதலில் இருந்த எஞ்சினிலும் புகைச்சல். தூரத்திலே தெரிந்த கிழக்குக் கோடியில், பூமியை அடி வானம் அள்ளி அணைத்துக் கொள்ளும் அந்த இடத்தில் காலைக் கதிரவனின் மோகன ஒளி கம்பீரமாகக் கிளம்பிக் கொண்டிருந்தது.

வண்டியில் கூட்டமே இல்லை. சராயும் சட்டையும் அணிந்த நாகரிக வாலிபனொருவன் ஒரு கோடியில் உள்ள வண்டிப் படிகளில் நின்றபடி சிகரெட்டை ஊதிக் கொண்டிருந்தான். சின்னசாமி இருந்த இடத்திலிருந்து நாலைந்து பெஞ்சுகள் தாண்டி ஒரு வயோதிகத் தம்பதிகளும், இரண்டு மூன்று குழந்தைகளும் உட்கார்ந்திருந்தார்கள். சின்னசாமிக்கு எதிரில் இன்னொரு ஆள் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். அவ்வளவுதான் ; இவர்களைத் தவிர வண்டியின் அந்தப் பெட்டியில் வேறு யாரும் இல்லை.

வண்டி மெதுவாக நகர்ந்தது. அப்போது வண்டியின் ஒரு பக்கக் கதவைத் திறந்து கொண்டு இரண்டு பேர்கள் ஏறினார்கள். அதேநேரத்தில் மற்றொரு கோடிக் கதவருகில் நின்றிருந்த நாகரிக வாலிபன் ஓடும் ரயிலிலிருந்து "டபக்" கென்று குதித்தான். இதற்குள் வண்டியின் வேகம் பூரணமாக அதிகரித்து விட்டது. ஓடும் வண்டியில் தொற்றிக் கொண்ட அந்த இரண்டு பேர்களும் சின்னசாமிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு வண்டி முழுவதும் எதையோ தேடிப் பார்த்தனர்.

சின்னசாமியின் தலைக்கு மேல் படுக்குமிடத்தில் இருந்த அட்டைப் பெட்டியைப் பார்த்ததும், "அந்தப் பெட்டி யாருடையது?" என்று கேட்டு அங்கு நிலவிய அமைதியைக் குலைத்தான் அவர்களில் ஒருவன். "பக்கத்தில் உள்ள துணி மூட்டைதான் என்னுடையது. பெட்டி யாருடையதோ தெரியவில்லை" என்ற வண்ணம் துணி மூட்டையை இழுத்துக் கொண்டான் சின்னசாமி.

சின்னசாமியை உற்றுப் பார்த்த வண்ணம் ஒருவன் அட்டைப் பெட்டியைப் பிரித்தான். அதிலே ஏழெட்டுக் கண்ணாடி புட்டிகள். எல்லாவற்றிலும் ஏதோ ஒரு வித சிவப்பு நிறத் திரவம். ஒன்றின் மூடியை இலேசாகத் திறந்தான் ஒருவன். அதிலிருந்து பொங்கி யெழுந்த மணம் மூக்கைப் பிய்த்தது. "ம்....இந்தப் பெட்டி உன்னுடையதில்லையா ?" என்றான் இரட்டையர்களிலே ஒருவன். குரலிலே மீற முடியாத அழுத்தம் தொனித்தது. "அது என்னுடையது இல்லிங்க" என்றான் சின்னசாமி மறுபடியும்.

"சரி. நீ யாரு ?"

"எனக்குச் சொந்த ஊரு பட்டணம். இப்பத்தான் ஜெயில்லேருந்து.." அவன் தான் கூற வந்ததைச் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் 'ஹ ஹ ஹா' என்று எழுந்த அவர்களின் பேய்ச் சிரிப்பு அவனைத் திகைக்க வைத்தது. உடல் புல்லரிக்கச் சிறிது தைரியமாகவே தலை தூக்கி நிமிர்ந்து பார்த்தான் அவன்.

"ஐயா பள்ளிக்கூடம் போய்ப் பழக்கப்பட்ட ஆளுதான் போலே இருக்கு ! பார்த்தாலே புரியல்லே ?"

ஊசிக் காற்று வெடிப்பது போல் தொடர்ந்தது அந்தச் சிரிப்பொலி. கள்ளச் சாராயத்தையும், அதனைக் காய்ச்சிய குற்றவாளியையும் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்ட மகிழ்ச்சி இந்த இரண்டு மதுவிலக்குப் போலீஸ்காரர்களின் கெக்கலிச் சிரிப்பிலே எக்காளமிட்டது.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி வழக்கம் போல நின்று விட்டுக் கிளம்பியது. ஆனால் சின்னசாமி அதில் பிரயாணம் செய்யவில்லை. அதற்குப் பதிலாக அந்தக் கள்ளச் சாராயக் குற்றவாளியாகச் சின்னசாமி உலர்ந்த உள்ளத்தோடு, தலை குனிந்து, தள்ளாடியபடியே அந்த இரு போலீஸ்காரர்களுக்கும் மத்தியில் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான் ! அங்கம்மாவைக் காண வேண்டும் என்று அவனது கட்டு மீறிய ஆவலைத் தகர்த்தெறிந்து விட்ட விதியை நொந்தவாறு நிராசையுடன் நடந்தான்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor : T. Sadasivam


ஹிமாலயா
புக்கே
அளிக்கும் மிகுந்த
புதுமைப் பொலிவை
– நீங்கள்
நாள் முழுதும்
உணரலாம்!
Himalaya Bouquet
ஹிமாலயா
புக்கே
டாய்லெட், டால்கம்
பவுடர்கள்
HBP. 14-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

